கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(16.09.2018 - 16 புரட்டாதி 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 192, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018

தேசிய மறைக்கல்வி தினம் – 16.09.2018



# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

# புனித யோசேவ்வாஸ் தனது பணியை சிறப்பாக நிறைவேற்ற திருச்சிலுவையே உதவியது.

புனித யோசேவ்வாஸின் திருச்சிலுவையை நாடெங்கும் கொண்டு செல்லும் திருப்பயணம் ஆரம்பிக்கப்பட்டு முதல் கட்டமாக மஹாகல்கமுவையிலிருந்து எடுத்துச் சென்று நீர்கொழும்பு கொச்சிக்கடை தூய ஆவியின் ஆலயத்தில் உத்தியோகபூர்வமாக வரவேற்கப்பட்டு, வழிபாடுகள் நடைபெற்றது.

திருச்சிலுவையை ஏற்று வரவேற்ற வழிபாட்டில் துணை ஆயர்

## கத்தோலிக்க விசுவாசிகளுக்கான ஓர் முக்கிய அறிவித்தல்

நீர்கொழும்பு வீதியில் 20மைல் தூரத்தில் அமைந்துள்ள “Certain Lalith Aponso” எனப்படும் ஆலயத்தினைப் போன்ற கட்டிடமானது கத்தோலிக்கத் திருச்சபைக்கு உரித்தான ஆலயம் இல்லை எனக் கவனத்திற்கு கொள்ளவும். அதில் இடம்பெறும் ஞாயிறு தின வழிபாடுகளும், எம் கத்தோலிக்க திருச்சபையின் வழிபாடுகளுக்கு அமையாதவை ஆகும். அத்துடன் அவ் வழிபாடுகளுக்கு தலைமைத் தாங்குபவர் கத்தோலிக்கத் திருச்சபையின் கோட்பாடுகளுக்கும், குருத்துவ, ஆயத்துவ திருநிலைப்படுத்தலின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக் கூடியவரோ, திருத்தந்தையின் ஆணைக்கிணங்க இயங்குகின்றவரோ இல்லை. மேலும் அவர் பயன்படுத்தும் உடைகள் எம் திருவழிபாட்டு முறையில் அடங்காதவை என தெளிவாக விளங்கிக் கொள்ளவும்.

**அதிவண. அருட்பணி. கிஸ்வான் டீ குருஸ்**
**ஆயரின் பதிலாளர், நீர்கொழும்பு**

## கிறிஸ்தவத் திருமணத்தின் பொறுப்பதிகாரி இறைவனாம் ஆண்டவரே

“கிறிஸ்தவ திருமணத்தில் இறைவன் கணவன், மனைவியை தனது திட்டத்திற்கேற்பவே இணைக்கின்றார். இதற்கு பொறுப்பானவரும் இறைவனாம் ஆண்டவரே” என்று கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கடந்த வாரம் கொழும்பு மருதானைப் புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற இந்தியாவின் டிவைன் ஞானஒடுக்க நடுநிலையத்தின் இயக்குனர் அருட்பணி, ஒகஸ்டீன் வள்ளுரன் அவர்களின் தலைமையில் நடந்த கிறிஸ்தவ குடும்ப நிகழ்வின்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..



# இவ்வுலகில் எம்மைப் பெற்றெடுத்த நம் தாயை விட தேவ அன்னை எம்மை அன்பு செய்கிறார்.



## காலி மறைமாவட்ட ஆயர் மாத்தறையில் தெரிவித்தார்.

“எம்மை இவ்வுலகத்தில் பிறக்கவைத்து, வளர்க்கும் தாயை விட, அளப்பரிய விதத்தில் அன்பு செய்து அரவணைக்கும் நம் அன்னையாக தேவதாய் இருப்பனாலேயே திருச்சபையும், அவ்அன்னையை எம் அனைவரின் தாய் என பரிசளித்துள்ளது.” என கடந்த ஞாயிறு தினத்தில் மாத்தறை அன்னையின் வருடாந்த திருவிழாத் திருப்பலியின் மறையுரையின் போது காலி மறைமாவட்ட மேதகு ஆயர் ரேமன்ட் விக்ரமசிங்க ஆண்டகை அவர்கள் இக்கருத்துக்களைத் தெரிவித்தார்.

மேலும், ஆயர் தனது மறையுரையில், “இவ்வுலகில் இலௌகீக செல்வங்கள் இருப்பினும் அதன் மூலம் முழுமையான மகிழ்ச்சி கிடைப்பதில்லை. மகிழ்ச்சி ஏற்படினும் அது தற்காலிகமானதாகவே இருக்கும். என்னுடைய மகிழ்ச்சி நிலைத்திருப்பது இறைவனிடத்திலேயே ஆகும். நாம் எமது பாவ நிலையிலிருந்து விலகி, மனம் வருந்தி எம் இறைவனைத் தேடிச் செல்ல எமக்கு என்றும் வழிகாட்டுபவர் எம் தேவ அன்னையே. திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு நோயல்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## செத்சரன மற்றும் கரிடாஸ் நிறுவனத்தின் நல்லிணக்க நிகழ்வு

கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் செத்சரன மற்றும் கரிடாஸ் நிறுவனத்தின் சமாதானம் தொடர்பான பிரிவின் மூலம் ஏற்பாடு செய்த இனங்களுக்கு இடையிலான சமாதனம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நிகழ்ச்சியின் அடிப்படையில் ஆடிஅம்பலம் பங்கின் புனித செபமாலை இராக்கியினியின் ஆலய பங்குமக்களுடன் செத்சரன சமாதானக் குழுவின் உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து கடந்த தினங்களில் மன்னார் மறைவாவட்டத்தில் பாலைக்குளி கிராமத்தில் இரண்டு நாட்கள் பயணம் மேற்கொண்டு தங்கியிருந்தனர். அத்துடன்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..



## செபமாலைத் தாசர் சபையின் புதிய மாகாணத் தலைவர்

அருட்தந்தை பிரான்சிஸ் ஜெயசீலன் அடிகளார் இலங்கையின் செபமாலைத் தாசர் சபையின் புதிய மாகாணத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரின் ஆலோசகர்களாக அருட்பணி. A.M. ஸ்ரீபன் அடிகளார், அருட்பணி...



தொடர்ச்சி 15ம் பக்கம்..

**எம் நாட்டின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் சமயப் பாடநெறியை கற்பிப்பதற்கான ஆசிரியர்களின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை ஆசிரியச் சேவையின் 3 – IIம் தரத்திற்கான தர்மாச்சார்ய பரீட்சையில் (பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் நடாத்தப்பட்ட) சித்தியடைந்தவர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்தப்போட்டிப் பரீட்சை – 2018**

## தர்மாச்சார்ய பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான திறந்தப் போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பிக்குமாறு 2018..8.31ம் திகதி வெள்ளிக்கிழமை, இலக்கம் 2,086 வர்த்தமானிப் பத்திரிகையில் அறிவிக்கப்பட்டது.

விண்ணப்பங்களை 2018.09.28ம் திகதிக்கு முன், **"பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல -1503, கொழும்பு."** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலின் மூலம் அனுப்பி வைக்கவும்.

வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலை வாசித்து, மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் அல்லது கத்தோலிக்க கல்விப் பணியகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**கத்தோலிக்க கல்விப் பணியகம்,**
**ஆயர் இல்லம், கொழும்பு 08.**
**தொலைபேசி. இல 011-2699129**

**ஆண்டவரின் நியமனங்கள் சரியானவை இதயத்தை மகிழ்விக்கின்றன (தி.பா 19)**



வெள்ளவத்தை புனித லோரன்ஸ் ஆலயத்தில் தேவதாயின் பிறந்தநாளை சிறப்பிக்கும் முகமாக 08.09.2018 அன்று மாலை விசேட திருப்பலி பங்குத்தந்தையால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் பின் பங்குமக்கள் தேவதாயின் பிறந்தநாளை முன்னிட்டு கேக் வெட்டி கொண்டாடினார்கள்.

**தகவல் : S.B. டேவிட்**



கொழும்பு டிலாசால் கல்லூரியின் பழைய மாணவரான திருவாளர் மேஜர் ஜெனரல் அதுல கலகமவை பாடசாலையின் கௌரவிப்பு விழாவில் கல்லூரியின் பிரதி அதிபர் ஷெராட் ஜயவர்த்தனா வரவேற்பதையும் கல்லூரியின் அதிபர் அருகில் நிற்பதையும் காணலாம்.

**தகவல் : ரணில் பெரேரா**

# இயேசுகிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தப் பெருவிழா – 09.09.2018





இராஜகிரிய திருஇருதய நாதர் ஆலயத்தில் 2018.09.09 ஞாயிறு அன்று "நற்கருணை" பெருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. அன்றைய தினம் நாள் முழுவதும் திருமணித்தியாலங்கள் தியானிக்கப்பட்டது. மாலை 4.30 மணிக்கு பங்குத்தந்தை அன்சலம் பொன்சேக்கா, உதவிப்பங்குத்தந்தை மைக்கல் சந்தானம் அடிகளார், அருட்பணி பொன்சியன் ஆகியோருடனும் விசேடவிதமாக கொழும்பு கத்தோலிக்க அச்சக பொறுப்பாளர் அருட்பணி. கலாநிதி. கெமிலஸ் நிஷால் பர்னாந்து அடிகளாரும் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். அருட்பணி. கெமிலஸ் பர்னாந்து அடிகளார் தமது மறையுரையில் இயேசு தனது உடலையும், இரத்தத்தையும் எமக்காக கையளித்து தனது உச்சக்கட்ட அன்னை நற்கருணை வழியாக வெளிப்படுத்தினார். இயேசுவின் அன்பானது சுயநலமற்ற பிரதிபலன் எதிர்பாராத தூய்மையான அன்பாகும். நாம் அனேகமாக அன்பு செய்பவர்களையே அன்பு செய்கின்றோம். அதாவது குடும்பம், உறவினர் எமக்கு உதவி செய்வோர், உதவியை எதிர்பார்க்கும் நபர் ஆகியோர் அடங்குவர்... தொடர்ச்சி 15ம் பக்கம்..

## இரத்தினபுரி பேராலயத்திற்கு வாழ்த்தி வரவேற்கின்றோம்.



இரத்தினபுரி பேராலயத்திற்கு உதவிகுருவானவராக புதிய குருவானவர் அருட்பணி. மரிய ஜோய் அடிகளாரை அன்புடன் வாழ்த்தி வரவேற்கின்றோம். அடிகளார் இதற்கு முன்னர் பலாங்கொடை பங்கில் உதவிபங்குத்தந்தையாக... தொடர்ச்சி 15ம் பக்கம்..

## முதல்நற்கருணை மாணவர்கள் பெற்றோருக்கான தியானம்.



திருஇருதயநாதர் ஆலயம் இராஜகிரிய முதல்நற்கருணை பெறும் மாணவர்களுக்கான "தியானம்" 2018. 08. 22 அன்று "சுப்புவத்ரண"யில் நடைபெற்றது. இதில் மாணவ மாணவிகளும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். இத்தியானத்தை எமது உதவிப்பங்குத் தந்தை மைக்கல் சந்தானம் அடிகளாரும், அருட்பணி. ரவிகாந்த் அடிகளாரும் வழிநடத்தினர். பெற்றோருடன் கலந்துரையாடல் சிறப்பம்சமாக இடம்பெற்றது. ஈற்றில் மாணவர்கள் பெற்றோர்கள் ஒப்புரவு அருட்சாதனத்தையும் பெற்றுக்கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**தகவல் : கிறிஸ்டினா அன்ரன், இராஜகிரிய.**

## முதல்நற்கருணை திருஇருதயநாதர் ஆலயம், இராஜகிரிய



கடந்த 2018.9.2 அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி திருப்பலியில் முதன் முதலாக இயேசுவின் திரு உடலையும், திரு இரத்தத்தையும் சிறுவர்கள் பெற்றுக்கொண்டார்கள். அன்றைய திருப்பலியை எமது உதவிபங்குத்தந்தை அருட்பணி. மைக்கல் சந்தானம் அடிகளார் ஒப்புக்கொடுத்தார். மேலும் அருட்பணி. ரவிகாந் (கிளரிஷன்) அடிகளாரும் திருப்பலியை சிறப்பித்தார்கள்.

**தகவல் : கிறிஸ்டினா அன்ரன், இராஜகிரிய.**

# மன்னாரில் இரண்டு கூத்து நாடக நூல்களின் வெளியீட்டு விழா







வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இரண்டு கூத்து நாடக நூல்களின் வெளியீட்டு விழா கடந்த மாதம் (25.08.2018) உயிலங்குளம் றோ.க.த. பாடசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின்போது மன்னார் மாவட்டத்தின் பறப்பாங்கண்டல் கிராமத்தில் மேடையேற்றப்படும் "சந்திரகாசன் நாடகம்" என்ற மூன்று இரவுக் கூத்து மற்றும் காத்தான்குளம் கிராமத்தில் மேடையேற்றப்படும் "மரிகருதாள் நாடகம்" என்ற ஓர் இரவுக் கூத்து ஆகிய இரண்டு நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமாகாண முதன்மைச் செயலாளர் திரு. அ. பத்திநாதன் அவர்கள் கலந்துகொண்டார். மன்னார் பிரதேசச் செயலாளர் திரு. ம. பரமதாசன் அவர்கள் இந்நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். இந்நிகழ்வில் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் நூல்களை அறிமுகம் செய்து சிறப்புரையாற்றினார்.

**தகவல் : அருட்பணி. தமிழ்நேசன் அடிகள்.**

## இரத்தினபுரி மறைமாவட்டத்தின் குடும்ப நல கருத்தரங்கு.



இரத்தினபுரி மறைமாவட்டமானது 2018ம் நடப்பாண்டை குடும்பத்தின் ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது. 2020ம் ஆண்டில் தனது இருபத்தைந்தாவது யூபிலி ஆண்டை மிகவும் விமரிசையாக, கோலாகலமாக கொண்டாட வேண்டுமென்ற நோக்கில் இந்த குடும்ப ஆண்டை அர்த்தமுள்ள ஆண்டாக பயன்படுத்தி வாழ குடும்பங்களை வளமுள்ளதாக்க பங்கு ரீதியாக ஒவ்வொரு பங்கிலும்.... தொடர்ச்சி 15ம் பக்கம்..







கொழும்பு செக்கடித்தெரு புனித அன்னம்மாள் பங்கில் புனித வேளாங்கண்ணி ஆலயத்தின் வருடாந்த திருவிழா 07.09.2018 அன்று வெள்ளிக்கிழமை காலை திருப்பலிக்குப் பின் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து ஒன்பது நாள்களும் நவநாட்களும் திருப்பலியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 08.09.2018 அன்று சனிக்கிழமை அன்னையின் பிறந்தநாள் வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது. 16.09.2018 அன்று... தொடர்ச்சி 15ம் பக்கம்..

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
16 புரட்டாதி, 2018 ஞாயிற்றுக்கிழமை.

## விதைக்கப்பட்ட இறைவார்த்தை எனும் விதை வளர "மறைக்கல்வி" பணி அவசியமானதாகும்.

இம்மாதம் தேசிய மறைக்கல்வி தினத்தை எமது திருச்சபை கொண்டாடுகின்றது. திருச்சபைக்கு ஆணிவேராக இருப்பதுதான் மறைக்கல்வி. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் தாய் திருச்சபையின் முக்கியமான பணி இயேசுவின் நற்செய்தியை எல்லா மக்களுக்கும் அறிவிப்பதும் அறிந்தவர்களின் விசுவாசத்தை திடப்படுத்துவதுமாகும். விதை விதைப்பது ஒரு பணியென்றால் முளைத்துவரும் செடிகளை, வளர்ந்து நிற்கும் மரங்களை கண்காணித்து அதைப் பேணி வளர்ப்பதும் முக்கிய பணியாகும். விதைக்கப்பட்ட இறைவார்த்தை எனும் விதை வளர "மறைக்கல்வி" பணி அவசியமானதாகும்.

இம்மகத்தான பணியை இயேசு தாமே தம் பணிவாழ்வில் செய்து எடுத்துக்காட்டாக அமைகிறார். "அவர் கலிலேயா பகுதி முழுவதும் சுற்றி வந்தார். தொழுகைக் கூடங்களில் கற்பித்தார். விண்ணரசு பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றினார். மக்களிடையே இருந்த நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார்." தாம் விரும்பிய பன்னிருவரை தம்மிடம் வரவழைத்து தம்மோடு தங்கவைத்து இறைவார்த்தையைக் கற்பித்தார். அவர்களும் இயேசுவின் வழிசென்று அவரை பின்பற்றி வாழ்ந்தனர்.

கிறிஸ்தவ மறைக்கல்வி என்பது கட்டளைகளையும் போதனைகளையும் கோட்பாடுகளையும் நியமங்களையும் மட்டும் வலியுறுத்துவது கிடையாது. மறைக்கல்வியின் அடிப்படை நோக்கம் "இயேசுகிறிஸ்து என்ற கடவுளின் மகனோடு ஆழமான உறவை கட்டி எழுப்புவதாகும்." பரிசுத்த ஆவியானவரின் வழியாக பரம தந்தையோடு ஆன்மீக வாழ்வை வாழவும், பிறரை அன்பு செய்யவும், அன்பில் உலகைக் கட்டி எழுப்பவும் கற்றுக்கொடுக்கும் சாதனம்தான் மறைக்கல்வி. எல்லா சூழ்நிலைகளிலும் கிறிஸ்துவுக்கு சாட்சி பகரும் வாழ்க்கை வாழ்ந்திட உதவும் நிலையில் மறைக்கல்வி என்பது ஒரு குறிப்பிட்ட வயது வரைதான் என்றில்லாமல் மனித வாழ்வில் மறைக்கல்வியானது வாழ்நாள் முழுவதும் தொடரும் வாழ்க்கைக் கல்வியாகும். இது மனிதரில் முழு மனமாற்றத்தை ஏற்படுத்தி மறு கிறிஸ்துவை உருவாக்கிட வழிசெய்கின்றது.

மறைக்கல்வியின் வழியாக இறைவனின் படைப்பைப் பற்றிய கண்ணோட்டமே பரிசுத்தப்படுத்தப்படுகின்றது. அவர் படைத்த அனைத்துமே "நல்லது" என்று உணரும் கண்ணோட்டமாக மாறுகின்றது. கிறிஸ்தவர்கள் மறைக்கல்வியின் வழியாக தங்கள் மதிப்பீடுகளை நன்கு புரிந்து கொள்கின்றார்கள். கடவுளுக்குரிய உன்னத இடத்தை கடவுளுக்கு கொடுக்கின்றார்கள். இறை குடும்பத்தில் ஆன்மீக முதிர்ச்சி பெற்ற நபர்களாக எல்லா நல்ல காரியங்களிலும் ஆன்மீக சமூக சேவைகளில் பங்கெடுக்கும் உறுப்பினர்களாக மாற்றுகின்றது. இறைவனுக்கும் மனிதர்களுக்கும் ஏற்றவர்களாக வாழ உதவுகின்றது. மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டான ஒரு பெருந்தன்மையான வாழ்க்கை வாழ கற்றுக் கொடுக்கின்றது. மூவொரு கடவுளுடன் இணைந்து வாழும் வாழ்க்கையாக அவர்கள் வாழ்க்கையை மாற்றுகின்றது. செப வாழ்விலும் புனிதமான இறைவழிபாட்டிலும் ஞானத்தோடும் பக்தியோடும் ஊக்கத்தோடும் கனி தரும் வகையில் பங்கேற்க கற்றுக்கொடுக்கின்றது.

மறைக்கல்வி என்பது சிறுவர்களுக்கும் இளையவர்களுக்கும் முதியவர்களுக்கும் விசுவாச வாழ்விற்கான ஒரு பயிற்சியாகும். "விசுவாச வளர்ச்சியையும் கிறிஸ்தவ வாழ்வின் முதிர்ச்சியையும் பேணி வளர்ப்பதே. மறைக்கல்வியின் பணி". எனவே மறைக்கல்வி அனைவருக்கும் சரியாக போதிக்கப்படவேண்டும். அவ்வாறு போதிக்கப்படாத திருச்சபை செயலற்று போகும். இயேசுவின் இறையரசு விழுமியங்கள் கற்பிக்கப்படாத இறைமக்கள் இறையாட்சிக்கு எதிராக செயற்பட வாய்ப்புண்டு. ஆகவே இயேசுவை வாய்ப்பு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் கற்பித்துக்கொண்டே இருப்பது நமது அனைவரினதும் தலையாய கடமையும் பொறுப்பும் என்பதை உணர வேண்டும். நாம் கொடுக்கும் மறைக்கல்வி பிள்ளைகளிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்திட வேண்டும். நாளைய சமூகமானது இறையாட்சியின் சமூகமாக மலர்ந்திட வேண்டும். சிறுவர் மறைக்கல்வி முதன்மையானது. அது கட்டாயப்படுத்தப்படவேண்டும். இளையோர் மறைக்கல்வி தேவையானது. அது நெறிப்படுத்தப்படவேண்டும். முதியோர் மறைக்கல்வி அவசியமானது. அது வளர்த்தெடுக்கப்படவேண்டும். அனைவருக்கும் மறைக்கல்வி அவசியமானது. அது நடைமுறைப்படுத்தப்படவேண்டும். ஆக மறைக்கல்வியை கட்டாயமாக்கி அனைவரையும் இயேசுவின் சீடர்களாக மாற்றுவோம்.

**இறையாசீருடன் ஆசிரியர்**



# மறைக்கல்வி

பவுலின் மறைக்கல்வி ஆர்வமும் வேகமும் நமதாகட்டும். நலமான திருச்சபை உருவாகட்டும்.

**கருவறை முதல் கல்லறை வரை நடைபெறும் தொடர்கல்வி.**

**நற்பண்புகளை இதயத்துக்குள் நட்டு வளர்க்கும் உருவாக்கல்கல்வி**

### உடல், உள்ளம், ஆன்மா அனைத்தையும் இயேசுவைப் போல் உருவாக்குவோம்.

அவர்.....

3 ஆண்டுகள் பணிக்காக 30 ஆண்டுகள் உருவாக்கப்பட்டார்.

இயேசுவின் உருவாக்கத்தையே புனித பவுலும் தன் வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டார்.

இயேசுவிலே இறை நம்பிக்கை கொண்டார். தனது வாழ்க்கை முறையை இறை மனித உறவுக்குள் வளர்த்தார். அன்றாட வாழ்க்கைச் சூழலில் படிப்படியாக இயேசுவை அறிவித்தார். அதற்கு அவருக்கு உதவியது மறைக்கல்வி.

### பவுலின் வாழ்க்கையைச் செதுக்கிய உளி மறைக்கல்வி உளிதான்.

மெசியா சிலுவையில் அறையப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாத தீவிர யூதராக இருந்தவர். திருச்சட்டத்தைத் தாண்டி நம்பிக்கையினால் மீட்பு கிடைக்க முடியும் என்பதை ஏற்க முடியாத தீவிர யூதராக இருந்தவர். கிறிஸ்தவர்கள் பிரிவினைவாதிகள், கிளர்ச்சியாளர்கள் தப்பறைக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர் என்று கூறி அவர்களை முற்றிலும் அழித்தொழிக்க வெறியோடு செயல்பட்டவர். இவர் பின்பு மறைக்கல்வியாளராக மாறுகிறார்.

### பவுலுக்கு தமஸ்கு அனுபவம். சிறந்த மறைக்கல்வி அனுபவம். அங்கே எதைக் கற்றுக்கொண்டார்?

கிறிஸ்துவின் மீது நம்பிக்கைக்கொள்ளக் கற்றுக்கொண்டார். நற்செய்தி அறிவிப்புப் பணியால் மறைக்கல்வியாளராக மாறுகின்றார். எல்லாருக்கும் மறைக்கல்வி அறிவிக்க எதையும் இழக்கத் தயாராகிறார். அந்த அனுபவம் மூலம் அவரது இறைநம்பிக்கை படிப்படியாக வளர்ந்தது.

**சந்தித்தார் (Encounter)**
**அறிந்தார் (Knowledge)**
**ஏற்றார் (Acceptance)**
**மனமாறினார் (Conversion)**
**அர்ப்பணித்தார் (Commitment)**

### நற்செய்தி அறிவிப்புப் பணி. சிறந்த மறைக்கல்விப் பணி.

பவுலின் நற்செய்தி அறிவிப்புப் பயணங்கள் ஒவ்வொன்றுமே மறைக்கல்விப் பயணங்களே. அப்படியானால்... இரண்டாவது பயணத்தில் மட்டுமே தரை மற்றும் கடல் வழியாக 3557 கி.மீ பயணம் செய்திருக்கிறார். வீட்டிலிருந்து பங்கில் நடக்கும் மறைக்கல்வி வகுப்புக்களுக்குச் செல்வதற்குக் கூட இன்று பலருக்கு கால் கடுக்கிறது. பவுலின் மறைக்கல்விப் பயணம் நமக்கு பாடமாகட்டும்.

மறைக்கல்வி புதுப்பித்தலின் முக்கியத்துவத்தைப் பவுல் உணர்ந்து வைத்திருந்ததால் இறைநம்பிக்கையில் தளர்வுற்ற இடங்களுக்குச் சென்று சந்திக்கிறார். ஊக்கப்படுத்துகின்றார். **"உங்களைக் காண நான் மிகுந்த ஏக்கமாய் இருந்தேன். உங்களிடம் வரமிகுந்த ஆவல் கொண்டிருந்தேன்"** என்று குறிப்பிடுகிறார். பல மட்டங்களில் சந்திப்புக் குழுக்கள் மறைக்கல்விப் பணியைச் சீர்படுத்த தேவை என்பதைக் கற்றுத் தருகின்றார்.

### இனி வாழ்பவன் நானல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார். (கலா 2:20)

என்று கூறுவதன் மூலம் மறைக்கல்வி என்பது இறைவனில் வாழ்வது என்பதைக் கற்றுத் தருகிறார். **"கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்"** என்பதன் மூலம் கிறிஸ்துவின் மனநிலையில் வாழக் கற்றுத்தருகின்றார். **"உங்களில் கிறிஸ்து உருவாகும் வரை பேறுகால வேதனையுறுகிறேன்"** என்று கூறுவதன் மூலம் கிறிஸ்துவாக உருவாக அழைக்கின்றார்.

### மாபெரும் மறைக்கல்விப் பணிநோக்கில் அனைத்தையும் இழந்தவர்.

- தர்சு நகரை இழந்தவர்
- தாய், தந்தையை இழந்தவர்
- உரோமைக் குடியுரிமையை இழந்தவர்
- அறிவாளி என்ற பெருமையை இழந்தவர்.

ஆகவே!

**மறைக்கல்விப் பணியாற்ற நாம் எவற்றை இழந்திருக்கின்றோம்? சிந்திப்போம்.**

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# தேசிய மறைக்கல்வி தினம் – 16.09.2018

## “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்”

தேசிய மறைக்கல்வி தினத்தை முன்னிட்டு விசேட செய்தி எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையில் கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் வழிகாட்டலில் அனைத்து மறைமாவட்டங்களிலும், பங்குகளிலும் மறைக்கல்விப் பணிகள் மிகவும் ஆர்வத்தோடும் அர்ப்பணிப்போடும் நடைமுறைப்படுத்தப்படுவதை நாம் அவதானிக்கலாம்.

“உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்” என்ற நமதாண்டவரின் பணிப்பை ஏற்று அன்று இயேசுவின் சீடர்கள் தமது பணியை ஆரம்பித்தார்கள். இயேசுவை அறியாதவர்களுக்கு நற்செய்தி முழக்கம், இயேசுவை அறிந்து, ஏற்றுக் கொண்டு திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவர்களுக்கு மறைக்கல்வி என பல சவால்களுக்கும் முகம்கொடுத்து இவர்கள் இப்பணியைச் செய்தார்கள். வார்த்தையால் மட்டுமல்ல தமது சான்று நிறைந்த வாழ்வாலும் வேதசாட்சிய மரணத்தினாலும் இவர்கள் தமது போதனையைத் தொடர்ந்தார்கள். இவ்வாறு உலகெங்கும் திரு அவை விருட்சமாக வளர்ந்துள்ளது.

இன்று உலகம் தரக்கூடிய சவால்கள் மத்தியில் மக்களை விசுவாசத்தில் வளர்ப்பதென்பது இலகுவாக விடயமல்ல. அதேவேளை திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கத்தோலிக்கருக்கும் அவரவர் வயதிற்கேற்ப திருமறையைக் கற்பிப்பதும் கத்தோலிக்க விசுவாசத்தில் வளர்ப்பதும் நற்பண்புகளை வாழ்ந்துகாட்ட வைப்பதும் எமது கடமையாகும். இது ஓர் கூட்டுமுயற்சியாகும். ஒரு குழந்தையின் பிறப்பிலிருந்து பெற்றோர் அதற்குத் தமது வாழ்வினால் அன்பையும் நம்பிக்கையையும் கற்றுக் கொடுக்கின்றார்கள். தொடர்ந்து பெற்றோருக்குத் துணையாக ஞானப்பெற்றோர், உற்றார், உறவினர் செயல்படுகின்றார்கள். பின் பங்குச் சமூகம் - குருவானவர், துறவற சபை அங்கத்தவர்கள், மறையாசிரீயர்கள் என பலரும் இதில் பங்கேற்கின்றார்கள். மொத்தத்தில் இது ஒரு கூட்டுமுயற்சி.

நாம் தேசியமறைக்கல்வி தினத்தை சிறப்பிக்கும்போது எம் அனைவரின விசுவாசப் பயணத்தில் எமது பங்களிப்பு என்ன எனும் உணர்வையும் தெளிவையும் ஏற்படுத்துகின்றோம். ஆயர் மன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட தேசிய மறைக்கல்வி ஆணைக்குழுவின் தலைவர் அதிவந்தனைக்குரிய ஆயர் மக்ஸ்வல் சில்வா, உபதலைவர், ஆயர் மன்றத்தினால் நியமிக்கப்பட்ட தேசிய மறைக்கல்வி ஆணைக்குழு இயக்குனர், மறைமாவட்ட இயக்குனர்கள், பங்குத்தளங்களில் மறையாசிரியர்கள், மறைக்கல்வி நிலையப் பணியாளர்களென பலரும் இப்பணியில் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்படுகின்றார்கள்.

விசுவாசிகளின் ஆன்மீக வாழ்வில் அதிக அக்கறை கொள்ளும் எமது தாய் திருஅவை இதுபோன்ற கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. ஆயினும் இப்பணி இவர்களுக்கு மட்டுமே உரியது என நாம் இருந்துவிடாது பெற்றோர், ஞானப்பெற்றோர், உறவினர், ஆன்மீக வழிகாட்டிகள், பங்குக் குரு, துறவற அங்கத்தவர்கள் என அனைவருக்குமான பொறுப்பு என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். இக்காலத்தில் தேசிய மறைக்கல்வி தினத்தை சிறப்பிக்க பங்குமட்டங்களில் பங்குத் தந்தையர்களும், மறையாசிரியர்களும், மறைக்கல்விப் பிள்ளைகளும் பெற்றோரும் உற்சாகத்தோடு செயல்படுவார்கள் என நம்புகின்றேன்.

மறைக்கல்விப் பணியில் நாம் எல்லோரும் ஏதோவொரு வகையில் ஈடுபடுகின்றோம். ஆயினும் இப்பணியில் நேரடியாக சம்பந்தப்படும் பங்குத் தந்தையர்கள், மறையாசிரியர்கள், மறைக்கல்வி நிலைய பணியாளர்களை நாம் பெரிதும் வாழ்த்தி, பாராட்டி, நன்றி கூறுகின்றோம். இவர்கள் தமது பணி தொடர இறைவன் வேண்டிய ஆசீரைக் கொடுக்க வேண்டுமென செபித்து முடிக்கிறேன்.



மேதகு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல், திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.

## ‘எமது மந்தைகளை மறையினால் போஷிப்போம்’



மேதகு. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை
கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர்.

### தேசிய மறைக்கல்வி தினத்தை முன்னிட்டு தேசிய மறைக்கல்வி – ஆணைக்குழு தலைவரின் செய்தி

“எமது மந்தைகளை மறையினால் போஷிப்போம்” இவ்வருடம் தேசிய மறைக்கல்வி ஞாயிறு தினத்தின் கருப்பொருளாய் அமைவது “எனது மந்தைகளை பேணி வளர்” என்ற நம் ஆண்டவரின் வார்த்தையாகும். திருமுழுக்கின் மூலம் நற்செய்திக்கு சான்று பகர்ந்து வாழ வேண்டிய சிறப்பான அழைப்பைப் பெற்றுள்ள நாம் அனைவரும் நமது நல்லாயனின் குரலை அறிந்து, உணர்ந்து, அவரைப் பின்தொடர்ந்து சென்று பசும்புல் தரைக்கும் நீரோடைக்கும் தமது மந்தைகளை அழைத்துச் செல்ல வேண்டும். மறையாசிரியர் என்ற ரீதியில் எமது முக்கிய நோக்கம், நற்செய்தியின் மறைத்தூதுப் பணியாளர்களாக, உலகின் ஒளியாக, உப்பாக, காரமாக வாழ வேண்டும் என்பதாகும்.

“நல்ல ஆயன் நானே. நல்லாயன் தனது ஆடுகளுக்காக தனது உயிரைக் கொடுப்பார்” (யோவா 10:11). இங்கே இயேசு தன்னை ஆயனாகவும் தனது மக்களை ஆடுகளாகவும் குறிப்பிடுகிறார். தனது ஆடுகள் தனது குரலுக்குச் செவி சாய்ப்பதாகவும் தனக்கு அவற்றைத் தெரியும் எனவும் அவை தன்னைப் பின் தொடர்வதாகவும் கூறுகிறார் (யோவா 10:27)

நாம் அனைவரும் அவரை அறிந்திருக்கின்றோம். அவ்வாறே ஆடுகளும் தமது ஆயரின் குரலை அறிந்திருக்கின்றன. அவருக்கு செவிசாய்க்கின்றன. (யோவா 10:3,16:27).

ஆயனின் குரலை மந்தைகள் நன்கு அறிந்திருப்பதன் காரணம் ஆயன் தனது முழு நேரத்தையும் மந்தைகளுடன் கழிப்பதனாலாகும். மறைப்பணியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் இன்று இந்த மாபெரும் பொறுப்பு உள்ளது. திருமுழுக்கின் மூலம் ஆயர்த்துவ அழைப்பைப் பெற்றுள்ள நாம் இன்றைய கால கட்டத்தில் ஆயனாகிய நாம் ஆண்டவரின் மந்தைகளுக்கு பொறுப்பாயுள்ள நம் கிறிஸ்துவை - கிறிஸ்துவாகிய ஆயனை பின்பற்ற வேண்டுமென இறைவார்த்தை - திருச்சபை மரபு - திருச்பையின் படிப்பினைகள் ஆகியன எம்மை அழைக்கின்றன.

ஆகவே இந்த பொறுப்பை நிறைவேற்றுவதற்கு - உண்மை தலைவரான யேசு தனது வாழ்வின் முன்மாதிரிகையின் மூலம் எம் அனைவரையும் தன்னை பலியாக தரும் அன்பு நிறைந்த ஆயனாவதற்கு அழைக்கின்றார்.

சிதறியிருப்போரை ஒன்று சேர்க்கவும் வழிதவறிச் சென்ற மந்தைகளைத் தமது மந்தையில் கொண்டு சேர்ப்பதற்கும் துணிவான, பொறுப்பான ஆயனாக செயலாற்றும் மறைப் பணியாளனாகின்ற சிறப்பான பணி ஒவ்வொரு கிறிஸ்தவனும், குறிப்பாக விசேஷ அழைப்பை பெற்றுள்ள ஒவ்வொரு மறையாசிரியருக்கும் தரப்பட்டுள்ளது.

எமது திருத்தந்தை உலக ஆயர் மன்றத்தின் வெளியீட்டில் குறிப்பிட்டுள்ளதன்படி எதிர்வரும் வருடங்களில் திருச்சபையின் பயணத்திற்கு புதிய வழியை வெளிப்படுத்தி இயேசுவை அறிந்து அனைவரினதும் இதயங்களை நற்செய்தியில் மகிழ்ச்சியால் நிரப்புவதற்கு பணியாற்ற வேண்டும். மறையை உலகில் வளர்ப்பதற்காக உழைக்கும் மறையாசிரியர் அனைவருக்கும் இறை ஆசீர் கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

## நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்த நிகழ்வுடன் உலகத்தின் ஆரம்பம் இறைவனால் தொடங்கப்பட்டது என்பது கிறிஸ்தவர்களாகிய எமது நம்பிக்கையாகும் (தொ.நூல் 1:2).



## தேசிய மறைக்கல்வி இயக்குனரின் செய்தி

அருட்பணி. பியால் ஜானக்க

# குடும்பத்தில் ஆயர்த்துவப் பணி

அழகிய உலகைப் படைத்த பின்னர் அந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதற்கு இறைவன் தனது சாயலாக, தன்னால் படைக்கப்பட்ட மனித குடும்பத்தையே தேர்ந்தெடுத்தார் என்பதற்கு திருவிவிலியம் சான்று பகர்கின்றது. இதனால் திரு விவிலியத்தின் ஆரம்பம் குடும்பம் என கூறலாம்.

இங்கே மனிதனுடன் ஆண்டவர் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை முக்கிய இடத்தை வகிக்கின்றது. குடும்பம் ஒரு சமூக ஒன்றியமாகும். பழைய ஏற்பாட்டில் சமூக ஒன்றியம் என்பது ஒரு நகரமோ, ஒரு ஊரோ அல்லது ஒரு தனிப்பட்ட நபரோ அல்ல. அது ஒரு குடும்பம் ஆகும். மனித உறவுகள் மட்டில் ஆண்டவரின் முக்கியத்துவமும் குடும்பத்திற்கே அளிக்கப்பட்டுள்ளது. முதல் குடும்பமாகிய ஆதாம் - ஏவாளின் உறவு இதற்கு ஆதாரமாக உள்ளது.

திருச்சபையிலே திருமணம், குடும்ப வாழ்க்கை பற்றிய படிப்பினைகள் திருவிவிலியத்தில் காணப்படும் இறைவார்த்தையில் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது. எனவே திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை, மறைக்கல்வியுடன் இணைக்கப்பட்டுள்ளது. குடும்பத்தில் உருவாகின்ற பிள்ளைகளுக்கு மாதிரிகைகளாக இருப்பவர்கள் - தலைமையானவர்களாக இருப்பவர்கள் பெற்றோராவர்.

அன்றைய சமூகத்திலே இருந்த மறைசார்ந்த சுற்றாடல், ஒழுக்கம், ஆகியவற்றின் மூலம் வெளிப்பட்ட மறைக்கல்வியானது தவறற்ற ஒரு வழியாகும். பண்டைய சமூக பின்னணியில் குடும்பத்தைக் கட்டியெழுப்பும் திருமணம், இறைவாக்கினர் படிப்பினையில் ஒரு மேன்மையான உடன்படிக்கை என விளக்கப்பட்டது. அதனை முறித்தல் என்பது இறைவனுடனான உறவை இல்லாதொழித்தல் ஆகும். இதன்படி குடும்பத்தின் தலைவர் தனது பொறுப்புகள், உரிமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கான சரியான வழி காட்டுதல் குடும்பம் என்ற ஒன்றியத்திற்கு மறைக்கல்வி மூலம் கிடைக்கின்றது.

மேலும் திருமணம் மனித செயற்பாடு மட்டுமல்ல அது இறை செயற்பாடுமாகும். திருமணம் - குடும்ப ஒன்றியம் இறைவனுடன் இணைந்திருப்பதாக மலாக்கி இறைவாக்கினர் கூறுகிறார். குடும்பத்திலே பெற்றோர், பிள்ளைகளுக்கு வழிகாட்டுபவர்களாக இருக்கின்றனர். பிள்ளைகள் தனிப்பட்ட ரீதியில் - சமூகமாக வளர்ச்சி பெறுவதற்கு, இறைவனை - மனிதரை அன்பு செய்வதற்கு, மதிப்பளிப்பதற்கு ஏற்ற சூழலை உருவாக்க வேண்டியவர்கள் பெற்றோராவர். பிள்ளைகளுக்கு மறையை தமது சொல்லால் செயலால் அளிக்க வேண்டும்.

புதிய ஏற்பாட்டிலே இறைவனின் அன்பு குடும்பத்தில் செயற்படுவதை பார்க்கின்றோம். ஆகவே மனிதன் அந்த அன்பை தனது குடும்பத்தில் பகிர்ந்து கொள்கின்றான். இயேசு இவ்வுலகிலே வாழும்போது விண்ணரசைப் பற்றி மக்களுக்கு போதித்து கிறிஸ்தவ குடும்பத்தை உருவாக்குவதற்கு பலவிதத்திலும் முயற்சிகளை மேற்கொண்டார்.

இன்றைய உலகிலே மறைக்கல்வியின்பால் எமது கவனத்தை செலுத்தும்போது குடும்ப வாழ்வில் அதன் செயற்பாடு முக்கியமானதாகவும் முதலாவதாகவும் இருக்கிறது. நாம் மனிதனாக பிறந்தது, மனிதத்துவத்தை செயற்படுத்துவற்காகவே என லியோ டோல்ஸ் டோய் என்பவர் தனது (war peace) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். வார்த்தையால், செயலால் நடத்தையால் உண்மையான மனிதத்துவத்தை குடும்பத்தில் பெற்றுக்கொள்வது மறைக்கல்வியினாலாகும். கிறிஸ்தவன் தனது வாழ்விலே ஆண்டவருடன் நெருங்கி வாழும் வழியைத் தேடுகிறான். அது நம்பிக்கையின் செயற்பாடாகும்.

நம்பிக்கை, கிறிஸ்தவ வாழ்வின் வெற்றி ஆகியவற்றுக்கு மறைக்கல்வியினால் புதிய வலிமை கிடைப்பதாக திருத்தந்தை இரண்டாம் அருள்ப்பர் சின்னப்பர் "கதகேசி த்ராதெந்தே" என்ற சுற்றுமடலில் விளக்குகிறார். குடும்பத்தின் அடிப்படை உரிமைகள், குடும்பத்தின் நியதி ஆகியவற்றை விளங்கிக் கொள்வதற்கு தடையாக இருக்கும் பாவத்தை அடிப்படையாகக் கொண்ட அநீதிக்கு எதிராக நாம் செயற்பட வேண்டும்.

இதற்கான வழி - குடும்பத்திலிருந்து சமூகத்திற்கு இதனைக் கொண்டு செல்லும் வழி, மறைக்கல்வியாகும். ஆகவே இதன்போது இறைவனை அறிந்து கொள்ளுதல், இறைவனுக்கு பிரதி அன்பு காட்டுதல், இறை சித்தத்தை நிறைவேற்றுதல் ஆகியனவற்றை மனித குடும்ப ஒன்றியத்தித்திலிருந்து பெற்றுக்கொள்ளும் வழி மறைக்கல்வியாகும். இவ்வாறு பார்க்கும்போது குடும்பத்துடன் மறைக்கல்வி இணைந்து பயணிக்கின்றது.

கிறிஸ்தவ குடும்பம் "மறைக்கல்வியிலிருந்து பெற்றுக்கொள்ளும் உதவியின் அடிப்படையில் நம்பிக்கையாகிய விதை பெரிதாக வளர்ந்து இருப்பினும் அனைத்து தடைகளிலும் தடுமாற்றமடையாது ஒரு உறுதியான மரமாக மாறுவதற்கு தேவையான அறிவை மறைகல்வியிலிருந்து பெற்றுக்கொள்கிறது".

இறுதியாக, இறைவன் எமக்குத் தந்த நற்செய்தியை உலகெங்கும் பரப்பும் பாரிய பொறுப்பைத் திருச்சபைக்கு அளித்துள்ளார். எனவே எமது நாட்டிலே சிறிய கிறிஸ்தவ ஒன்றியமாகிய குடும்பத்தை ஒன்றிணைத்து மறைபணியில் பங்கு கொண்டு திருச்சபையின் வளர்ச்சியில் பணியாற்றி திருச்சபையில் புத்தெழுச்சியை தோற்றுவிப்பதில் கவனத்தை செலுத்துவோம்.

# "என் ஆடுகளைப் பேணி வளர்".



அருட்சகோதரி ரஞ்சி போல்துரை,
தேசிய மறைகல்வி நடுநிலையம்

இன்று தேசிய மறைக்கல்வி தினமாகும். "என் ஆடுகளைப் பேணி வளர்" என்ற நம் ஆண்டவரின் வேண்டுகோளை சிரமேற்கொண்டு இறைவார்த்தையின் பணியாளர்களாய், விவிலிய திருப்பணி - மறைக்கல்வி பணி ஆற்றும் என் அன்பு மறையாசியர்களே, உங்களின் இந்த உயரிய - தன்னலமற்ற - அர்ப்பணம் கலந்த மறைப்பணியை முன்னிட்டு முதன்மையும் மேன்மையுமானவருமான முதல் மறையாசிரியர் இயேசுவின் பெயரால் உங்களை நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

நல்லாயனாகிய இயேசு இன்று தனது இந்த நல்லாயனுக்குரிய செயற்பாட்டை நாமும் ஆற்ற வேண்டும் என்பதற்காக "என் ஆடுகளைப் பேணி வளர்" என்று கூறி இப்பணிக்காக மறையாசியர்களாகிய உங்கள் ஒவ்வொருவரையும் அழைத்துள்ளார்.

வழமையாக ஆட்டு மந்தைகளின் ஆயர் தனது மந்தைகளின் மட்டில் மிகவும் அன்பாக செயலாற்றுகின்றார். அதிக அக்கறையோடு வழிநடத்திச் செல்கின்றார். எந்த தீங்கும் மந்தைகளுக்கு ஏற்படுவதற்கு இடமளிக்க மாட்டார். பசும்புல் தரைக்கும் நீரோடைக்கும் அவைகளை இட்டுச் செல்வார். அவைகளை வழிநடத்துகின்றார். அவற்றிற்காக தன் உயிரையும் கூட அளிப்பதற்கு அவர் தயங்குவதில்லை என்பவற்றை யோவா 10:1-17ல் பார்க்கிறோம். மறையாசியர்கள் அனைவரும் தம்மிடம் மறைக்கல்வி கற்பதற்காக வரும் மாணவர்களுக்கு நல்லாயர்களே. மறைக்கல்வி திருச்சபையின் வாழ்விலும் பணியிலும் முக்கியமானதொரு இடத்தைக் கொண்டுள்ளது. திருமுழுக்குப் பெற்றுள்ள அனைவரையும் மறைக்கல்வியானது நம்பிக்கை வாழ்வில் ஆழப்படுத்துகின்றது, உறுதிப்படுத்துகின்றது.

இந்த நம்பிக்கை என்பது வாழ்விலே முதிர்ச்சியைக் கொண்டு வருகிறது. இந்த நம்பிக்கையானது அன்றாட வாழ்வின் பயிற்சியாகும். பிறப்பு முதல் இறப்புவரை இப்பயிற்சி தொடர்கின்றது. இந்த நம்பிக்கையாகிய இணைப்பிலே நல்லாயனாக செயற்படும் மறையாசியர்களின் பணி நல்லாயன் இயேசுவின் பணியைத் தொடர்கின்றது. இன்று மறைக்கல்வியானது கிறிஸ்தவர்கள் தங்கள் நம்பிக்கை வாழ்வில் இந்த தொடர் பயிற்சியைப் பெறவும், அதில் வளரவும், வாழவும், உறுதுணையாக உள்ள ஒரு பயிற்சிப் பாசறையாக உருப்பெற்றுள்ளது. இது இன்று திருச்சபையின் வாழ்விலே - பணியிலே முக்கியமான ஒரு இடத்தைக் கொண்டுள்ளது. கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரிலும் கிறிஸ்துவைப் பதியச் செய்து அவர்கள் இன்னொரு கிறிஸ்துவாக வாழ வழிகாட்டுவதும் மறைகல்வியே. ஆகவே இது நம்பிக்கையின் போதனையாகும். கிறிஸ்தவ கோட்டுபாடுகளையும் சிறுவர், இளைஞர், வளர்ந்தோர் ஆகிய அனைத்து தரப்பினருக்கும் பொதுவாக, முறையாக மற்றும் தெளிவாக கற்பித்து கிறிஸ்தவ வாழ்வின் முழுமைக்கு அழைத்துச் செல்லும் நோக்கோடு அளிக்கப்படுகிறது என கத்தோலிக்க திருச்சபை மறைகல்வி நூல் குறிப்பிடுகின்றது.

எனவே மறைக்கல்வியானது, கடவுளின் திருமகனாம் நல்லாயன் இயேசுவில் கிறிஸ்தவர்கள் யாவரும் நம்பிக்கையிலும் ஞானத்திலும் இணைந்து வாழ உதவுகிறது.

இந்த மறைக்கல்வி பணியிலே ஈடுபட்டு தனது நேரம், சிரமம், உழைப்பு ஆகியவற்றையளித்து பணியாற்றும் மறையாசிரியர்கள் இந்த அர்ப்பண வாழ்க்கையிலே ஓர் மாபெரும் மகிழ்ச்சியை, இறையனுபவத்தைப் பெறுகிறார்கள், சுவைக்கிறார்கள். ஞாயிறன்று மறை வகுப்பிலே பணியாற்றுவதற்காக ஓய்வுநாள் என்றும் பாராமல் காலை 5 மணிக்கு எழும்பி காலையுணவு, பகலுணவு ஆகியவற்றைத் தனது குடும்பத்தினருக்காக ஆயத்தம் செய்து வைத்துவிட்டு திருப்பலி, மறைக்கல்வி வகுப்பு, பங்கு மன்ற கூட்டம், இதரக் கூட்டங்கள் என அனைத்திலும் பங்கிலே பங்குபற்றி பங்கின் பணியிலே - பங்கின் மறைப்பணியிலே பங்கு குருவானவருடன் ஒத்துழைத்து அர்ப்பண பணியாற்றும் மறையாசிரியர்களை சந்தித்துள்ளேன். அவர்களின் அர்ப்பண பணிக்காக அவர்களை பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன்.

ஆண்டவர் இயேசு தாம் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை பறைசாற்றினார். இறையாட்சியை நிறுவிட உழைத்தார். நல்லாயனாக வழிகாட்டினார், செயலாற்றினார். தனது சீடர்களும் தனது நற்செய்திப் பணியை - ஆயர்த்துவ செயற்பாட்டைத் தொடர்ந்து ஆற்ற வேண்டுமென இயேசு விரும்பினார். ஆகவேதான் தனது இறுதிக் கட்டளைகளில் "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்"(மாற் 16:15) என்றார். "நம்பிக்கைக் கொண்டோர் அனைவரையும் சீடராக்குங்கள்" (மத் 28:19) என்று தெளிவுபட கூறினார். எனவே நற்செய்தி அறிவிப்பதும், அனைவரையும் சீடராக்குவதும், நல்லாயனான இயேசுவைப் பின்பற்றி மறையாசியர்களாகிய நாம் திருச்சபைக்காக உழைப்பதும், இயேசு தம் மறையுடலாம் திருச்சபைக்குத் தந்த கட்டளை மட்டுமன்று, திருச்சபையின் நல்லாயனின் கடமையுமாகும். ஆகவே எல்லா காரியங்களையும் விட மறைக்கல்விப் பணிக்கு முக்கியத்துவம் அளிப்போம். இயேசுவின் ஆயர்த்துவ பணியில் பங்கேற்கும் இந்த இப்பணியைப் போற்றி பாதுகாத்து அர்ப்பணத்தோடு ஆயனாக செயலாற்றுவோம்.

**மறையாசிரியர்களே உங்கள் அனைவருக்கும் இறையாசீர்.**

# திருமணத்தை வளமூட்டுதல்



## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

161

திருமண வாழ்வின் வெற்றி அல்லது முழுமைக்குத் தேவையான குறிப்புக்களில் கீழ்வரும் குறிப்புகள் முக்கியமானவைகளாகும்.

(அ) தம்பதியினருக்குத் தமது திருமண வாழ்வுக்கு ஓர் எல்லை, தரிசனம் இருக்க வேண்டும்.

(ஆ) அத்தரிசனத்தைத் தமதாக்கிக் கொண்டு, அதைநோக்கிப் பயணம் செய்ய அர்ப்பணம், தீர்மானம் எடுக்க வேண்டும்.

(இ) தாம் இருவரும் எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான திறமைகளையும், சூழலையும் வளர்ப்பதற்காக முயற்சி செய்தல்.

(ஈ) தமது முயற்சி வெற்றியடைய இறைவனது மறைபொருளான வல்லமையைத் தாம் பெறமுடியும் என்பதை விசுவசித்தல்.

கிறிஸ்தவ திருமணம் பற்றிய கண்ணோட்டம் பரி.வேதாகமத்திலும், இரண்டாவது வத்திக்கான் திருச்சங்கத்தின் படிப்பினைகளிலும் கூறப்பட்டுள்ளது. பரி. வேதாகமத்தின் படி திருமணம் என்பது இறைவனது சாயலாகவும், இறைவனுக்குச் சமமானவர்களாகவும் வளர்வதற்காக உள்ள அழைப்பாகும். (ஆதி 1∴26-27). திருமண உறவை கிறிஸ்துவுக்கும் அவரது மணவாட்டியான பரி. திருச்சபைக்கும் உள்ள ஆழமான, அர்ப்பணித்த, பரித்தியாகமுள்ள, உறவுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல திருமணம் இம்மை, மறுமையிலும் அர்த்தமுள்ளதாகும்.

திருமண வாழ்வின் அர்ப்பணத்தைப் பற்றிச் சிந்திக்கும் பொழுது, திருமணத்தின் போது உடன்படிக்கை எடுக்கும் சடங்கில் இருவரும் “ஆம்” என்ற வார்த்தையை உச்சரித்ததன் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். இருவரும் அவ்வேளையில் சுதந்திர விருப்பத்துடன் ஒருவர் ஒருவருக்காகத் தம்மை அர்ப்பணித்ததைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமது திருமணத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டவாறு அதாவது நான் ஏன் திருமணம் முடித்தேன்? என்ற கேள்விக்கு விடை தேடி, அதற்காக அர்ப்பணித்து, அதற்குத் தேவையான திறமைகளையும் சூழலையும் அமைத்துக் கொண்டு வாழ்வது அவர்களது கடமையாகும். இக்கண்ணோட்டத்தோடு, அல்லது அர்ப்பணத்தோடு செயற்படாததன் விளைவாக கணவன் மனைவி உறவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமை அவர்களது வாழ்வில் தெரிகின்றது. முதல் பிள்ளை பிறந்ததும் இந்நிலை மேலும் மோசமாகிறது. தமது திருமண வாழ்வுக்குச் சக்தி தேவை (போசாக்கு) என்பதைப் பலர் புரிந்து கொள்வதில்லை. திருமணம் முடித்ததும் எல்லாம் முடிந்து விட்டது என்ற உணர்வில் பாதுகாப்பு உணர்வு கிடைக்கிறது. ஆனால் உண்மை அதுவல்ல.

குடும்பத்தில் கணவன் மனைவி உறவு முக்கியமாகிறது. இத் தொடர்புக்கு அதிக அவதானம் செலுத்தப்பட வேண்டும். குடும்பத்தில் ஏனைய தொடர்புகள் இதற்கேற்பவே அமைகிறது. கணவன் மனைவி தமது உறவை ஆழமாக்க, சக்தியாக்க, வளர்க்க முதலிடம் கொடுக்க அர்ப்பணித்தால் அது நல்ல பலனைக் கொடுக்கும்.

தொடர்பின், உறவின் ஆரம்பம் சந்திப்பாகும். இவ்வாறு ஆரம்பிக்கும் தொடர்பு, பகிர்ந்து கொள்வதன் மூலமும், கருத்துப் பரிமாற்றத்தின் மூலமும் மேலும் ஆழமாகிறது. தம்பதிகள் தமது உறவை ஆழமாக்குவதற்கு ஒருவர் மற்றவருடன் நல்ல விதத்தில் கருத்துப் பரிமாறுவது எப்படி என்பதை அறிந்து கொள்ள வேண்டும். கருத்துப் பரிமாற்றம் பலனுள்ளதாக இருக்க வேண்டுமானால் அவசரமாகவும், உண்மையாகவும், தெளிவாகவும், (சுருக்கமாக) தொகுப்பானதாகவும் இருக்க வேண்டும்.

உடனடியாக என்பதன் பொருள் தமது தனிப்பட்ட அனுபவம், கருத்து உணர்வுகளை அந்நேரத்தில் பகிரமுடியாதிருந்தாலும் கெட்டித்தனமாகவும், பொருத்தமாகவும், மிகவும் விரைவாகப் பகிர வேண்டும். வெளிப்படுத்த வேண்டும்.

உண்மையாக என்பது முழுமையாக உண்மையறிவது. “ஓரளவு உண்மையாக” அல்லது “பொய்யாக வெளிப்படுத்துவதைவிட வேறுபட்ட நிலை”. கணவன் மனைவி “பொய்யான வார்த்தைகள்” பரிமாறப்படாது இருக்க வேண்டும்.

தெளிவாக என்பது செய்தியைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறுவதாகும். எந்தச் சிக்கலான, ஆழமான செய்தியையும் மிகவும் தெளிவாகவும், இலகுவாக விளங்கும் விதத்திலும் கூறமுடியும். தொகுத்துக் கூறுவது என்பது, கவரும் விதத்தில், விரும்பக்கூடிய விதத்தில் கூறுவது. “குறுக்கு வார்த்தைகளைப்” பாவிக்கும் போது அது சண்டையில் முடிகிறது. அதனால் தொடங்கிய தலைப்பு மாறி வேறு விடயத்தைக் கதைக்கக்கூடும்.

ஆகவே திருமணத் தம்பதியினர் நல்ல விதத்தில் கருத்துக்களைப் பரிமாற வேண்டுமானால் அவர்கள் பயிற்சியும் உதவியும் பெறவேண்டும். எமது நாட்டில் இதற்காக “திருமண சந்திப்பு” என்ற அமைப்புண்டு. வேறு நாடுகளில் “திருமண வளமாக்கலுக்காக கணவன் மனைவி சங்கம்” (A.C.M.E) இதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. அதே போன்று (C.A.M.E.O) “திருமண வளமாக்கல் சங்கங்களின் ஒருங்கிணைப்புச் சங்கம்” போன்றவற்றின் மூலம் பல திருமணத் தம்பதியினருக்கு வளமூட்டப்படுகின்றது. இவற்றின் மூலம் கருத்துப் பரிமாற்றத் திறமையை வளர்த்துக் கொள்ளவும், ஒவ்வொருவரின் நிலைப்பை உறுதிப்படுத்தவும், ஒருவர் ஒருவருக்கு உதவுவதில் வளரவும் முடிகிறது.



இப்படிப்பட்ட பயிற்சிகளால் ஒருவர் மற்றவரை ஸ்திரப்படுத்தும் முறையையும் உற்சாகப்படுத்தும் முறையையும் கற்றுக்கொள்ள முடிகிறது. ஏற்படும் சண்டை சச்சரவைத் தீர்த்துக் கொள்ளும் முறை பற்றியும், கோபத்தை அடக்கி நிர்வகிப்பது பற்றியும், இதற்குச் சமமான வேறு விடயங்களையும் கற்கின்றனர். எமது நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் வாழும் திருமணத் தம்பதியினர் இந்த சொத்துக்களை, திறமைகளை வளர்க்கத் தகுதி பெறுகின்றனர்.

திருமணத்தை வளமாக்குதல் என்பதன் கருத்து இருவரது முழுமைக்காக இருவரும் அன்னியோன்னியமாக உதவுவதாகும். மனிதனது முக்கியமான ஆசை தான் முழுமையடைவதே. இவ்வாறு முழுமையடைவதன் மூலமே மகிழ்ச்சி திருப்தி முழுமையை அடைய முடியும். கணவனும் மனைவியும் இதனை ஊக்கமாகக் கவனித்தால் அவர்களை அறியாமலே முழுமையை நோக்கிச் செல்வர். இவ்வாறு வளர வேண்டுமானால் திருமணத்தில் ஒருவர் மற்றவருக்கு உதவ வேண்டும். இவ்வாறு வளர்வதற்கு எண்ணும் தம்பதியினருக்கு சுய கௌரவத்தைப்பற்றிய உண்மையான உணர்வும், அளவுள்ள, தெளிவான, வளமுள்ள சுய அறிவும், நல்ல மன வளர்ச்சியும், உளவியல் ரீதியான சுயாதீனமும் இருக்க வேண்டும். இவ்வாறு பார்த்தால் குடும்பத்தில் இவைகளை அறிந்துள்ளனரா? என்பது கேள்விக்குறியே...

**தொடரும்**

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**

புரட்டாதி – 05

# அன்னை தெரேசா



அன்னை தெரேசா
அன்பின் தெரேசா
அகதிகளை,
அநாதைகளை,
அரவணைத்த,
அகிலம் போற்றும்
அமைதியின் ரோசா.
துன்புறும் மனிதரில்
இயேசுவைக்கண்ட
இரக்கமான தெரேசா.
ஏழைக்கு உதவும்
இரக்கமான
இயேசுவின்
தாகம் தணித்த
தெரேசா.
சின்னஞ்சிறிய
சகோதரருக்கு
பணி செய்வது
பரிசுத்தர்
இயேசுவுக்கே
என வாழ்ந்த
அன்னை தெரேசா.
பூமி வாழ் மாந்தரை
புன்னகையால்
பாசமாய்ப்
பாதுகாத்த
புனித தெரேசா.
புன்னகையே
அமைதியின்
ஆரம்பம்
என்பதை
உலகிற்கு
அறிவித்த
அன்னை தெரேசா.
மனதை அன்பினால்
அழகாக்கிய அன்னை.
முகம் தானாகவே
அழகான அன்னை.
முதியோரை மகிழ்வோடு
மரியாதையாய்
மதித்த அன்னை.
மனிதருக்காய்,
மனித மாண்புக்காய்,
தன்னை
முற்றிலும்
அர்ப்பணித்த
அன்னை.
ஏழைகள் ஏற்றம் காண
ஏழையாய் உழைத்த
அன்னை.
குழந்தைகளை
கருணையோடு
காத்து வளர்த்த
அன்னை.
கருக்கலைப்பு வேண்டாம்
எனக்கூறிய
காருண்யத்தின்
அன்னை.
வீதியில் வாழ்ந்தோரை
வரவேற்று
வாழ்வு தந்த அன்னை.
அன்புடன்
அனைவரையும்
அரவணைத்து,
உயிருடன் வாழும்
புனிதர் என்று
உயிர் வாழும் போதே
உலகத்தினால்
போற்றப்பட்ட,
வாழ்த்தப்பட்ட,
உத்தம அன்னை.
உன்னத அன்பினால்
காத்திடும் எம்மை
அன்னையே!

**ஆக்கம்:**
**பென்ஜமின் சோமநாதர்.**
**தெஹிவளை.**

# மறைக்கல்வி ஆசிரியர்களே



**மறைக்கல்வி ஆசிரியர்**
**ஆசிரியைகளே,**
**நீங்கள் பேறுபெற்றவர்கள்**
**உங்கள் பெயர்கள் வானகத்தில்**
**பொறிக்கப்பட்டுள்ளன.**

**பாடசாலை ஆசிரியர்கள்**
**பாடத்தோடு பேசுபவர்**
**மாணவரோடு பேசுபவர்**

**மறைக்கல்வி ஆசிரியர் பாடத்தோடு**
**பேசுபவர்,**
**மாணவரோடு பேசுபவர் – மேலாக**
**இறைவனோடும் பேசுபவர்.**



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**பேதுரு**

### பொதுக்காலத்தின் 24வது ஞாயிறு (16.09.2018)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 24வது ஞாயிறு வாரத்தின் முதல் நாளில் இறையாலயம் நோக்கி வந்திருக்கும் திருஅவையின் இறைமக்களே! இன்றைய நற்செய்தியில் இயேசு சீடர்களைப் பார்த்து மக்கள் என்னை யார் என்று சொல்லுகிறார்கள் என்றும் நீங்கள் நான் யார் என்று சொல்லுகிறீர்கள் என்றும் கேள்வி கேட்கின்றார். அதற்கு பேதுரு தெளிவான ஆழமான நிறைவான பதிலை அளிக்கின்றார். இது அவரின் நம்பிக்கையின் வெளிப்பாடாக உள்ளது. ஒருவன் தான் நல்லவன் தீயவன் என்று தன் நாவால் கூறவேண்டியதில்லை. அவனுடைய செயல்பாடுகளே உரக்க கூறிவிடும் ஒவ்வொரு மனிதனும் தான் கொண்ட நம்பிக்கையை கொள்கைப் பிடிப்பை தனது செயல்களின் வாயிலாக எடுத்துக் கூறுகின்றான். நம்பிக்கை செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும் என இரண்டாம் வாசகத்தில் கேட்கின்றோம். இயேசுவின் சீடனாக சீடத்தியாக வாழவிரும்பும் நாமும் அவரது வாழ்வையும் வார்த்தைகளையும் பின்பற்றி வாழ இறையருள் வேண்டுவோமாக

**முதல் வாசகம் : எசாயா 50:5–9**

அடிப்போர்க்கு என் முதுகையும் தாடியை பிடுங்குவோர்க்கு என் தாடையையும் ஒப்புவித்தேன்.

**பதிலுரைப் பாடல் :**

உயிர் வாழ்வோர் நாட்டில் நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்.

**இரண்டாம் வாசகம் : யாக் 2:14–18**

நம்பிக்கை செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாய் இருக்கும்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா! நானோ நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறுஎதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்டமாட்டேன். அதன் வழியாகவே, என்னைப் பொறுத்தவரையில் உலகம் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. உலகைப் பொறுத்தவரையில் நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கின்றேன். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : மாற் 8:27–35**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கடவுள் மீது கொண்ட அளவற்ற நம்பிக்கையினால் சிலுவைச் சாவை ஏற்றுக்கொண்ட இயேசுவை தலைவராக ஏற்று தன் மக்களை நம்பிக்கையின் பாதையில் வழிநடத்தும் திருஅவைக்கும் அதன் ஊழியர்களான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவருக்கும் நிறைவான நம்பிக்கையை வழங்கி வழிநடத்தியருள வேண்டுமென்று...

நாம் கொண்டுள்ள நம்பிக்கை செயல்வடிவம் பெறாவிட்டால் அது தன்னிலே உயிரற்றதாயிருக்கும் என்ற வார்த்தையை உணர்ந்தவர்களாக நம்பிக்கையின் மக்களாக பிறசமூக மக்களுக்கும் எடுத்துக் காட்டான வாழ்வை வாழ்ந்து இறை அனுபவத்தில் நாம் ஒவ்வொரு நாளும் முன்னேற்றம் காணும் நிலையை அடைய அருள்புரிய வேண்டுமென்று...

எமது வாழ்வின் துன்பங்களும் சிலுவைகளும் கடவுளின் விருப்பத்துடன் வருபவை என்பதை உணர்ந்துகொள்ளவும், நம்பிக்கையில் சிறந்து விளங்கவே இவை எமக்கு வருகின்றன என்பதை புரிந்து கொள்ளவும் இயேசுவின் வார்த்தைகளையும் வாழ்வையும் நாமும் பின்பற்றி வாழவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

### பொதுக்காலத்தின் 25வது ஞாயிறு (23.09.2018)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 25வது ஞாயிறு தினத்தில் இறைவனுக்கு நன்றிப்பலி செலுத்த ஒன்றுகூடி வந்திருக்கும் அன்பின் இறைமக்களே! நான் மற்ற மனிதரை விட பெரியவனாக இருக்க வேண்டும் என்ற போட்டிமனப்பான்மை இன்றும் நம் அனைவரையும் ஆட்டிப் படைக்கின்றது. மற்றவரைவிட எனக்கு எல்லாம் தெரியும். நான்தான் உயர்ந்தவன் என்ற எண்ணம் சிறுவர் முதல் வயதான பெரியவர்கள் வரை எல்லாரையும் பாதிக்கும் கொடிய நோய். இந்த நோய் இயேசுவின் சீடர்களையும் விட்டுவைக்கவில்லை. இந்தப் போட்டி மனப்பான்மை தவறானது என்பதை இன்றைய நற்செய்தி வாசகம் சுட்டிக்காட்டுகின்றது. இந்த மனநிலையை அடைய எமக்கு குழந்தை மனம் வேண்டும். ஏனெனில் குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்று சொல்லுவார்கள். எனவே இவ்வுலகில் நல்லவைகள் நடக்க நமக்கு தூய மனம் வேண்டும். அதுவும் பிள்ளை மனம் வேண்டும். இதற்காக இறையருளை வேண்டுவோம்.

**முதல் வாசகம் : சா. ஞா 2:17–20**

இழிவான சாவுக்கு அவர்களைத் தீர்ப்பிடுவோம்.

**பதிலுரைப் பாடல் :**

என் தலைவர் என் வாழ்வுக்கு ஆதரவாய் உள்ளோருடன் இருக்கின்றார்.

**இரண்டாம் வாசகம் : யாக் 3:16–4:3**

அமைதி ஏற்படுத்துவோர் விதைத்த அமைதி என்னும் விதையிலிருந்து நீதியென்னும் கனி விளைகிறது.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மாட்சியை நீங்கள் அடையும் பொருட்டே, நாங்கள் அறிவித்த நற்செய்தியின் வழியாக அவர் உங்களை அழைத்தார். அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மாற் 9:30–37**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசுவுக்கும் இறைமக்களுக்கும் பணிபுரியும் திருஅவையையும் அதனை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினருக்கும் உமது ஞானத்தை நிறைவாய் வழங்கி அவர்கள் தம்பணி வாழ்வில் சிறந்து விளங்க வரமருள வேண்டுமென்று...

முதல்வராக இருப்பவர் பணியாளராக இருக்கட்டும் என்ற இயேசுவின் வார்த்தைக்கேற்ப நமது நாட்டின் அரசியல் சமூகத் தலைவர்களும் சமாதான வழியில் மக்கள் நலப் பணியாற்றவும், உண்மை, நீதி, பிறரன்பு, பகிர்வு, மன்னிப்பு போன்ற நற்பண்புகளை கைக்கொண்டு மக்களுக்கு வழிகாட்டவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

கிறிஸ்தவ மக்களாகிய நாமும் நமக்குள்ளே யார் பெரியவர்? யார் வல்லவர்? யார் நல்லவர் போன்ற எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாமல் குழந்தை உள்ளம் கொண்டவர்களாக ஒருவருக்கொருவர் பணியாளராக மாறி எமது பொறுப்புக்களையும் கடமைகளையும் சரிவர நிறைவேற்ற வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

### பொதுக்காலத்தின் 26வது ஞாயிறு (30.09.2018)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 26வது ஞாயிறு வாரத்தில் கால்பதிக்கும் திருஅவையின் இறைமக்களே! இன்றைய நற்செய்தியில் இயேசு பாவத்தில் புரண்டு கொண்டிருக்கும் மக்களை பாவத்திலிருந்து விடுவித்து விண்ணுலகிற்கு அழைத்துச் செல்ல வழிகாட்டுவதை பார்க்கின்றோம். இன்றைய உலகில் வாழும் பலரும் பாவம் என்ற முட்புதரில் சிக்கித் தவிக்கின்றார்கள். ஒரு பாவத்தை மறைக்க இன்னும் பல பாவங்களை செய்ய முற்படுகின்றார்கள். பாவம் நம்மை இறையுறவில் இருந்து பிரிக்கின்றது. பாவம் என்பது கடவுளின் விருப்பப்படி நாம் நடக்காமல் நமது சுயநலப்போக்கில் நடப்பதாகும். பாவம் செய்தால் கடவுள் நம்மை தண்டிப்பார் என்னும் கருத்து விவிலியத்தில் உள்ளது. ஆனால் கடவுள் நம்மை அன்பு செய்கின்றார் என்பதால் நாம் அவரை அன்பு செய்ய அழைக்கப்படுகின்றோம். பாவம் அன்புக்கு எதிரானது. இதை உணரும் நாம் நமது சுயநல மனப்பான்மையால் நமக்கு நாமே ஏற்படுத்திக்கொண்ட குறுகிய வட்டங்களிலிருந்து விடுபட்டு இறைவனையும் அயலாரையும் அன்பு செய்து வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : எண் 11:25–29**

அனைவருமே இறைவாக்கினராகும்படி ஆண்டவர் அவர்களுக்குத் தம் ஆவியை அளிப்பது எத்துணைச் சிறப்பு.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவரின் நியமங்கள் சரியானவை, இதயத்தை மகிழ்விக்கின்றன.

**இரண்டாம் வாசகம் : யாக் 5:1–6**

உங்கள் செல்வம் மக்கிப் போயிற்று

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவரே உமது வார்த்தையே உண்மை, உண்மையினால் எங்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும். அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மாற் 9:38–48**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

நிலைவாழ்வை நோக்கி நம்மையெல்லாம் வழிநடத்தும் திருஅவையானது மக்கள் மத்தியில் நிலவும் குறுகிய மனப்பான்மையையும் சுயநலப் போக்குகளையும் அகற்றி பரந்த மனப்பான்மையை வளர்த்து இயேசுவின் பாதையில் அவரது போதனையைப் பின்பற்றி வாழ வழிகாட்டுவதில் முழு மூச்சாய் உழைத்திட வரமருள வேண்டுமென்று...

நாட்டை வழிநடத்தும் தலைவர்களும் சமூக சமய தலைவர்களும் இன மத மொழி பேதமற்ற சமூகத்தை உருவாக்க உழைத்திடவும், தம்மிடம் உள்ள அதிகாரங்களை பகிர்ந்து நாட்டின் வளர்ச்சிக்காவும் மக்களின் ஒற்றுமையை கட்டிக் காத்து சமூக நல்லுறவை வளர்த்து ஒன்றுபட்ட நாட்டை உருவாக்கவும் வரமருள வேண்டுமென்று...

பாவம் என்பது கடவுளிடமிருந்து நம்மைப் பிரிக்கின்ற தீய சக்தியாக இருக்கின்றது. இதை புரிந்து கொண்டு அன்பின் வழிநடந்து ஆண்டவரையும் அயலாரையும் அன்பு செய்யவும் எம்மிடையே நிலவும் போட்டி, பொறாமை போன்ற மனநிலையை மாற்றி அன்பினால் ஒன்றுபட்டு வாழவும் வரமருள வேண்டுமென்று...

## சிந்தனைக்கு

அடிக்கடி கோபப்பட்டால்
கோபத்திற்கு மரியாதை இல்லை
கோபமே படாமல் இருந்தால்
நமக்கே மரியாதை இல்லை

மற்றவர்களை பொறுத்தவரைக்கும்
நான் நல்லவன் இல்லை
என்னை பொறுத்தவரைக்கும்
நான் கெட்டவன் இல்லை.

துடிக்கும் போது யாரும்
கவனிக்கமாட்டார்கள்
நின்று விட்டால் பலரும் துடிப்பார்கள்.

ஆரம்பத்தில் சுவாரஸ்யம் அளிக்கும்
எந்த உறவுகளும் இறுதி வரை
அதை தருவது இல்லை
தொடர்வதும் இல்லை

வாழ்க்கையில் ஜெயிக்கனும்னா
அடுத்தது என்ன பண்ணலாம்னு
பார்க்கனும்
அடுத்தவங்க என்ன
பண்றாங்கனு பார்க்கக் கூடாது.

இரவு இல்லையெனில்
நட்சத்திரம் ஜொலிப்பது தெரியாது
கஷ்டம் இல்லையெனில்
சந்தோஷத்தின் அருமை தெரியாது



**“இயேசு கிறிஸ்து சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்டு, நம்மை பாவநிலையிலிருந்து மீண்டு, வெற்றியீட்டுவதற்கும் அவர் எம்மிடத்தில் அளவில்லாத அன்பைக் காட்டுவதற்கும் அடையாளமாக இச்சிலுவையை பயன்படுத்திக்கொண்டார்”**



# சிலுவையானது மரணத்தின் அடையாளமன்று, அது அன்பின் அடையாளமாகும்.

மஹாகல்கமுவையிலிருந்து கொண்டு வந்த புனித யோசேவாஸ் அடிகளாரின் திருச்சிலுவையை ஏற்று வரவேற்ற சந்தர்ப்பத்தில் உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு ஜே.டீ.அன்டனி ஆண்டகை கருத்து தெரிவித்தார்.

“இயேசுகிறிஸ்து சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்டு, நம்மை பாவநிலையிலிருந்து மீண்டு, வெற்றியீட்டுவதற்கும் அவர் எம்மிடத்தில் அளவில்லாத அன்பைக் காட்டுவதற்கும் அடையாளமாக இச்சிலு-வையை பயன்படுத்திக்கொண்டார்” எனும் கருத்தை ஆயர் அவர்கள், குருணாகல் மறைமாவட்ட மஹா-கல்கமுவ பிரதேசத்தில் ஸ்தாபித்துள்ள புனித யோசேவ்வாஸின் திருச்சிலுவையை நாடெங்கும் கொண்டு செல்லும் நிகழ்வின் அடிப்படையில் திருச்சிலுவையை உத்தியோகப்பூர்வமாக நீர்கொழும்பு கொச்சிக்கடை தூய ஆவியின் திருத்தலத்தில் வரவேற்று இடம்பெற்ற வழிபாட்டில் உரைநிகழ்த்தும்போது தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவிக்கையில் எம் நாட்டின் முதற் புனிதரான புனித யோசேவாஸ் அவரது பணியை சிறப்பாக நிறைவேற்றவும் புதுமைகளைச் செய்யவும் அவருக்கு இத்திருச்சிலுவையே உதவியது. 310 வருடங்கள் பழமைவாய்ந்த இச்சிலுவை மூலம் புனித யோசேவ்வாஸ் எமக்கு நினைவுறுத்துவது, எமது கத்தோலிக்க விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருப்பதையே. கொழும்பு உயர்மறைமாவட்டத்தில் இந்நிகழ்விற்கு இணைப்பாளராக அருட்பணி என்டனி பர்னாந்து புள்ளே அடிகளார் உள்ளிட்ட குழுவின் உறுப்பினரான அருட்பணி கெமிலஸ் பர்னாந்து அடிகளார், நீர்கொழும்பு மறைக்கோட்டத் தலைவர் மற்றும் கட்டாணை வட்டாரத் தலைவர் அருட்பணி. கிளமென்ட் ரொசைரோ, அருட்பணி. நிஷான்ந்த றுதீர அவர்கள் உள்ளிட்ட குழுவினவர்கள் மற்றும் இறைமக்கள் கலந்து கொண்டனர்.

**தகவல் : ரீ, சுனில் பர்னாந்து மற்றும் ரொஷான் பிரதீப்**











# AQUINAS
## COLLEGE OF HIGHER STUDIES

Education for all

# AQUINAS SPORTS FIESTA 2018



அக்குவைனஸ் உயர் கல்வியியற் கல்லூரியின் தலைமைப்பீடாதிபதி மதிப்பிற்குரிய அருட்தந்தை சுசித் மார்க் லால் சில்வா அவர்களின் கருத்து.

“இன்றைய தினத்தில் நடைபெறுகின்ற இவ்விளையாட்டுப் போட்டியானது எம் கல்வியியற் கல்லூரிக்கு ஒரு முக்கிய நிகழ்வாகும். ஏனெனில் இந்நிகழ்வினூடாக எம் மாணவர்களை ஒன்றிணைப்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும். விளையாட்டுப் போட்டி என்பது இளைஞர்களின் ஆளுமையையும் திறனையும் வளர்க்கக்கூடிய ஒன்றாகும். ஆகவே, உங்கள் அனைவரையும் அன்புடன் இந்நிகழ்வுக்கு அழைப்பதோடு, அதிகாரப்பூர்வமாக இந்நிகழ்வை ஆரம்பித்து வைக்கின்றேன்.”

# அக்குவைனஸ் வருடாந்த விளையாட்டுப் போட்டி



பிரதம அதிதி மேதகு ஆயர். ஜே.டி அன்ரனி ஜயக்கொடி ஆண்டகையின் உள்ளத்திலிருந்து....

“விளையாட்டு என்பது எமது வாழ்வைக் கட்டியெழுப்ப எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள ஒரு சிறந்த வாய்ப்பாகும். மேலும் எம்வாழ்வை நேரிய வழியில் கொண்டு செல்லவும் வழிசமைக்கின்றது. தனிப்பட்ட ரீதியிலே, எனது வாழ்வைக் கட்டியெழுப்ப கல்வி, ஒழுக்கம் மற்றும் விளையாட்டு என்பன எனக்கு பேருதவியாக அமைந்துள்ளன என்று என்னால் ஆணித்தரமாகக் கூறமுடியும். இன்றைய தினத்திலே நான் உங்களுக்குத் தரக்கூடிய ஓர் அறிவுரையானது “நீங்கள் உங்கள் கல்வி நடவடிக்கைகளுக்கு கொடுக்கும் அதே அளவு ஈடுபாட்டை விளையாட்டுக்கும் கொடுங்கள் என்பதாகும். ஏனெனில் சிறந்த ஆளுமை விருத்திக்கு விளையாட்டு நிகழ்வுகள் உங்களை நடத்திச் செல்லும்.”



கிரிக்கெட் (ஆண்கள்) வெற்றியாளர் – JVI குருநாகல்



கரப்பந்தாட்ட வெற்றியாளர் – க்ருஷி கல்வியியற் கல்லூரி



வலைப்பந்தாட்ட வெற்றியாளர் – க்ருஷி கல்வியியற் கல்லூரி

அக்குவைனஸ் உயர் கல்வியியற் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியானது, இவ்வருடம் கடந்த ஆவணி மாதம், கொழும்பு நாராஹேன்பிட்ட ஷாலிகா விளையாட்டு மைதானத்திலே மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

கல்வியகத்தின் பொறுப்பதிகாரிகளும், மாணவர்களும் இந்நிகழ்விலே மிகவும் உற்சாகமாக கலந்து கொண்டனர்.



விழாவின் பிரதம அதிதியான மேதகு ஆயர். ஜே.டி அன்ரனி ஜயக்கொடி ஆண்டகை விளையாட்டு நிகழ்வுகளில் மிகவும் ஆர்வமுள்ளவர். ஆயர் அவர்கள் தேசிய குருமட மாணவனாக இருந்தபோது நீளம் பாய்தல் போட்டியில் இவரால் படைத்த சாதனைப் பதிவானது இன்று வரையிலும் முறியடிக்கப்படாது காணப்படுகின்றது.









தலைப்பீடாதிபதியின் முழுமையான ஈடுபாடானது போட்டியாளர்களின் பங்குபற்றுதலையும், ஈடுபாட்டையும் பெற்றுத்தர வழிவகுத்தது.

விளையாட்டுப் போட்டியின் ஒழுங்கமைப்பு, போட்டிக்கான அர்ப்பணிப்பு மற்றும் ஒன்றிணைந்த ஈடுபாடானது, இப்போட்டியினைச் சிறந்த முறையில் நடாத்துவதற்கு வழிவகுத்தன. இப்போட்டியிலே அக்குவைனஸ் உயர் கல்வியியற் கல்லூரி, வாதுவ மற்றும் வக கிளைகள், குருநாகல் புனித யோசேவ்வாஸ் கல்வியகம், காலி இயேசுசபைக் கல்வியகம், மன்னார் ஞானோதயம் (அ.ம.தி) கல்வியகம் ஆகிய கல்வியகங்கள் பங்குபற்றியமையானது இவ்வருடத்திற்கான சிறப்பம்சங்களுள் ஒன்றாகும். பங்குபற்றிய அனைவரும் மகிழ்ச்சி நிறைந்த உள்ளத்தினராக விடைபெற்றனர்.



கிரிக்கெட் (பெண்கள்) வெற்றியாளர் – ஆங்கிலப் பீடம்

JVI CATHOLIC INSTITUTE FOR HIGHER EDUCATION & VOCATIONAL TRAINING Diocese of Kurunegala



கூடைப்பந்து (ஆண்கள்) வெற்றியாளர் – JVI குருநாகல்

(Q18N 4286)




## வர்ணம் தீட்டுக



## கல்வி



*எனக்கு எவ்வளவு அறிவு இருக்கிறது*
*என்பதைவிட*
*இருக்கிற அறிவை வைத்து*
*எவ்வளவு சிறப்பாக படிக்க முடியுமா?*
*என்று யோசி.*
*அது தான் உன்*
*வெற்றிக்கு முதல்படி*

***

*கல்வி என்பது ஒரு கடல் பயணம் அதில்*
*ஆனந்தமாய் பயணம் செய்வேன்*

***

- **எதையும் கவனமுடன் செய்வேன்**
- **விளையாடும் போது நன்கு ஓடியாடி விளையாடுவேன்**
- **சாப்பிடும்போது நன்கு ருசித்துச் சாப்பிடுவேன்**
- **படம் பார்க்கும் போது மகிழ்வுடன் பார்ப்பேன்.**
- **படிக்கும்பொழுது வழிப்புடன் கவனமுடன் படிப்பேன்.**

# 4. தனிச் செபப் பழக்கம்

## 2. ஒளியின் மறைநிகழ்வுகள்

### 2. இயேசு நீரை இரசமாக்குகிறார்

வானகத் தந்தையே அப்பா!

இறையாட்சியை வெளிப்படுத்த இயேசு பல புதுமைகளைச் செய்தார். அன்னை மரியாவின் பரிந்துரையால் இறையாட்சியின் வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ள எனக்கு உதவிசெய்யும்.

**பரலோகத்தில் இருக்கின்ற....**

திருமண வீட்டில் தண்ணீர் இரசமாகிறது. **அருள் நிறை**
பார்வை இழந்தோர் பார்க்கிறார்கள். **அருள் நிறை**
பேச்சை இழந்தோர் பேசுகிறார்கள். **அருள் நிறை**
கேள்வியை இழந்தோர் கேட்கிறார்கள். **அருள் நிறை**
ஊனமுற்றோர் நடக்கிறார்கள். **அருள் நிறை**
தொழுநோயாளர்கள் குணமாகிறார்கள். **அருள் நிறை**
பசாசுகள் பயந்து ஓடுகின்றன. **அருள் நிறை**
காற்றும் கடலும் அடங்குகின்றன. **அருள் நிறை**
அப்பங்கள் பலுகிப் பெருகுகின்றன. **அருள் நிறை**
இறந்தோர் உயிர்த்தெழுகிறார்கள். **அருள் நிறை**

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்.

### 3. இயேசு இறையாட்சியைப் போதிக்கின்றார்

வானகத் தந்தையே அப்பா!

இறையாட்சியைப் பற்றிய உண்மைகளை இயேசு மலைப் பொழிவில் தந்துள்ளார். அன்னை மரியாவின் பரிந்துரையால் இறையாட்சியின் வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ள எனக்கு உதவிசெய்யும்.

**பரலோகத்தில் இருக்கின்ற....**

இயேசு மலைமீது அமர்கிறார். **அருள் நிறை**
ஏழைகளுக்கே இறையாட்சி உரியது என்கிறார். **அருள் நிறை**
துயரம் ஆறுதலாக மாறும் என்கிறார். **அருள் நிறை**
கனிவுள்ளோராய் வாழுங்கள் என்கிறார். **அருள் நிறை**
நீதிக்காக உழையுங்கள் என்கிறார். **அருள் நிறை**
இல்லாதோருக்கு இரங்குங்கள் என்கிறார். **அருள் நிறை**
தூயோராய் வாழுங்கள் என்கிறார். **அருள் நிறை**
அமைதியை நிலைநாட்டுங்கள் என்கிறார். **அருள் நிறை**
நீதிக்காகத் துன்புறுங்கள் என்கிறார். **அருள் நிறை**
தந்தையை நம்பி வாழுங்கள் என்கிறார். **அருள் நிறை**

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்.

### 4. இயேசு மலைமேல் உருமாறுகிறார்.

வானகத் தந்தையே அப்பா!

இறையாட்சியை வெளிப்படுத்த இயேசு தாபோர் மலையில் உருமாறினார். அன்னை மரியாவின் பரிந்துரையால் இறையாட்சியின் வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ள எனக்கு உதவிசெய்யும்.

**பரலோகத்தில் இருக்கின்ற....**

இயேசு தாபோர் மலை உச்சியில் நிற்கிறார். **அருள் நிறை**
அங்கே அவர் உருவம் மாறுகிறார். **அருள் நிறை**
இயேசுவோடு மோசே நிற்கிறார். **அருள் நிறை**
அவரோடு எலியாவும் நிற்கிறார். **அருள் நிறை**
மூவரும் உரையாடுகிறார்கள். **அருள் நிறை**
சீடர்கள் கதிகலங்கி விழுகிறார்கள். **அருள் நிறை**
மேகம் இயேசுவின்மேல் நிற்கிறது. **அருள் நிறை**
என் மகன் இவர் என்ற ஒலி கேட்கிறது. **அருள் நிறை**
திருக்காட்சி முடிவடைகிறது. **அருள் நிறை**
இயேசு மட்டும் தனியாக நிற்கிறார். **அருள் நிறை**

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்

........................ **தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**

........................

## தாய் மரியின் இனிய பிறந்தநாளை கொண்டாடுவோம்

**விண்ணகத்தில் உன்னத மகிமையை பெற்ற தாய்**
**தமது திருக்குமாரனின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கும் தாய்.**
**புனிதர்கள் வானதூதர்களுக்கு மேலாக அமர்ந்திருக்கும் தாய்**
**அதி மேன்மைமிக்க இராக்கினியாக விளங்கும் தாய்**

**சுவக்கின் அன்னமாளின் புத்திரியான தாய்**
**பல ஆலயங்களுக்குப் பெயர் கொண்ட தாய்**
**நற்பண்புகளுக்கே இலக்கணமான தாய்**
**மக்களுக்காக இறைவனிடம் பரிந்துபேசும் தாய்**

P.D. **ஓபால் மயூர**
**நாயக்ககந்தை புனித காணிக்கை அன்னை ஆலய திருப்பாலத்துவ மாணவன்**
**பாடசாலை :- சூசையப்பர் கல்லூரி , மருதானை**




## பழமொழிகள்

- ஒரு மனிதன் விடாமுயற்சியைக் கைவிடாமல் இருந்தால்தான் முயற்சி தன் வெகுமதியை முழுமையாக வருவிக்கும். **– நெப்போலியன் கில்**
- நல்லதை அதிகமாக எடுத்துச் சொன்னால், அதிகமாக வளர்கிறது. **– மில்டன்**
- இறைவனுக்காக நல்லது செய்பவன் புகழைத் தேடவில்லை. வெகுமதியைத் தேடவில்லை. இருந்தாலும் இறுதியில் இரண்டுமே கிடைக்கும். **– வில்லியம் பென்**
- பல நல்ல செய்கைகளினால் நம்மதிப்பை சம்பாதிக்கிறோம். ஆனால், ஒரே ஒரு தீய செய்கையினால் அதை இழந்துவிடுகிறோம். **– வெர்லிக்**
- வீண் பேச்சுப் பேசுபவர்களின் பேச்சை ஆமோதித்தால், அடுத்த அவதூறு உன்மேல் விழும்.
- இதயத்தின் ஞாபகமே நன்றி.
- பழக்கத்தை எதிர்க்காவிட்டால் அது விரைவில் அவசியமானதாக உருவாகிவிடுகிறது. **– புனித. ஒகஸ்ரீன்**
- ஒரு பழக்கத்தை பழகுவது நிலத்தை உழுவது போலாகும். அது நேரம் எடுக்கிறது. அது உள்ளிருந்து வளர வேண்டும்.
- தயாராயிருக்கும் நாக்கை விட தயாராயிருக்கும் கையை எனக்குக் கொடு **– கார்பாட்டி**
- வேலை மகிழ்ச்சிக்கு ஒரு திறவுகோள்.

## விடுகதைகள்

1. அலையலையாய் ஆடிவரும், கடல் அல்ல. நிலையாக இருக்காது நிலவும் அல்ல - அது என்ன?
2. அள்ள முடியும், கிள்ள முடியாது. - அது என்ன?
3. அறைகளோ அறுநூறு. அத்தனையும் ஒரே அளவு - அது என்ன?
4. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஒரு தூசி கிளம்பாது - அது என்ன?
5. இரவெல்லாம் பூக்காடு. பகலெல்லாம் வெறும் காடு - அது என்ன?
6. இதயம் போல் துடிதுடிக்கும். இரவு பகல் விழித்திருக்கும். - அது என்ன?
7. இரண்டு பெண்கள், இரட்டைப் பிறவிகள். ஒருத்தி கீழே வந்தால், மற்றொருத்தி மேலே போவாள். அவள் யார்?
8. இங்கே குத்தப்பட்டவன், அங்கே போய் புலம்புவான். - அவன் யார்?
9. இறக்கை உண்டு, ஆனால் பறக்க முடியாது - அது என்ன?
10. இணை பிரிய மாட்டார்கள் நண்பர்கள் அல்ல. ஒன்றுசேர மாட்டார்கள் பகைவர்கள் அல்ல. அவை எவை?

விடைகள் 15ம் பக்கம்




# பாடசாலையில் பண்பாடு



கல்வி பயிலும் கோயிலாகத் திகழ்வது பாடசாலை. அதனால் சரியான நேரத்தில் தக்க செயலைச் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள். ஊக்கமுடைமை, நன்னடத்தை, நேரம் தவறாமை, தூய்மை, நேர்மை, மனவலிமை, துணிச்சல் முதலிய நற்பண்புகளைக் கொண்டிருப்பதன் மூலமாக நல்ல பெயர் எடுக்க வேண்டும். தங்கப் பதக்கம் பெறுவதைக் காட்டிலும் நல்ல பெயரெடுத்தல் விலைமதிப்பு மிக்கது.

உங்களையே நீங்கள் மதிக்கும் மன உயர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும். நண்பர்கள், உயர்ந்த பொறுப்பு வகிப்பவர்கள் ஆகியோரையும் மதிக்க வேண்டும். மற்றவர்கள்பால் பணிவாகவும் பரிவுணர்வுடனும் நீங்கள் நடந்துகொள்வதையே மதிப்பளித்தல் என்பது உணர்த்துகிறது. மரியாதைப் பண்புதான் கவர்ச்சியூட்டும், இறுக்கத்தால் பிணைக்கும், பரிவு ஏற்படுத்தும், அமைதி தரும்.

வெளிப்படையான உங்கள் நடத்தை மூலமாக இம்மரியாதைப் பண்புடன் மற்றவர்களிடம் பழகும்போது உங்கள் நண்பர்களின் இதயத்தை வென்றுவிடுவீர்கள். உங்கள் இனிமையான தன்மையை அவர்கள் புகழ்வார்கள்.

மென்மையான தொனியில் பேசுங்கள். அவ்வாறு பேசும்போது சீரிய பண்பாளராகவோ, பண்பட்ட மங்கையாகவோ உங்களையே பக்குவப்படுத்திக் கொள்ளுகிறீர்கள். குரலில் ஏற்ற இறக்கம், உச்சரிப்பில் தெளிவு, சீரான தொனி, அழுத்தம் திருத்தமான பேச்சு ஆகியன மரியாதைக்குரிய பண்பட்ட மக்களின் முக்கிய அடையாளங்களாகும்.

மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் வேளைகளில் மௌனமாக இருங்கள். மௌனம் விலைமதிப்பற்றது. இடை விடாமல் உண்மையைத் தேடுவதில் ஈடுபட்டிருக்கும் வாழ்க்கை வாழ்பவர் மௌனவிரதத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார் காந்தியடிகள். நாவடக்கம் அரிய பெரிய கலை. அக்கலையில் தேர்ச்சி பெற்றுவிட்டால் அது உங்கள் ஆணைப்படி பணிவிடை செய்யும். பல சிக்கல்களில் இருந்தும் உங்களைப் பாதுகாக்கும்.

உங்கள் ஒவ்வொரு அசைவுகளிலும் பாவனைகளிலும் அமைதியும் கனிவும் திகழ்வதாக. எப்போதும் எளிமையாகவும் தன்னடக்கத்துடனும் இருங்கள்.

வகுப்பறைகளில் தாழ்வாரத்திலோ முற்றத்திலோ ஓடியாடி திரிதலும், குறிக்கோள் இல்லாமல் பாடசாலையில் எங்கு வேண்டுமானாலும் சுற்றித்திரிதலும் நன்றன்று. நண்பர்களுடன் போகும்போது கூச்சல் போட்டுக்கொண்டு போகக் கூடாது. எப்போதும் ஒழுங்குடன் நடப்பது நன்று. மேசைகள் நீங்கள் ஓடிக்குதித்து விளையாடவும், தாண்டிக் குதித்து தாவுவதற்கும் அல்ல. அவற்றின் மீது 'தட தட' என்று தட்டுவதோ, அவற்றை அழுக்குப்படுத்துவதோ கூடாது.

தாழ்வாரத்தின் வழியாக நீங்கள் நடந்து போகும்போது காரணம் இல்லாமல் ஒவ்வொரு வகுப்பறைகளையும் முறைத்துப் பார்த்துக்கொண்டு போகாதீர்கள். மற்றவர்கள் செயல்களில் தலையிடுதல் தவறாகும். நாவடக்கத்தைப்போலவே தன்னடக்கத்துடன் நடப்பது அவசியமானது.

வகுப்பு தொடங்குவதற்கு முதல் மணி அடித்தவுடன் வகுப்பறைக்குச் செல்ல வேண்டும். அமைதியாக அவரவர் இடத்தில் அமர்ந்து, ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழையும்போது மரியாதை காட்டும் முறையில் எழுந்து நிற்கவேண்டும். அவர் அமரும் வரையிலோ, உட்காருங்கள் என்று சொல்லும்வரையிலோ சிறுபொழுது நின்ற வண்ணம் காத்திருக்க வேண்டும்.

நேரம் தவறாமல் வகுப்புக்குச் செல்வது நல்ல பழக்கம். காலந்தவறாமை போற்றுதலுக்குரிய செயல்முறை. அது நேரத்துக்கு மதிப்புக்கொடுக்கும் நமது மன உணர்வைக் காட்டும். இந்த நல்ல பழக்கம் அமைதி, நிம்மதி, கலங்காமை, தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்த்துக்கொள்ள உதவும். நம்பிக்கையோடு காலந்தவறாமையைக் கடைப்பிடித்தால் மற்றவர்கள் மதிப்புக்கும் உரியவராகிவிடுவீர்கள். ஆளுமையின் வளர்ச்சிக்கும் அது நல்ல பயனை நல்குகிறது.

காலதாமதமாக வர நேரிட்டுவிட்டால் வகுப்பறைக்கு நேரே சென்று நுழைவாயிலருகே தொடை நடுங்கியவாறு நிற்கத்தேவையில்லை. மரியாதையுடன் வகுப்பு நோக்கி நடந்து, ஆசிரியரிடம் அடக்கமான குரலில் வணக்கம் ஐயா அல்லது வணக்கம் அம்மா என்று கூறுவது நல்லது. பவ்வியமாக 'ஐயா மன்னிக்க வேண்டும், இன்று புகைவண்டி தாமதமாக வந்தது, எனது மிதி வண்டி அல்லது மோட்டார் சைக்கிள் கோளாறு, அல்லது இன்று வழக்கமாக முன்கூட்டி வரும் பேருந்தைத் தவற விட்டுவிட்டேன் என்றவாறு கூறலாம். பொய்யான காரணத்தைத் தேட வேண்டியதில்லை. அவ்வாறு சொல்லுதலும் கூடாது. உண்மை பேசுதல் என்றும் நன்மை தரும்.

வகுப்பு நடைபெறும் வேளையில் நீங்கள் ஆசிரியரிடம் ஏதாவது சொல்ல வேண்டும் என்று விரும்பினால் அல்லது கேள்வி கேட்டு ஐயம் தீர்க்க விரும்பினால், அய்யா அருள் கூர்ந்து... நான் இதைத் தெரிந்துகொள்ளலாமா, எனக்கு இதுபற்றி விளக்கிச் சொல்ல முடியுமா என்று கூறி உங்கள் வினாக்களைப் பவ்வியமாகக் கேட்கலாம்.

வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது பேசுவது தவறு. அவ்வாறு பேசுவதற்குத் தவிர்க்க முடியாத தேவை ஏற்படும் என்றால் காதருகில் கிசுகிசுக்கும் முறையிலோ அல்லது பாவனை மூலமாகவோ தெரிவிக்கலாம். ஆசிரியர் உங்களைப் பார்க்காத வேளையில் நெருப்புக் கோழி போல் புத்தகத்திற்குள் தலையை இழுத்து மறைத்துக்கொண்டு பேசக் கூடாது. வகுப்பு முடிந்தவுடன் ஆசிரியர் வகுப்பறையை விட்டு வெளியில் செல்லும்வரை அவசரப்படாமல் உங்கள் இடத்தில் எழுந்து நிற்க வேண்டும். ஆசிரியர் வெளியேறுவதற்குள் கதவு நோக்கி நெருக்கியடித்துக்கொண்டு போவது பண்பன்று.

கல்வி நிலையத்தின் அரங்கத்திலுள் கூட்டம் நடைபெறும் வேளையிலும், பொதுநிகழ்ச்சிக்காக உள்ளே நுழையும்போதும், வெளியே வரும்போதும் மேற்கூறியவாறு நடந்துகொள்வது நலம். நிகழ்ச்சி அல்லது கூட்டத்தின்முக்கியமான பங்கேற்பாளர் முதலில் வெளியேறுமாறு காத்திருந்த பிறகே நீங்கள் வெளியே செல்லலாம். கூட்டத்தில் மகிழ்ச்சியைத் தெரிவிக்கும்போது மெல்லக் கைதட்டித் தெரிவித்தால் போதும். முரசு முழங்குவது போலத் தாள கதியில் தட்டிக்கொண்டிருக்கத் தேவையில்லை. மேசை மீது தட்டுவதோ தரைமீது காலடிகளால் ஓசை எழுப்புவதோ கூடாது.

ஆசிரியர் ஒருவர் தமிழ்மொழியில் கேள்வி கேட்டும்போது தமிழிலேயே பதில் சொல்லுங்கள். ஆங்கிலத்தில் பதிலயிப்பது முறையன்று. ஆங்கிலத்தில் கேள்வி கேட்டால் தமிழில் பதில் சொல்லாமல் ஆங்கிலத்திலேயே பதிலளிப்பது நல்லது. தெள்ளத் தெளிவாகப் பேசப் பழகுவது உங்களைத் தகுதியான மனிதராக்கும். ஒரு மொழியைப் புதிதாகப் பேசவும் எழுதவும் பயிலும்பொழுது அம்மொழிச் சொற்களின் அசையழுத்தம், தொனி, உச்சரிப்பு முறை ஆகிய அனைத்தையும் இணைத்தே கற்றுக்கொள்ள வேண்டும்.

ஜன்னலைத் திறத்தல், மேசைகளை வேறு ஓர் இடத்திற்குக் கொண்டு போதல், அறைகளையோ, பள்ளி வளாகத்தையோ தூய்மை செய்தல் போன்ற சிறு வேலைகளைச் செய்ய மாணவரை அழைத்தால் தயக்கமின்றி முன்வந்து செய்ய வேண்டும். ஏனெனில் பொதுவாக நற்குடியில் பிறந்தவர்கள் முந்தி வந்து பணிசெய்வார்கள் என்று நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

பாடசாலை விடுதி, நூலகம் முதலியவற்றின் நெறிமுறைகளை அறிந்து அவற்றின்படி நடந்துவரப் பழகுதல் நல்லது. சுவர்கள் மீதோ கரும்பலகையிலோ கண்டதைக் கிறுக்குதலைத் தவிர்க்க.

கசக்கிய குப்பைக் காகிதங்களைத் தரை மீதோ மண்மீதோ வீசி எறியக் கூடாது. சாய்வு மேசைமீதோ, தரைமீதோ மையைக் கொட்டுவதோ உதிர்ப்பதோ கூடாது. வீட்டுக்குள் இவ்வாறு செய்பவரைக் காண நேர்ந்தால் நீங்கள் என்ன சொல்வீர்கள்?

புதிதாக வருபவர்களைக் குறிப்பாகப் பெண்களை முறைத்துப் பார்த்துக்கொண்டிருப்பது நாகரிகமல்ல. அது உங்களைத் தாழ்த்தும் செயலாகும். ஒருவரிடம் பேசும்போது அவரது வாயருகே நெருக்கமாகச் சென்று பேசாதீர், வாயடிப்பதும் கூடாத செயல் ஆகும்.

தேர்வுக்குக் குறித்த நேரத்தில் சென்று சேருங்கள், புத்தகங்களை வகுப்பறைக்கு வெளியே வையுங்கள், மற்றவரைப் பார்த்து எழுதுவது நேர்மையற்ற நடத்தை. வினாத்தாளை வாங்கியதும் கவனமாகப் படிக்க வேண்டும். கேட்கப்பட்ட வினாவுக்குத் தக்க விடையளிக்க வேண்டும். இடப்பக்கத்தில் வரைவுக்கோடு போடுவதற்குரிய இடத்தை ஒதுக்க வேண்டும். எழுதிய விடைகள், பக்க வரிசை முறை முதலியவற்றைச் சரிபார்க்க இறுதி ஐந்து நிமிடங்களைச் செலவிடுவது நன்று.

உங்களுக்குக் கூடுதல் விடைத்தாள் தேவை என்றால் எழுந்து நின்று ஆசிரியர் அருகில் வரும்வரை காத்திருப்பது நல்ல பண்பு. மேசைமீது தட்டி, அல்லது 'உஸ்' என்று ஒலி எழுப்பி ஆசிரியரை அழைப்பதோ, உட்கார்ந்தவாறே கையை உயர்த்தி அழைப்பதோ, இருமல் மூலம் கவனத்தை ஈர்க்க முனைவதோ, உட்கார்ந்தவாறு கால்களைத் தட்டி ஓசை எழுப்புவதோ, இடக்கையால் தாளை அலட்சியமாக வாங்குவதோ அநாகரிகமான நடத்தைகள். இவற்றை முழுவதும் களைந்து நடப்பவரே பண்புள்ள மாணவர்.

# பிள்ளையின் முதல் ஆசிரியர் அன்னை



ஒரு முறை, இளம்பெண் ஆக்னசின் நண்பர் கூட்டத்தில் தீய சிந்தனைகொண்ட ஒருவர் இருப்பதை, அவரின் அன்னை கண்டார். அதை தன் மகளுக்கு, பக்குவமாய்ப் புரியவைக்க, அன்னை ஒரு நடைமுறை விளக்கம் கொடுத்தார். ஒரு நாள் ஒரு கூடை நிறைய ஆப்பிள் பழங்களையும், தனது கையில் ஓர் அழுகிய பழத்தையும் வைத்துக்கொண்டு மகளை அழைத்தார் அன்னை. மகள் வந்தவுடன், அந்த அழுகிய பழத்தை, நல்ல பழங்களுக்கு நடுவே கூடையில் வைத்தார் அன்னை. மகள் ஆக்னஸ் குழம்பினார். கெட்டதைக் கீழே விட்டுவிடலாமே என்றார் ஆக்னஸ். பரவாயில்லை. இதை உன் அறையில் பாதுகாத்து வை. நான் பார்க்கச் சொல்லும்வரை திறந்து பார்க்காதே என்றார் அன்னை. அன்னை சொல் தட்டிராத ஆக்னஸ், இதையும் தட்டவில்லை. சில நாட்களுக்குப்பின், மகளிடம், அந்தக் கூடையை எடுத்து வரச் சொன்னார் அன்னை. ஆக்னஸ் எடுத்துவந்த கூடையில், ஆப்பிள்கள் எல்லாம் அழுகிப் போயிருந்தன. சில நாளகளுக்கு முன்னால் ஒரு பழம் அழுகியிருந்தது. இப்போது எல்லாப் பழங்களும் அழுகியிருந்தன. அதைப் பார்த்த அன்னை, எல்லாப் பழங்களையும் வெளியே கொட்டு என்றார். ஆக்னசும் கொட்டினார். பின்னர் அன்னை மெதுவாகப் பேச ஆரம்பித்தார். மகளே, ஒரு கெட்டுப்போன ஆப்பிள், ஒரு கூடை ஆப்பிள்களையும் கெட்டுப்போக வைத்துவிட்டது. ஒரு கூடை ஆப்பிள்கள் சேர்ந்து, ஒரு ஆப்பிளை நல்ல ஆப்பிளாக்க முடியவில்லை. இப்படித்தான் நட்பும். தீய நட்பு, தூய உள்ளங்களையும் துருப்பிடிக்க வைக்கும். பணிவுள்ள மனங்களையும், கீழ்த்தரமானதைச் செய்ய வைக்கும். எனவே நட்பைத் தெரிந்தெடுப்பதில் கவனம் தேவை. அன்று அன்னை சொன்ன பாடம், மகள் ஆக்னசின் மனதில் ஆழமாய்ப் பதிந்தது. அதேபோல், ஒரு முறை வீட்டில் அமர்ந்து, நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்தார் ஆக்னஸ். அவர்களுள் ஒருவர், அங்கு இல்லாத ஒருவரைப் பற்றி அவதூறை அவிழ்த்து விட்டுக்கொண்டிருந்தார். இதைக் கேட்ட அன்னை, அறையில் எரிந்துகொண்டிருந்த விளக்கை அணைத்தார். உடனே ஆக்னஸ் ஏனம்மா? என்றார். புறணி பேசும் இடத்தில் வெளிச்சம் எதற்கு? இச்செயல்களுக்கு இருட்டே வெளிச்சம் என்றார் அன்னை. இத்தகைய அன்னையால் வளர்க்கப்பட்ட மற்றும் அன்னை சொல் தட்டாமல் வளர்ந்த இளம்பெண் ஆக்னஸ்தான், புனித அன்னை தெரேசா.






# இயற்கையின் பாதுகாப்பு உலக செப நாளில் திருத்தந்தை

**நம் பொதுவான இல்லமாகிய இப்பூமி பற்றிய அறிவிலும், அதை மதிப்பதிலும் இளைய தலைமுறை வளரவேண்டுமென செபித்துள்ளார்.**

### தண்ணீரைப் பராமரிப்பது இன்றியமையாத கடமை

நாம் பொறுப்புணர்வோடு படைப்பைப் பாதுகாக்க இயலாமல் இருக்கின்றோம் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புரட்டாதி 1, சனிக்கிழமையன்று, நான்காவது ஆண்டாக கடைப்பிடிக்கப்பட்ட, இயற்கையின் பாதுகாப்பு உலக செப நாளில் வெளியிட்ட செய்தியில் கூறியுள்ளார்.

மிகவும் எளிமையான மற்றும் மதிப்புமிக்க தண்ணீர் பற்றி இச்செய்தியில் குறிப்பிட விரும்புவதாகத் தெரிவித்துள்ள திருத்தந்தை, உலகில் ஒவ்வொருவரும் பாதுகாப்பான குடிநீர் வசதியைப் பெறவேண்டியது, அடிப்படையான மற்றும் உலகளாவிய மனித உரிமை, ஆனால், இதை ஏராளமான மக்கள் பெற வசதியின்றி உள்ளனர்.

இயற்கையாக கிடைக்கும் தண்ணீரை, ஏழைகளைப் புறக்கணித்துவிட்டு, தனியார் மயமாக்குவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என்றும், ஏழைகளைப் புறக்கணிப்பது, வாழ்வைப் புறக்கணிப்பதாகும் என்றும் கூறியுள்ள, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், படைப்பிலும், மனித முன்னேற்றத்திலும், முக்கிய பங்காற்றும் தண்ணீரைப் போன்று, வேறு எதுவும் இப்பூமிக்கோளத்தில் எளிமையானதாகவும், பயனுள்ளதாகவும் இல்லை எனவும் கூறியுள்ளார்.

நம் பொதுவான இல்லமாகிய இப்பூமி என்ற கொடைக்காகவும், நாம் பெற்றுள்ள சகோதரி தண்ணீருக்காகவும், இறைவனுக்கு முதலில் நன்றி சொல்ல விரும்புவதாகக் கூறியுள்ள திருத்தந்தை, சுற்றுச்சூழல் அமைப்பைப் பாதுகாப்பதற்கு, பல்வேறு திட்டங்கள் மற்றும் ஆய்வுகள் வழியாக ஊக்குவித்துவரும் எல்லாருக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

### கடல்கள் மற்றும், பெருங்கடல்கள்

கிறிஸ்தவர்களுக்கு, தண்ணீர், தூய்மை மற்றும் வாழ்வின் இன்றியமையாத பொருள் என்றுரைத்துள்ள திருத்தந்தை, படைத்தவரின் வியத்தகு கொடைகளான, கடல்கள் மற்றும், பெருங்கடல்கள், பிளாஸ்டிக் குப்பைகளால் நிரப்பப்பட நாம் அனுமதிக்கக் கூடாது எனவும் கூறியுள்ளார்.


எல்லாமே கடவுளின் பராமரிப்பைச் சார்ந்துள்ளது என்று நாம் செபிக்க வேண்டும் மற்றும், அனைத்துமே நம்மைச் சார்ந்துள்ளது என பணியாற்ற வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ள திருத்தந்தை, புலம்பெயர்ந்தவர், காலநிலை மாற்றம் போன்ற இக்காலத்தில் மக்களை அதிகம் பாதிக்கும் விவகாரங்களில், அரசியல் தலைவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு செயல்படுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

கடல்நீர், மக்களைப் பிரிப்பதன் அடையாளமாக இல்லாமல், மனித சமூகம் சந்திக்கும் இடமாக அமைவதற்கும், நல்லதொரு வருங்காலத்தைத் தேடிவரும் பயணத்தில், கடல்களில் தங்கள் வாழ்வை இழக்கின்றவர்களுக்காகவும் செபிப்போம் என்றும், திருத்தந்தை தன் செய்தியில் கேட்டுக்கொண்டுள்ளார்.

புலம்பெயர்ந்தோர்க்கு, சிறப்பான பணியாற்றும் அரசியல் மற்றும் ஏனைய மக்களுக்கும், நிறுவனங்களுக்கும் நன்றியும் பாராட்டும் சொல்லி, அவர்களை ஊக்கப்படுத்தியுள்ளார்.

“தண்ணீர், மதிப்புமிக்க பொருள் மற்றும், அது மனித உரிமை என்ற கருத்தில் தண்ணீர் மதிக்கப்பட வேண்டும்” என்ற தலைப்பில் திருத்தந்தை இச்செய்தியை வெளியிட்டுள்ளார்.

# புனித அன்னை தெரேசாவைப் பற்றிய புதிய நூல்




அன்னை தெரேசா அருளாளராக உயர்த்தப்பட்ட வேளையில், வத்திக்கானில் வாழ்ந்தோருக்கு வழங்கப்பட்ட ஆன்மீக உரைகளின் தொகுப்பாக ஒரு புதிய நூல் வெளியிடப்பட்டது.

புனித அன்னை தெரேசா அவர்கள் இறையடி சேர்ந்த நாள், புரட்டாதி 5ம் திகதி சிறப்பிக்கப்பட்டது. அதற்கு முன் ஆவணி 31, அன்னையைப் பற்றிய மற்றுமொரு நூல், இத்தாலிய மொழியில் வெளியாகியது.

“அன்னை தெரேசா: கடவுள் நம்பிக்கையற்றவருக்கும், திருமணமானவர்களுக்கும் புனிதர்” என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இந்நூலை, பாப்பிறை இல்லத்தில் ஆன்மீக உரைகளை வழங்கிவரும் அருள்பணி ரானியேரோ காந்தலமெஸ்ஸா (Raniero Cantalamessa) அவர்கள் எழுதியுள்ளார்.

1980ம் ஆண்டு முதல், பாப்பிறை இல்லத்தின் மறையுரையாளராகப் பணியாற்றிவரும் அருள்பணி காந்தலமெஸ்ஸா அவர்கள், 2003ம் ஆண்டு, அன்னை தெரேசா அருளாளராக உயர்த்தப்பட்ட நிகழ்வையொட்டி, பாப்பிறை இல்லத்திலும், வத்திக்கானிலும் வாழ்ந்தோருக்கு வழங்கிய ஆன்மீக உரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

# புனித அன்னை தெரேசாவின் திருநாளன்று, சிறப்புத் திருப்பலி



புரட்டாதி 5, சிறப்பிக்கப்பட்ட புனித அன்னை தெரேசாவின் திருநாளையொட்டி, கொல்கத்தா பேராயர் தாமஸ் டி‘சூசா அவர்களின் தலைமையில், அன்னை தெரேசாவின் கல்லறைக்கருகே கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

அருள்பணியாளர்களின் புனிதத்துவத்தை வளர்ப்பதற்காக, அன்னை தெரேசா அவர்களால் உருவாக்கப்பட்ட 'Corpus Christi' என்ற இயக்கத்தைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட அருள்பணியாளர்கள், பேராயருடன் இணைந்து கூட்டுத் திருப்பலி நிறைவேற்றினர் என்று ஆசிய செய்தி கூறுகிறது.

காலை 6 மணியளவில் நடைபெற்ற இத்திருப்பலியைத் தொடர்ந்து, அன்னையின் கல்லறைக்கருகே நடைபெற்ற ஒரு நிகழ்வில், அன்னை தெரேசா பிறரன்பு சகோதரிகள் சபையின் தலைவர், அருட் சகோதரி மேரி பிரேமா அவர்கள், இச்சபையின் ஐந்து பிரிவுகளைக் குறிக்கும் வண்ணம், ஐந்து மெழுகு திரிகளை ஏற்றிவைத்தார்.

வறியோரும், உலகத்தால் ஒதுக்கப்பட்டோரும், குடும்பங்கள் இன்றி தவித்து வந்த நிலையில், அவர்களை ஒரு குடும்பமாக இணைக்கும் பொறுப்பு, பிறரன்பு மறைப்பணியாளர்கள் சபைக்கு அளிக்கப்பட்டது என்று கூறிய அருட் சகோதரி பிரேமா அவர்கள், அன்னை தெரேசாவால் உருவாக்கப்பட்ட உலகளாவிய குடும்பம், என்றும் பிரியாமல் இருப்பது, அன்னைக்கு வழங்கப்படும் மரியாதை என்று எடுத்துரைத்தார்.

1997ம் ஆண்டு புரட்டாதி 5ம் திகதி, அன்னை தெரேசா அவர்கள், இறைவனடி சேர்ந்த தருணம் முதல், அவரது கல்லறை அமைந்துள்ள இல்லம், உலகினர் பலர் திருப்பயணம் மேற்கொள்ளும் தலமாக அமைந்துள்ளது

# பாத்திமா திருத்தலத்தில் கர்தினால் ஸ்டெல்லா வழங்கிய மறையுரை



பாலியல் தொடர்பான குற்றங்கள் என்ற கறையிலிருந்து, திருஅவையை சுத்தம் செய்வதற்கு, திருமுழுக்கு பெற்ற அனைவரின் ஆதரவும், செபங்களும் இன்றியமையாதவை.

தற்போது கத்தோலிக்கத் திருஅவையை வேதனையில் ஆழ்த்தியிருக்கும் பாலியல் தொடர்பான குற்றங்கள் என்ற கறையிலிருந்து, திருஅவையை சுத்தம் செய்வதற்கு, திருமுழுக்கு பெற்ற அனைவரின் ஆதரவும், செபங்களும் இன்றியமையாதவை என்று, வத்திக்கான் உயர் அதிகாரி ஒருவர், தன் மறையுரையில் கூறினார்.

புரட்டாதி 3, திங்கள் முதல், 6 வியாழன் முடிய போர்த்துக்கல் நாட்டின் பாத்திமா அன்னை மரியா திருத்தலத்தில் நடைபெற்ற அருள்பணியாளர்கள் மாநாட்டின் தொடக்கத் திருப்பலியை நிறைவேற்றிய, அருள்பணியாளர்கள் பேராயத்தின் தலைவர் கர்தினால் பெனியமீனோ ஸ்டெல்லா அவர்கள், தன் மறையுரையில் இவ்வாறு கூறினார்.

அதிகாரத்தையும், சக்தியையும் வெளிப்படுத்தும் ஆயர்கள், அருள்பணியாளர்கள் என்ற கோணத்தில் மட்டுமே, கத்தோலிக்கத் திருஅவை உணரப்பட்டதால், அதிகாரத்தில் இருப்போர் செய்த தவறுகளும் மூடி மறைக்கப்பட்டன என்றும், திருஅவை, மக்களின் அவை என்ற உணர்வு வளர்வதே, இத்தகைய தவறுகளைத் தீர்க்கும் என்றும், திருத்தந்தை கூறிவந்துள்ள கருத்துக்களை, கர்தினால் ஸ்டெல்லா அவர்கள் தன் மறையுரையில் சுட்டிக்காட்டினார்.

உலகெங்கும் பல்லாயிரம் அருள்பணியாளர்கள், இறைவனுக்கும், மக்களுக்கும் ஒப்பற்ற பணிகள் செய்துவருவதை மறந்துவிடக்கூடாது என்பதை, தன் மறையுரையில் தெளிவுபடுத்திய கர்தினால் ஸ்டெல்லா அவர்கள், அருள்பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளில் இன்னும் தீவிரமான முயற்சிகள் தேவைப்படுகின்றன என்பதையும் வலியுறுத்தினார்.

# அமைதியின் கலாச்சாரத்தை வளர்க்க விழையும் திருப்பீடம்



அமைதியின் கலாச்சாரத்தை உலகில் வளர்ப்பதற்கு, திருப்பீடம் அதிக முக்கியத்துவம் வழங்கி வருகிறது என்று, ஐ.நா.அவை கூட்டங்களில், திருப்பீடத்தின் பிரதிநிதியாக பங்கேற்றுவரும் பேராயர் பெர்னார்தித்தோ அவுசா அவர்கள், ஐ.நா. தலைமையகத்தில் நிகழ்ந்த ஒரு கூட்டத்தில் உரையாற்றினார்.

நியூ யார்க் நகர், ஐ.நா. தலைமையகத்தில், புரட்டாதி 5 புதனன்று நடைபெற்ற அமைதியின் கலாச்சாரம் பற்றிய உயர் மட்ட கலந்துரையாடலில், பேராயர் அவுசா அவர்கள் வழங்கிய உரையில், இவ்வாறு கூறினார்.

நாடுகளுக்குள் செயல்படும் பல்வேறு குழுக்களுக்கிடையிலும், நாடுகளுக்கிடையிலும், நிகழ்ந்துவரும் எண்ணற்ற மோதல்களை, “துண்டு, துண்டாக நிகழும் மூன்றாம் உலகப்போர்” என்று திருத்தந்தை கூறியதை, பேராயர் அவுசா அவர்கள், தன் உரையில் குறிப்பிட்டார்.

ஒருவர் ஒருவர் மீது கொண்டுள்ள உண்மையான மதிப்பு, உரையாடல் ஆகிய பண்புகள் கொண்ட சந்திக்கும் கலாச்சாரம், அமைதியின் கலாச்சாரத்தை உருவாக்க பெரிதும் துணைபுரியும் என்று, பேராயர் அவுசா அவர்கள், தன் உரையில் சுட்டிக்காட்டினார்.

மனித உரிமைகள் மதிக்கப்படுவதன் வழியே, அமைதியின் கலாச்சாரத்தை உருவாக்க முடியும் என்பதை, அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்ட உருவாக்கப்பட்ட ஐ.நா.அவை, இவ்வுலகிற்கு சொல்லித்தரவேண்டும் என்று, பேராயர் அவுசா அவர்கள் அழைப்பு விடுத்தார்.

புரட்டாதி 5ம் திகதி, கத்தோலிக்கத் திருஅவை, புனித அன்னை தெரேசாவின் திருநாளைக் கொண்டாடியது என்பதை, சிறப்பாகக் குறிப்பிட்ட பேராயர் அவுசா அவர்கள், 1979ம் ஆண்டு, நொபெல் அமைதி விருதைப் பெற்ற அன்னை, 1985ம் ஆண்டு ஐ.நா. அவையில் உரையாற்ற வந்திருந்தபோது, அன்றைய ஐ.நா. பொதுச்செயலர் Javier Pérez de Cuéllar அவர்கள், அன்னையை அறிமுகப்படுத்திய வேளையில், “இவரே, ஐக்கிய நாடுகள் அவை. இவரே, உலகின் அமைதி” என்று கூறியதை, தன் உரையின் இறுதியில் கூறி முடித்தார்.



# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்

(மத் 6:9)

பகுதி – 4

## மூவோர் இறைவனைப் போற்றுவோம்.

கிறிஸ்தவத்தின் வாழ்விலும், வழிபாட்டிலும் நடுநாயகமாய் விளங்கும் இறைவன் மூவோர் இறைவன் என அழைக்கப்படுகிறார். ஒரே கடவுள், ஆனால், மூன்று ஆள்களாய் இருக்கிறார் என்பது கிறிஸ்தவத்தின் அடிப்படை விசுவாசக் கோட்பாடு.

யூதர்கள் ஒரு கடவுள் கொள்ளை உடையவர்கள். பழைய ஏற்பாட்டில் "யாவே" ஒருவர் மட்டுமே கடவுளாக அறியப்பட்டார். ஆனால், இயேசு வந்தபின் புதியதொரு இறையியலை, இறைத்தன்மையை அறிமுகப்படுத்தினார். யாவே இறைவனால் தாம் அனுப்பப்பட்டதாக அறிவித்தார். நானாக எதையும் செய்வதில்லை. மாறாக, தந்தை கற்றுத் தந்ததையே நான் எடுத்துரைக்கின்றேன் என்பதை அறிந்துகொள்வீர்கள். என்னை அனுப்பியவர் என்னோடு இருக்கிறார். அவர் என்னைத் தனியாக விட்டுவிடுவதில்லை. நானும் அவருக்கு உகந்தவற்றையே எப்போதும் செய்கின்றேன் (யோவா 8:28-29)

ஆனால், சீடர்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை. தந்தையைப் பற்றியே அவர் பேசினார் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை என்று இயேசு விளக்குகிறார். (யோவா 8:27). இயேசு தந்தையிடமிருந்து வந்தவர் மட்டுமல்ல, தந்தையோடு ஒன்றானவர் என்பதை நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கின்றோம் (யோவா 10:30), என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும் (யோவா 14:9) என்னும் கூற்றுகளிலிருந்து அறிகிறோம். தந்தையைத் தம் சீடருக்கு அறிமுகப்படுத்திய இயேசு, தாம் இவ்வுலகை விட்டுச் செல்லும் முன் மூன்றாம் ஆளாகிய தூய ஆவியாரையும் அறிமுகப்படுத்தினார். உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் (யோவா 14:16-17), அத்துடன், என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார். நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார் (யோவா 14:26) என்னும் இயேசுவின் வாக்கிலிருந்து மூன்று ஆள்களாய் இருக்கும் இறைவனின் இயல்பை விளக்கமாக அறிகிறோம்.

இருப்பினும் மத்தேயு நற்செய்தியின் இறுதிப் பகுதியில்தான் மூவோர் இறைவனின் பெயர்கள் ஒரு சொற்கோவையாக (Trinitarian formula) நமக்குத் தரப்பட்டுள்ளன. "நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்" (மத் 28:19) என்று வாசிக்கின்றோம். இறைவன் ஒரே கடவுளாக, அதேவேளையில் மூன்று ஆள்களாக இருப்பது ஓர் இறையியல் மறைபொருள் (Mystery). இந்த மறைபொருளை மானிட அறிவாற்றலால் புரிந்துகொள்ள முடியாது. இறைநம்பிக்கையால் ஏற்றுக்கொள்ளவே முடியும். இயேசுகிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்ட இந்த மறையுண்மையை ஓர் அடிப்படை விசுவாசக் கோட்பாடாக நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

இயேசு வழியாகவே நாம் தந்தையை அறியவும், புரிந்துகொள்ளவும் முடியும். அவரே இறைவனை நமது வானகத் தந்தை (மத் 6:9) என்று நமக்கு அறிமுகம் செய்துவைத்தார். அவரே இறைத் தந்தையின் மண்ணக முகமாக, அடையாளமாக இருக்கிறார். இயேசு கடவுளுடைய மாட்சிமையின்



சுடரொளியாகவும், அவருடைய இயல்பின் அச்சுப் பதிவாகவும் (எபி 1:3) விளங்குகிறார் என்று எபிரேயர் திருமடலில் வாசிக்கின்றோம். அதுபோல, இயேசுவே தூய ஆவியாரையும் நமக்கு அறிமுகம் செய்துவைத்தார். "தந்தையிடமிருந்து புறப்படும் ஆவியானவர், அவரே தந்தையிடமிருந்து வந்த உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்" (யோவா 15:26) என்கிறார் இயேசு.

இவ்வாறு தந்தை, மகன், தூய ஆவியார் என்னும் மூன்று ஆள்களும் ஒரே ஞானமும், ஒரே வல்லமையும், ஒரே மாட்சியும் நிறைந்தவர்கள் என்று நாம் விசுவசிக்கின்றோம். அத்துடன், இந்த மூன்று ஆள்களும் சரிசம வணக்கமும், மாட்சியும், ஆராதனையும் பெறுகின்றனர் என்றும் நாம் அறிகின்றோம்.

இந்த இறையியல் பின்னணியில் நாம் செபத்திற்கு வருவோம். தந்தை, மகன், தூய ஆவியார் என்னும் மூவோர் இறைவனுக்கு வணக்கமும், வழிபாடும் செலுத்துவது திருச்சபையின் தொடக்கக் காலம் முதல் நடைமுறையில் இருந்து வரும் பழக்கம். "பிதாவுக்கும், சுதனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக. ஆதியிலே இருந்ததுபோல் இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்" என்னும் தமத்திருத்துவ ஆராதனை நெடுங்கால மரபு கொண்டது. எந்த ஒரு செயலையும், செபத்தையும், வழிபாட்டையும் மூவோர் இறைவனின் செபத்தைச் சொல்லியே தொடங்கும் பழக்கம் திருச்சபையின் தொன்மைக் காலம் முதல் இருந்துவருகிறது.

எனவே, நாமும் நாள்தோறும் மூவோர் இறைவனுக்கு வணக்கமும், மாட்சியும் செலுத்துவதைக் கடமையாகக் கொள்வோம். பொதுவாக நமது செபங்கள் இயேசுவை நோக்கியே சொல்லப்படுபவையாக இருத்தல் சரியன்று. இயேசு வழியாக, இறைத் தந்தையை நோக்கி அமைதலே சாலவும் நன்று. எனவேதான், திருப்பலியின் பெரும்பாலான மன்றாட்டுகள் இயேசு வழியாக, இறைத் தந்தையை நோக்கி எழுப்பப்படுவனவாக அமைந்துள்ளன. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம் என்றே நிறைவடைகின்றன. ஆகவே, நாள்தோறும் மூவோர் இறைவனின் பெயரைச் சொல்லி, மூவருக்கும் சமமான புகழ்ச்சியும், நன்றியும், மாட்சியும் செலுத்தக் கற்றுக்கொள்வோமாக.

எடுத்துக்காட்டாக, இதோ சில செபங்கள்

**தந்தையே, உமக்குப் புகழ், நன்றி, மாட்சி**
**இயேசுவே, உமக்குப் புகழ், நன்றி, மாட்சி**
**தூய ஆவியே, உமக்குப் புகழ், நன்றி, மாட்சி**
**மூவோர் இறைவா உமக்குப் புகழ், நன்றி, மாட்சி**

**தொடரும்**

# வாழ்வை மாற்றிய வினா



ஒருநாள் ஒரு தாய், தனது சிறிய மகளுடன் ஆலயத்தில் பங்குத்தந்தை நடத்திய வழிபாட்டில் பங்கெடுத்துக் கொண்டிருந்தாள். மறையுரையின் போது, குருவானவர் பின்வருமாறு கூறினார். "இயேசுவில் மிகவும் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, நமது மிகச் சிறிய அன்றாடக் கடமைகளை மிகவும் பிரமாணிக்கமாக நிறைவேற்றும் போது, இறைவனுக்கு நாம் கீழ்ப்படிகின்றோம் என்பதை மிகவும் நன்றாக எடுத்துக் காட்டுகின்றோம். இன்று அநேக பெற்றோர் தங்கள் ஞான வாழ்வுக்கு அடுத்த கடமைகளை நிறைவேற்றத் தவறுகின்றனர். ஒவ்வொரு நாளும் படுக்கைக்குச் செல்வதற்கு முன்னதாக, "இறைவா, இன்று இரவு நான் தூங்கும்போது நீர் விழிப்பாயிருந்து எனக்கு எந்த ஓர் ஆபத்தும் ஏற்படாதபடி பாதுகாத்தருளும்" என்று வேண்டிக் கொள்ள மறந்துவிடுகின்றனர். அவ்வாறே, ஒவ்வொரு நாளும் அதிகாலையில் கண்விழித்ததும் "ஆண்டவரே, கடந்த இரவு முழுவதும் என் உடலுக்கும் ஆன்மாவிற்கும் எவ்வித ஆபத்தும் வராமல் என்னைப் பாதுகாத்ததற்காக உமக்கு கோடானகோடி நன்றி. அமைதியான நித்திரையைக் கொடுத்ததற்கும், மற்றுமோர் புதிய நாளைக் கொடையாகக் கொடுத்ததற்காகவும் என் நெஞ்சார்ந்த நன்றியைப் படைக்கின்றேன்" என்று கூறத் தவறிவிடுகின்றனர். குருவானவர் இந்த உண்மையை ஆணித்தரமாக வலியுறுத்தினார். தாயுடனிருந்த சிறு குழந்தை மிகவும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த பிறகு தன் தாயைப் பார்த்து, "அம்மா, பாதர் உங்களைப் பற்றியா இப்பொழுது பேசிக்கொண்டிருக்கிறார்?" என்று கேட்டாள். மகள் கேட்ட கேள்வி, அத்தாயின் உள்ளத்தில் அம்புபோல் பாய்ந்தது. தாய் பதில் சொல்ல இயலாமல் வாயடைத்துப் போனாள். அன்று இரவு அத்தாய் உறங்கச் செல்லும்முன் படுக்கையருகில் முழந்தாள்படியிட்டு, "கர்த்தாவே, இவ்வளவு நாளாக கிறிஸ்தவ தாய்க்குரிய கடமைகளை நிறைவேற்றத் தவறிய எனது குற்றங்களுக்காக உண்மையாகவே மனம் வருந்தி உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறேன். வருங்காலத்தில் உமக்கு ஏற்படைய மகளாக வாழும் வரத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகின்றேன்" என்று ஜெபித்தாள். சிறுமி கேட்ட சிறிய கேள்வி தாயின் வாழ்வினையே மாற்றி அமைக்கும் வினாவாக மாறிற்று.

# தூய மரியன்னையின் துயரங்கள்





புரட்டாதி 15

## வியாகுல அன்னை

அன்னை மரியாவின் வியாகுலங்கள்பால் உள்ள பக்தி விவிலியத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது. இயேசுவை ஆலயத்தில் அர்ப்பணிக்க மரியா சென்றபோது சிமியோன் குழந்தையை கையில் ஏந்தி இறைவனைப் புகழ்ந்தார் (லூக். 2:29-32). அதன்பின் இறைவாக்காக "இதோ இக்குழந்தை இஸ்ராயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும், எழுச்சிக்கும் காரணமாக இருக்கும், எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப்பாயும்" (லூக். 2:34-35) என்றார். இந்த இறைவாக்கே அன்னையின் துயரங்களைப் பற்றி சிந்திக்க மக்களை அழைத்தது.

### திருச்சபைத் தந்தையர்களின் போதனைகளில்

திருச்சபையின் தந்தையர்கள் சிறப்பாக சிரியாவைச் சார்ந்த எபிரேம், மரியன்னையைப் பற்றிய தமது புலம்பல்களில், புனித அம்புரோஸ், அகுஸ்தீனார், பெர்னார்து போன்றவர்கள் இறைவனின் தாயின் துயரங்களைப் பற்றிய தியானங்களையும் எழுதி வைத்துள்ளனர்.

நான்காவது போனிபாஸ் என்னும் திருத்தந்தை உரோமையில் "எல்லா தெய்வங்களுக்கும் (Pantheon) என்று கட்டப்பட்டிருந்த கோவிலை ஒரு கிறிஸ்தவ ஆலயமாக மாற்றி மரியாவுக்கும் மற்ற அனைத்து புனிதர்களுக்கும் அர்ப்பணித்தார். தொடக்கத் திருச்சபையில் மறைசாட்சிகள் தான் புனிதர்களாக கருதப்பட்டு வந்தனர். எனவே இவ்வாலயம் 'மறைசாட்சிகளுக்கான தூய மரியா' என்று அழைக்கப்பட்டது. மறைசாட்சியத்தில் துன்பங்கள், துயரங்கள் அடங்கியுள்ளன. எனவே, அன்னை மரியா 'மறைசாட்சிகளின் அரசி" என அழைக்கப்பட்டார்.

### பக்தியின் தோற்றமும் வரலாறும்

பல நூற்றாண்டுகளாக நம்பிக்கையாளர்கள் குறிப்பாக, புனிதர்கள் மீட்பரின் திருப்பாடுகளைப் பற்றியும் மரியன்னை சிலுவை அடியில் நிலைகுலைந்து நின்றபோது அவருடைய உள்ளத்தைத் துன்ப வாள் ஊடுருவிப் பாய்ந்தது என்பதையும் நினைத்து உருகி வந்துள்ளனர்.

துயரங்களைப் பற்றிய பக்தி இதற்கு முன் பரவலாகக் காணப்பட்டாலும், 14ஆம் நூற்றாண்டில் மரியாவின் ஊழியர் என்னும் துயரங்களின் அன்னை துறவற சபையார் இப்பக்தியைப் பரப்பினர். துயரங்களின் அன்னையின் திருநாள் இத்துறவற சபையின் பாதுகாவலர் திருநாளாக இருந்து வந்தது. உண்மையிலேயே இப்பக்தி மரியாவின் ஊழியர் சபையின் தந்தையரையே சாரும். சிறப்பாக புனித பிலிப்பு பெனிஸ்ஸியஸ் இப்பக்தியைத் தோற்றுவித்தவர் ஆவார். அவர் 'விதவையான மரியாவின் ஆடை' ஒன்றை (உத்தரியம்) பொதுமக்களுக்கு அமைத்துக் கொடுத்தார். துயரங்களின் சகோதரர்கள் சபையிலிருந்து உருவெடுத்தது. இச்சபையின் பெயர் 'மரியாவின் துயரங்களின் சகோதரத்துவம்' ஆகும்.

17ஆம் நூற்றாண்டிலிருந்து மரியாவின் ஏழு துயரங்களை இரு நாட்களில் விழாவாகக் கொண்டாடும் பழக்கம் தொடங்கியது. புனித வெள்ளி ஒருநாள், புரட்டாதி மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மற்றொரு நாள். 1724ஆம் ஆண்டில் திருத்தந்தை 13ஆம் பெனடிக்ட் என்பவரால் முதல் திருநாள் அங்கீகரீக்கப்பட்டது (புனித வெள்ளி). பின் 1814 ஆம் ஆண்டில் திருந்தந்தை ஏழாம் பயஸ் தாம் சிறைப்பிடித்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதன் நினைவாக புரட்டாதி மாதம் 15ஆம் திகதி இவ்விழாவைத் தோற்றுவித்தார். அன்றிலிருந்து இந்த விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விரு நாட்களிலும் விழாவுக்கு சிறப்பளிப்பது "திருமகன் சிலுவையில் தொங்கியபோது, அருகில் கண்ணீர் பெருகிட துயருடன் நின்றாள் துயரமிகுத் தாய்மரி (Stabat Mater dolorosa) என்ற தொடர்பாடலாகும். இதை இயற்றியவர் தோடி நகர் ஜக்கோபோனி (1306) ஆவார்.

### திருச்சிலுவை மகிமையும் துயரங்களின் அன்னையும்

புரட்டாதி 14ம் திகதி நாம் கொண்டாடிடும் திருச்சிலுவையின் மகிமைவிழா இயேசு கிறிஸ்துவின் அரசத்துவத்திற்கு முதலிடம் கொடுத்தது. இன்றைய விழாவோ மனித இயல்பில் மரியா அனுபவித்த துயரங்களுக்கு (துன்பங்களுக்கு) முதலிடம் கொடுக்கிறது. கிறிஸ்துவினுடைய துன்பங்களை அன்னை மரியும் அனுபவித்து மீட்பின் திட்டத்தில் பங்கு பெறுகிறார்.

கிறிஸ்துவினுடைய சிலுவையின் மகிமை விழாவும், துயரங்களின் அன்னை விழாவும் ஒன்றோடொன்று தொடர்பும், வேறுபாடும் கொண்டுள்ளன. சிலுவையின் மகிமை விழாவில் சிலுவை மீட்பின் அடையாளமாகத் திகழ்கின்றது. இன்றைய விழாவோ கிறிஸ்துவினுடைய மனித இயல்பின் துன்பங்களைத் தியானிக்க அழைக்கின்றது. மரியா இயேசுவுடன் இணைந்து துன்புற்றது அழுத்தம் பெறுகிறது.

இவ்விரு விழாக்களுக்கும் ஆதாரமாக இருப்பவை இருவேறு ஆன்மீகங்கள் ஆகும். இவை பழங்கால ஆன்மீகத்தையும், இடைக்கால ஆன்மீகத்தையும் பிரதிபலிக்கின்றன. முந்தையது துன்பங்களை மகிழ்ச்சிக்குரியதாகவும் (Passio beata), பிந்தியது துன்பங்களைக் கசப்புக்குரியவையாகவும் (Passio amara) பார்க்கின்றன.

### இவ்விழா கற்பிக்கும் பாடம்

இலையுதிர் காலத்தில் இடம்பெறும் அன்னை மரியின் துயரங்கள் விழா ஆழ்ந்த பொருள் செறிவுடையதாகிறது. ஒருவர் எவ்வளவுக்கெவ்வளவு கிறிஸ்துவோடு இணைக்கப்படுகிறாரோ அவ்வளவுக்கு அவருடைய சிலுவையோடும் இணைந்திருக்க வேண்டும். இதுவே தியாக வாழ்வின் இயல்பாகும். எனவேதான் மரியா கிறிஸ்துவின் துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. எனவே நமது ஆன்மீகம் அன்பு செயல்களாலும், செபத்தாலும், கிறிஸ்தவ நற்பண்புகளாலும் மெருகூட்டப்பட்டிருந்தால் மட்டும் போதாது, கிறிஸ்துவினுடைய சிலுவைத் துன்பங்களோடும் இணைந்திருக்க வேண்டும்.

தாய்த்திருச்சபை மரியாவின் துயரங்களை ஏழாகப் பிரித்துள்ளது. சிமியோனின் இறைவாக்கு, எகிப்துக்குக் குழந்தையைத் தூக்கி ஓடிப்போனது, காணாமற்போன இயேசுவை...

15

# திருச்சிலுவை மகிமை விழா

நம் ஆண்டவராகிய இயேசுவின் திருவுடல் சிலுவையிலிருந்து இறக்கப்பட்டு கல்லறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அவர் தொங்கிய இந்த சிலுவையை ஒரு பள்ளத்தில் போட்டு கற்களாலும், மண்ணாலும் எதிரிகள் மூடினார்கள். சிலுவையில் உயிர் விட்ட இரட்சகரின் சீடர்கள் அதைக் கண்டுபிடித்து விடக் கூடாது என்பது எதிரிகளின் நோக்கம். 312 ஆம் ஆண்டில் மகா கொன்ஸ்தாந்தின் சர்க்கரவர்த்தி உரோமச் சிம்மாசனத்திற்காக மாக்சன்சியுஸ் என்பவரோடு போராடிக் கொண்டிருந்தான். தனக்கு வெற்றி கிடைக்க உதவிசெய்யும்படி கிறிஸ்தவர்களின் கடவுளை மன்றாடினான். அப்பொழுது வானத்தில் அழகிய சிலுவையுடன் வெற்றி பெருவாய் என்ற வசனங்களும் காணப்பட்டது. சிலுவைக் கொடியை பயன்படுத்தி போராடினார். 28.10.312இல் அவருக்கு வெற்றி கிடைத்தது. அதிலிருந்து சிலுவையை உரோமைக் கொடிகளிலும், வீரர்களின் கேடயங்களிலும் செதுக்கும்படி பேரரசர் கட்டளையிட்டார். 322ஆம் ஆண்டில் அவருடைய அன்னையான புனித எலேன் அம்மாள் ஜெருசலேமில் பரிசுத்த சிலுவையைக் கண்டுபிடித்தார்கள்.

### திருச்சிலுவை தரும் போதனை

என்னை பின்பற்ற விரும்பும் எவரும், தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னை பின்பற்றட்டும் (மத். 16:24). பேதுருவோ கிறிஸ்துவை மெசியாவாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால் அவர் சிலுவையைப் பற்றிப் பேசக்கூடாது என்ற கண்டிப்பான நிபந்தனையை விதிக்கின்றார். "ஆண்டவரே இது வேண்டாம். இப்படி உமக்கு நடக்கவே கூடாது" (மத். 16:22). சிலுவையை வேண்டாம் என்று கூறிய பேதுருவை கிறிஸ்து "சாத்தானே" என்று கூறி அவரிடம் "நீ கூறுவது மனிதருடைய கருத்து, கடவுளுடைய கருத்து அல்ல" (மத். 16:23) என்று திட்டவட்டமாகக் கூறுகிறார்.

ஆகவே சிலுவை மூலமே உலகை மீட்க முடியும், இதுவே கடவுளின் திட்டம். இதையே திருச்சிலுவைத் திருவிழா நமக்கு கூறுகிறது. இத்திட்டத்தையே இயேசு வாழ்ந்து காட்டினார். இறுதியில் சிலுவை இல்லாமல் எதுவும் இல்லை என்பதை தமது சாவு மூலம் காட்டினார். இத்திட்டத்தையே கிறிஸ்தவர்களும் பின்பற்ற வேண்டும் என்று பணிக்கின்றார்.

புனித பவுல் அடிகளார் இதுபற்றி கூறுகிறார். "கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கின்றேன்" இனி வாழ்பவன் நானல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" (கலா 2:19-20) கிறிஸ்துவோடு பவுல் ஒன்றித்து விட்டதை இங்கு கூறப்படுகிறது. கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்படாத எவரும், அவரின் உயிர்ப்பின் மகிமையில் பங்கு பெற முடியாது.

ஆகவே எமது வாழ்க்கையில், கிறிஸ்து நமது சக்திக்கு அப்பாற்பட்டத் துன்பங்களை ஒருபோதும் நம்மீது சுமத்தமாட்டார். கிறிஸ்துவோடு சேர்ந்து நமது சுமைகளை சுமக்கும் போது அவை எளிதானவையாக, இனிமையானவையாக, மாறிவிடும். துன்பத்தைக் கண்டு நாம் துவண்டு போகக்கூடாது.

சிலுவை தோல்வியின் சின்னம் அல்ல, சிலுவை மகிமையின் சின்னம். சிலுவையில் தான் உலகத்தின் மீட்பு உள்ளது என்பதே திருச்சிலுவை நமக்கு கற்றுத்தரும் பாடம்.



புரட்டாதி 14

"கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டி - ருக்கின்றேன்" இனி வாழ்பவன் நானல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" (கலா 2:19-20)

## 02 இயேசுகிறிஸ்துவின்...

ஆனால் இயேசு காட்டிய அன்பு முற்றிலும் வேறுபட்டது. பகைவர்களை, தன்னை வேதனைக்கு உள்ளாக்கியவர்களை தான் அதிகம் அன்பு செய்தார். ஆகவே எம்மை பகைப்பவர்கள், பிரச்சினைப்படுத்துபவர்கள், வேதனைக்கு உள்ளாக்குவோர் ஆகியோரை அன்பு செய்ய வேண்டும். அவர்களுக்காக செபிக்க வேண்டும். ஒவ்வொரு திருப்பலியும் நம்மை மாற்ற வேண்டும். தகுந்த முறையில் நற்கருணையை உட்கொள்ள வேண்டும். உயிருள்ள நற்கருணையை நாமும் உண்டு அவரது பிரசன்னத்தை உணரவேண்டும் எனக் கூறினார். திருப்பலியைத் தொடர்ந்து தூய நற்கருணை வீதி ஊர்வலம் எடுத்துச் செல்லப்பட்டது. அதன்போது அருட்பணி. கெமிலஸ் அடிகள் தனது இரண்டாவது மறையுரையில் மக்கள் நற்கருணை உட்கொள்ள இறைவார்த்தையை கேட்க, அதைப்பற்றிய விளக்கத்தை அறிய தாகம் கொண்டுள்ளனர் என்பதைப் பற்றி விளக்கினார். பின்பு நற்கருணை இறுதி ஆசீரும் வழங்கப்பட்டது.

**தகவல் : கிறிஸ்டினா அன்ரன், இராஜகிரிய.**

## 02 இரத்தினபுரி...

பணிபுரிந்தவராவார். அடிகளார் இரத்தினபுரி மறைமாவட்டத்தில் வயதில் குறைந்தவரும் பணியில் வளர்ந்தவருமாவார். சிறப்பாக மலையக மக்கள் மீது அன்பு, கருணை கொண்டவரும் மலையக மக்களுக்காக பணிபுரிய தம்மை அர்ப்பணித்துக் கொண்டவருமாவார். அந்த வகையில் இரத்தினபுரி பங்கின் சகோதர ஆலயமான கிங்கள கொட தோட்ட புனித வேளாங்கன்னி அன்னையின் ஆலய இறைமக்கள் பக்தியுடனும், பாசத்துடனும் அடிகளாரை வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

**தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி.**

## 02 இரத்தினபுரி மறைமாவட்டத்தின்...

ஒரு நாள் குடும்ப நல கருத்தரங்கு நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த கருத்தரங்கை நடாத்துவதற்கு யாழ்ப்பாண கிளரீஷியன் இல்ல அதிபரும், கிளரீஷியன் குடும்ப நல இயக்குனருமான அருட்பணி. சிங்கராயர் ஸ்டீபன் அடிகளார் கடந்த 2018. 09.18 அன்று இரத்தினபுரி பேராலய பங்கில் கேட்போர் கூடத்தில் "நிறைந்த கனிதரும் குடும்பம்" என்ற தலைப்பின் கீழ் மிக அர்த்தமுள்ள ஆழமான கருத்துக்களை மிக எளிமையான முறையில் மனதை தொடும் வகையில் விளங்கச் செய்தார்.

இந்த கருத்தரங்குகளை பெருந்தோட்டப் பகுதிகளின் பணியக இயக்குனர் அருட்பணி. றொமேஸ் அடிகளார் ஏற்பாடு செய்து தொடர்ந்து ஒவ்வொரு பங்கிலும் நெறிப்படுத்தலைக் கொண்டு வருகிறார். இரத்தினபுரி பங்கில் கலந்து கொண்ட பெற்றோர்களை படத்தில் காணலாம்.

**தகவல் : மேரி இருதயநாதன், மறையாசிரியர், பேராலயம், இரத்தினபுரி.**

## 02 கொழும்பு செக்கடித்தெரு...

இன மத பேதமின்றி மக்கள் கூட்டம் ஆலயத்தில் நிரம்பியது. அன்னையின் ஆசீர் பெற்று தங்கள் வேதனைகள், தேவைகள், விண்ணப்பங்களை கூறி அன்னையின் உதவிக்கரத்தையும் பாதுகாப்பையும் வேண்டி நிற்பதை காணமுடிந்தது. அன்றைய நிகழ்வுகளை படத்தில் காணலாம்.

**தகவல் : டிக்சன் பர்னாந்து**

## 01 கிறிஸ்தவ திருமணத்தின்...

செப வழிபாட்டின் போது தெரிவித்திருந்தார். கொழும்பு உயர்மறைமாவட்ட குடும்பப் பணியகத்தினருடன் மறைமாவட்ட பொருளாலரான அருட்பணி யூட் சமன்த்த அவர்கள் மற்றும் வசன்த்த ஐயசூரிய அவர்கள் இவ் வழிபாட்டுகளை ஒழுங்கு செய்திருந்தனர்.

மேலும் குடும் பணியகச் சேவையின் இயக்குனர் க்லோட் நோனிஸ் அவர்கள் உள்ளிட்ட பெரும்பாலான குருவானவர்களுடன் திரண்ட மக்கள் கூட்டத்தினர் இதில் பங்கு கொண்டனர். அருட்பணி ஒகஸ்டீன் வல்லுரன் அவர்களால் கடந்த வருடத்தில் நிகழ்த்திய செப வழிபாட்டு நிகழ்வில் கொழும்பு உயர்மறைமாவட்ட மேதகு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையால் இந்தியாவின் டிவைன் ஞானஒடுக்க நடுநிலையத்தின் ஓர் கிளையை இலங்கையில் ஸ்தாபிக்குமாறு அருட்பணி. வல்லூரான் அடிகளார் வேண்டுகோள் விடுத்தமையை நல்மனத்துடன் ஏற்றுக்கொண்ட அவருக்கு இம்முறை செப வழிபாட்டின்போது கர்தினால் அவர்களால் அந்நடுநிலையத்தை கட்டியெழுப்புவதற்கான காணி வழங்கப்பட்டது.

### விடுகதையின் விடைகள்

| | | |
|---|---|---|
| 1. மேகம் | 2. தண்ணீர் | 3. தேன்கூடு |
| 4. எறும்புகள் | 5. வானம் – விண்மீன் | 6. கடிகாரம் |
| 7. தராசுத் தட்டு | 8. தபால் | 9. மின்விசிறி |
| 10. இரயில் தண்டவாளம் | | |

## 14 தூய மரியன்னையின்...

மூன்று நாட்களாய் தேடியது, கல்வாரிக்கு சிலுவை சுமந்துசென்ற இயேசுவை வழியில் சந்தித்தது, மரியா சிலுவை அடியில் துயருடன் நின்றது, இயேசுவைச் சிலுவையிலிருந்து இறக்கி மடியில் வைத்திருந்தது. இறுதியாக இயேசுவை அடக்கம் செய்தது. இந்த ஏழு துயரங்கள் மட்டுமல்ல இன்னும் எவ்வளவோ துன்பங்களை அன்னை மரியா இறைமகிமைக்காகவும், இறைவனின் விருப்பத்திற்கு அமைந்து போகவும் அனுபவித்தார்.

நாம் கிறிஸ்துவில் வாழ்வுபெறும் பொருட்டு தமக்கு ஏற்பட்ட துயரங்களைக் கண்டு கலங்கிவிடாமல் அன்பு மகனுக்குத் தனது இலட்சிய பயணத்திலே முழு ஒத்துழைப்பு கொடுத்தார் அன்னை மரியா. இறை விருப்பத்திற்காக, இறைமகிமைக்காக அனைத்தையும் முழுமனதோடு ஏற்றுக்கொண்டார்.

நாமும் நமது வாழ்வில் எத்தனையோ துன்பங்களை ஒவ்வொரு நாளும் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். துன்பமும், துயரமும் நம்மை வாட்டும்போது இறைமகன் இயேசுவின் துன்பங்களையும், மரியாவின் துன்பங்களையும் சற்று சிந்தித்துப் பார்த்தால், நமது துன்பங்களை அவர்களின் துன்பங்களோடு ஒப்பிடும் போது அவை ஒன்றுமில்லையே என்றுதான் நாம் சொல்லமுடியும். எனவே நமக்கு நேரிடுகிற துன்பங்களை மேற்கொள்ள முயல்வோம். இத்துன்பங்களை இயேசு கிறிஸ்து, அன்னை மரியா இவர்களுடைய துன்பங்களோடு ஒன்றிணைத்து ஏற்றுக்கொள்வோம், வாழ்வோம்.

## XVIII அதிதூதர்கள்...

தனி நபர்களும், பங்குகளும், மறைமாவட்டங்களும் இவரைத் தங்களது பாதுகாவலராக தேர்ந்தெடுக்கிறார்கள். புனித 13 ஆம் சிங்கராயர் திருத்தந்தை ஒருநாள் பேசிக்கொண்டிருக்கையில் திடீரென மயங்கிவிழுந்தார். அவர் இறந்து போனார் என்று எல்லோரும் நினைத்தார்கள். எழுந்த பின் அருகிலிருந்தவர்களைப் பார்த்து "நான் மயக்கமுற்றுக் கிடக்கையில் வருங்காலத்தில் திருச்சபைக்கு வர இருந்த சங்கடங்களை கடவுள் எனக்குக் காட்டினார். திருச்சபை அழிந்து விடுமோ என்று அஞ்சி நடுங்கினேன். அப்பொழுது திடீரென புனித மிக்கேல் அதிதூதுர் தம் சகாக்களுடன் வந்து எதிரிகளை விரட்டியடித்து திருச்சபையைக் காத்தார்" என்று கூறி உடனே ஓர் அழகிய செபத்தை (அதிதூதரான புனித மிக்கேலே என்று தொடங்கும் செபத்தை) எழுதி அதை ஒவ்வொரு நாளும் திருப்பலிக்குப் பின் செபிக்கும்படி கட்டளையிட்டார். அந்த நல்ல வழக்கத்தை கைவிட்டதனாலேயோ திருச்சபைக்கு இத்தனை தொல்லைகள் வந்திருக்கின்றன என்று சிலர் கருதுகின்றனர்.

கபிரியேல் என்றால் "இறைவனின் பலம்" என்பது பொருள். கடவுளது வல்லமையையும் மகிமையையும் காட்டும் ஒவ்வொரு வேளையிலும் இவர் தூதராக அனுப்பப்படுகிறார். இரட்சகரது வருகையையும், அவர் வரும் காலத்தையும் இவர் முன்னறிவித்தார். இரட்சகரின் முன்னோடியின் பிறப்பையும் இவர் அறிவித்தார்.


வார்த்தையானவர் மாமிசமான போது இவர் பிரசன்னமாய் இருந்தார். இரட்சகரை ஆராதிக்க இடையர்களை அழைத்தவரும், புனித கபிரியேலே, ஒலிவ மரத்தோப்பில் இயேசுவைத் தேற்றியவரும் புனித கபிரியேல் என பிதாக்கள் கூறுகிறார்கள். இவர் ஆறுதலின் தூதர், இரக்கத்தின் தூதர், பழைய ஏற்பாட்டிலும் இவரைப் பலமுறை பார்க்கிறோம், முதலில் தானியேல் இறைவாக்கினருக்கு இவர் தோன்றினார். தானியேல் பாரசீக, கிரேக்க இராட்சியங்களைக் காட்சியில் கண்டபின் இவர் தோன்றினார். கபிரியேல் எவ்வளவு மாட்சியுடன் இருந்தார் என்றால் தானியேல் நடுங்கி முகம் குப்புற விழுந்தார். கிறிஸ்து அரசர் வர இத்தனை வாரங்கள் பிடிக்கும் என்று தானியேலுக்கு அறிவித்தவரும் இவரே.

ரபேல் என்னும் சொல்லுக்கு "இறைவன் குணமாக்கினார்" என்பது பொருள். தொபியாசுக்கு இவர் அசரியாஸ் என்னும் பெயருடன் தோன்றி அவருடைய மகனை அழைத்துச் சென்று பத்திரமாய்த் திரும்பக் கொண்டு வந்தார். அவருக்கு வரவேண்டிய பணத்தைப் பெற்றுக் கொடுத்தார். மீனின் வாயிலிருந்து இளைஞனைக் காத்தார். தொபியாஸ் திரும்ப கண்பார்வை பெறச் செய்தார். "இறைவனின் சிம்மாசனத்துக்கு முன் நிற்கும் ஏழு தூதர்களில் நான் ஒருவன், என் பெயர் ரபேல்" என்று அறிவித்தார்.

## XX பொதுநிலையினருக்கான..

இந் நிகழ்வின் தொடக்க விரிவுரையின் சுருக்க உரையை திரு அவையின் ஒழுக்கவியல் கோட்பாடுகள் என்னும் தலைப்பின் கீழ் கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தின் மெய்யியல்துறைக்கான இயக்குனர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் வழங்கினார். 165 பொது நிலையினர் இக் கற்கை நெறியில் இணைந்த கொள்ள விண்ணப்பித்து இத் தொடக்க நிகழ்வில் பிரசன்னமாகியிருந்தனர். மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர்கள் துறவிகள் எனப் பலரும் இந் நிகழ்விற்கு வருகை தந்திருந்தனர்.

**தகவல் : http://arudkadal.com/**



## மணமகள் தேவை

பதுளையில் பிறந்து, தற்போது கொழும்பில் வசிக்கும் கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்த, தமிழ், 33வயது 5' 9", சொந்த தொழில்புரியும் மகனுக்கு பெற்றோர் 30 வயதுக்குட்பட்ட தகுந்த மணமகளை தேடுகின்றனர்.

**தொடர்பு கொள்ளும் எண் 0761553889**

(N3102)

## 01 செபமாலை தாசர்...

அனில் கிரிஷாந்த அடிகளார், அருட்பணி. ஜெபதாசன் அடிகளார் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். அருட்பணி. ஜெயசீலன் அடிகள் 1969ம் ஆண்டு மார்கழி மாதம் 13ம் திகதி, யாழ் சில்லாலையில் திரு. பெஞ்சமின் அமிர்தநாதர், திருமதி. மேரி ஜேசப்பின் தம்பதிகளின் நான்காவது மகனான பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்திலும், இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியிலும் பயின்று, 1986ம் ஆண்டு செபமாலைத் தாசர் சபையில் தன்னை இணைத்துக் கொண்டார்.

இந்தியாவில் நவத்துறவும், மெய்யியலையும், கண்டி தேசிய குருமடத்தில் இறையியலையும் கற்று, மன்னார் முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகையினால் 1998 ஆவணி 20ம் திகதி கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தனது குருத்துவ பணியில் இறையியல் மெய்யியல் மாணவர்களின் பொறுப்பாளராகவும், நவத்துறவு ஆசிரியராகவும் பணியாற்றிய பின், திருச்சபையின் சட்டத்தில் முதுமானிப் படிப்புக்காக கனடா, ஒட்டாவ பல்கலைக்கழகத்திலும், புனித பவுல் பல்கலைக்கழகத்திலும் கற்று திருச்சபையின் சட்டங்களில் முதுமானிப் பட்டத்தைப் பெற்றார். இவரின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

**தகவல் : அருட்பணி. அனில் கிரிஷாந்த**

## 01 இவ்வுலகில்...

கிறிஸ்டீன் இம்மானுவேல் ஆண்டகை விசேட அழைப்பு விருந்தினராக இத்திருவிழாவில் கலந்துகொண்டதுடன் திருவிழாவிற்கு முதல் நாள் மாலை ஆராதனையையும் இனிதே நிறைவேற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து மாத்தறை நகரத்தினைச் சுற்றி தேவன்னையின் திருச்சுரூப பவனி இடம்பெற்றது. இத்திருவிழாவிற்கு இலங்கையில் பல பிரதேசங்களிலிருந்து இறைமக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

**தகவல் : ரீ, சுனில் பர்னாந்து மற்றும் ஹோஷான் பிரதீப்**

## 01 செத்சரண...

மறுநாள் அப்பாலையூற்று கிராம மக்கள் ஆடிஅம்பலம் பிரதேசத்திற்கு பயணம் மேற்கொண்டு அம் மக்களில் இல்லங்களில் தங்கினார்கள். அந்நாளில் அப்பங்கு மக்களுக்காக ஆடிஅம்பலம் புனித செபமாலை மாதா ஆலயத்தில் தமிழ் மொழிபேசும் மக்களுக்காக தமிழ் மொழியில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பங்குத் தந்தையான அருட்பணி ருவஞ் ரீட் லியனகே என்பவரோடு ஆடிஅம்பலம் மற்றும் பாலைக்குளி மக்கள் ஒன்றுசேர்ந்து புகைப்படம் எடுத்தனர்.

**தகவல் : ரீ, சுனில் பர்னாந்து மற்றும் ஹோஷான் பிரதீப்**

## XX மட்டக்களப்பு...

எமது மாணவர்களை உற்சாகப்படுத்திய அனைவருக்கும் கண்களுக்கு விருந்தாக அழகிய நடனங்களை வழங்கிய மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைநெறி மாணவியருக்கும் அவர்களை சிறப்பாக பயிற்றுவித்து மேடையேற்றிய திருமதி. ஷர்மிளா ரஞ்சித் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**Secretariat,**
**St. Joseph Vaz Theological Institute,**
**Diocese of Batticaloa**

### சிந்திக்க...

**வாழ்க்கை ஒரு நிமிடத்தில் மாறுமா என்று தெரியவில்லை ஆனால் ஒரு நிமிடத்தில் எடுக்கும் முடிவு நம் வாழ்க்கையே மாற்றிவிடும்.**

**துன்பங்களுக்கு இடையில் தான் வாய்ப்புக்கள் ஒளிந்திருக்கின்றன**

**உன் வெற்றிகளை எண்ணி பார்க்காதே உன் தோல்விகளை மட்டும் எண்ணிப்பார். வெற்றியை விட உயர்ந்தது தோல்விகள் தான்.**

# தெரிந்துக் கொள்வோமா?






**தேன்:** சக்தியைக் கொடுக்கும், இதயத்தைப் பலப்படுத்தும், இருமலைக் குணப்படுத்தும். இரத்த சிவப்பணுக்களை அதிகப்படுத்தும்.



**துளசி:** தினமும் துளசி சாப்பிட்டு வந்தால் இரத்தத்திலுள்ள விஷத்தன்மையை வெளியேற்றி சுத்தம் செய்யும்.



**வெண்ணெய் :** வாய் மற்றும் வயிற்றுப் புண்களை குணப்படுத்தும்.

**பச்சைப் பட்டாணி:** உடலுக்கு வலிமையையும், புத்துணர்ச்சியையும் தரும். குடல் புண்களை ஆற்றும். களைப்பை நீக்கும்.





**சிவப்பு முள்ளங்கி:** வயிற்றுப் புண்களை அகற்றும். மஞ்சக்காமாலையைத் தடுக்கும்.

**முட்டைக்கோஸ்:** புற்றுநோய் வராமல் தடுக்கும். தொற்று நோய்களை எதிர்க்கும். உடலுக்கு குளிர்ச்சியைத் தரும்.





**இளநீர்:** உடலிலுள்ள வெப்பத்தைத் தணிக்கும். கொலரா, சின்னம்மை, பெரியம்மை போன்ற நோய்களுக்கு சிறந்த மருந்து.

**வெந்தயம் :** இரத்தத்திலுள்ள சக்கரையையும் சிறுநீரில் உள்ள சக்கரையையும் குறைக்கும்.





**மிளகு:** இரத்தக் குழாய்களில் படியும் கொழுப்பைக் கரைக்கும்.

**காளான்:** பெண்களுக்கு உண்டாகும் மார்பகப் புற்றுநோயைத் தடுக்கும். இரத்தத்தை சுத்தமாக்கும்.





**வாழைத்தண்டு:** சிறுநீரகத்தில் தோன்றும், கற்களைக் கரைக்கும். உடல் பருமனைக் குறைக்கும்.

**பாகற்காய்:** சக்கரை வியாதியைக் கட்டுப்படுத்தும். வாய் நாற்றம் போக்கும். வயிற்றுப் பூச்சியை அகற்றும்.





**சோம்பு:** செரிமானத்தை துரிதப்படுத்தும்.

# கற்றாழை!



இயற்கை பொருள்களிலேயே கலப்படம் செய்யும் இக்காலத்தில், இயற்கை தன்மை மாறாமல் சில பொருள்கள் கிடைக்கின்றன. அவற்றில் ஒன்று தான், கற்றாழை. “அலோவேரா” என்று அழைக்கப்படும் கற்றாழையை, குமரி, கன்னி என்று கூறுகின்றனர், சித்தர்கள். காரணம் என்றும் இளமையோடு இருக்க உதவுவதால் தான் இதற்கு இப்பெயர்.

கற்றாழையில் சோற்றுக் கற்றாழை, சிறு கற்றாழை, பெரும் கற்றாழை, பேய்க் கற்றாழை, கருங் கற்றாழை, செங்கற்றாழை, ரயில் கற்றாழை என, பல வகை உண்டு. இதில், சோற்றுக் கற்றாழை மட்டுமே மருத்துவ குணங்களை உள்ளடக்கியது. இதை, “மருத்துவ உலகின் ராணி“ என்று அழைக்கின்றனர், சித்த மருத்துவர்கள். 17ஆம் நூற்றாண்டு முதலே அழகு பொருள் உற்பத்தியிலும், மருத்துவத்திலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது, கற்றாழை.

நன்கு வளர்ந்த கற்றாழையின் தண்டுகளை ஒடித்து, தோல் சீவினால் உள்ளே நுங்கு போல காணப்படும். இதை, சோறு என்று கூறுவர். இதில், உள்ள, “அலாயின்“ எனும் பொருளில், “ஆன்டி ஆக்சிடன்டு“கள் அதிகம் இருப்பதால், பல நோய்களுக்கு, மருந்தாக பயன்படுகிறது.

மேலும், சூரிய ஒளியுடன் கலந்து வரும் கடும் வெப்பத்தை ஏற்படுத்தும் காமா மற்றும் எக்ஸ்ரே கதிர் வீச்சுகளின் தீய விளைவுகளிலிருந்து சருமத்தை பாதுகாக்கிறது.

கற்றாழை சாறு, உடலுக்கு குளிர்ச்சி தரும் தீக்காயம், சவரம் செய்யும்போது ஏற்படும் கீறல்கள் மற்றும் வெட்டுக் காயங்களுக்கும் கற்றாழை கூழை பூசலாம். கற்றாழை சோற்றை முகத்தில் பூசி கழுவி வர, ஈரப்பதம் மாறாமல் இளமையுடன் இருக்கும் முகம். கற்றாழையின் கூழை வெய்யிலில் உலர்த்தி, தேங்காய் எண்ணெயுடன் காய்ச்சி தலைக்கு தேய்த்தோ அல்லது அதன் ஜெல்லை தலையில் தேய்த்து குளித்தாலோ, கூந்தல் நன்றாக வளரும்.

கற்றாழை சோற்றை சில நிமிடங்கள் கண்கள் மீது வைத்து வர, கண் எரிச்சல் குணமாகும் மூல நோய், வாய்வு தொல்லைக்கும் இது சிறந்த மருந்து.

சருமத்தில் உள்ள, “கொலாஜன்“ எனப்படும் கொழுப்பு திசுவை குறைக்கக் கூடிய புரோட்டீன், கற்றாழையில் அதிகம் காணப்படுவதால், முகத்தில் உள்ள சுருக்கம் மற்றும் வயோதிக தோற்றத்தை மாற்றுகிறது. முகத்தில் தோன்றும் கரும்புள்ளிகள், தழும்புகள் மற்றும் வெயில் பாதிப்பால் உலர்ந்த சருமம் போன்றவற்றுக்கு சிறிது கற்றாழைச் சாறை தினமும் பூசி வர, நல்ல குணம் கிடைக்கும்.

உஷ்ணத்தை உள்ளிழுத்து, குளிர்ச்சியை வெளிக்காட்டும் பண்பு கற்றாழைக்கு உள்ளது. இதனால் தான், கற்றாழையை வீட்டு வாசலில் கட்டி வைத்தால், கண் திருஷ்டி நீங்கும்!

# பிராய்லர் என்றாலே பிராப்ளம் தானாம்!



மிகவும் விரும்பி உண்ணப்படும் உணவாகவும் அதேநேரத்தில் மிகவும் அதிகமாக விமர்சிக்கப்படும் உணவாகவும் பிராய்லர் சிக்கன் இருக்கிறது.

பிராய்லர் கோழிகளை உண்ணக் கூடாது என்று தொடர்ந்து மருத்துவ உலகம் சார்பாக அறிவுறுத்தப்பட்டுக் கொண்டேதான் இருக்கிறது. அப்படி என்னதான் பிராய்லர் கோழியில் பிரச்சினை என்பதை சுருக்கமாகவும், அழுத்தமாகவும் இங்கே விவரிக்கிறார் இரைப்பை மற்றும் குடலியல் சிகிச்சை மருத்துவரான சுகுமார்.

ஆரோக்கியமான உணவுகள், காய்கறிகள் பழங்கள் யாரும் விரும்பி எடுத்துக் கொள்வதில்லை. இதனால் நாங்கள் இதை தொடர்ந்து அறிவுறுத்தி, ஆரோக்கியமான உணவுகள் எடுக்க சொல்லி அவர்களை வலியுறுத்தி வருகிறோம். தவறான உணவு பழக்கவழக்கங்களால் சாதாரண வாயு தொல்லை, அல்சர் முதல் செரிமான உறுப்புகளில் வருகிற புற்றுநோய் வரை காரணமாக இருக்கிறது. அவற்றில் பிராய்லர் கோழி உணவால் ஏற்படும் பிரச்சினை முக்கியமானது.

பிராய்லர் கோழிகள் அடிப்படையில் மரபணு மாற்றப்பட்ட கோழிகள். இயற்கையில் இருக்கிற கோழிகளுக்கென்று உள்ள தன்மையிலிருந்து மாறி, அதன் எடை அதிகரித்துக் காணப்படும். அதனை வளர்க்கத் தொடங்கி விற்கும் வரை அதற்கு கொடுக்கப்படும் உணவு முதல் அதற்கு செலுத்தப்படும் மருந்துகள் ஊசிகள் அனைத்தும் ரசாயனங்களாலானவை.

பிராய்லர் கோழிகளுக்கு சராசரியாக 12 வகையான ரசாயனங்கள் தரப்படுகின்றன. உணவுகள் மூலமும் நேரடியாக மருந்துகள் மற்றும் ஊசிகள் மூலம் செலுத்தப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் விற்பனைக்காக வளரும் கோழிகளுக்கு எந்த நோயும் வராமல் இருப்பதற்காகவும், 40 நாள்களிலேயே அதிக எடையுடன் வளர்வதற்காகவும் இதுபோன்ற மருந்துகள் செலுத்தப்படுகின்றன. இதனால் அந்த கோழிகள் குறைந்த நாளில் அதிக எடையுடனும் இருக்கின்றன. இதற்காக பிராய்லர் கோழிகளுக்கு ஹார்மோன் ஊசிகளும் போடப்படுகின்றன.

இவ்வாறு தயாராகும் பிராய்லர் கோழிகளை தொடர்ந்து உண்ணுகிற ஒருவர் நோய்வாய்ப்பட்டு சிகிச்சை மேற்கொள்ளும்போது அவருக்கு சில முக்கிய ஆன்டிபயாடிக் மருந்து வேலை செய்வதில்லை. இதற்கு காரணம் பிராய்லர் கோழிகளில் அளவுக்கு அதிகமான ஆன்டிபயாடிக் மருந்துகள் இருப்பதே காரணம்.

ஆண்களுக்கு உயிரணுக்கள் உற்பத்தி குறைந்து ஆண்மை குறைவு ஏற்பட காரணமாகிறது. பெண்களுக்கு கருமுட்டை பாதிப்படைந்து குழந்தையின்மை பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நோய்களை உண்டு பண்ணக்கூடிய கூறுகள் பிராய்லர் கோழியில் இருக்கின்றன என ஓர் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெண் குழந்தைகள் பிராய்லர் கோழி தொடர்ந்து உண்டு வந்தால் அதில் உள்ள ஹார்மோன் ரசாயனங்கள் அந்த பெண் குழந்தை சிறு வயதிலேயே பூப்படைய காரணமாக இருக்கிறது.

பிராய்லர் கோழி அதிக அளவு கொழுப்பு நிறைந்தவையாகவும் இருக்கிறது. இதனை உண்ணும்போது சிறுநீரகத்தில் அதிகமான கெட்ட கொழுப்பு படிகிறது. மேலும் கல்லீரல் வீக்க நோயும் ஏற்படுகிறது. அதோடு மஞ்சள் காமாலை நோயும் வருவதற்கு காரணமாக இருக்கிறது.

பிராய்லர் கோழிகளில் உள்ள கொழுப்பு இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படுத்தி இரத்த அழுத்த நோய் உண்டாவதற்கு காரணமாக இருக்கிறது.



பிராய்லர் கோழி உண்ணும் நூறுபேரில் 65 நபருக்கு இரத்த அழுத்தநோய் ஏற்படுகிறது.

குடல், இரைப்பை, கல்லீரல் சிறுநீரகம் போன்ற உறுப்புகளில் புற்றுநோய் வருவதற்கு முக்கிய காரணமாக பிராய்லர் இறைச்சி உள்ளது. வளரும் குழந்தைகள் பிராய்லர் கோழிகளை தொடர்ந்து உட்கொள்ளும்போது அவர்களுக்கு எலும்புச்சத்து குறைபாடு ஏற்படுகிறது. பிராய்லர் கோழிகள் தைராய்டு போன்ற நோய்களுக்கும் காரணமாக இருக்கிறது.

வெளியிடங்களில் அசைவ உணவு சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். குறிப்பாக, பிராய்லர் கோழி வகை உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. அதற்கு மாற்றாக ஆட்டுக்கறி, நாட்டுக்கோழி, மீன் போன்ற உணவுகளை எந்த அளவு இயற்கையானது, அது வளர்க்கப்படும் சூழல் போன்றவற்றைக் கவனத்தில் கொண்டு பார்த்து உண்ணலாம் என விளக்கம் தருகிறார் மருத்துவர்.




## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

**"திறந்த மனதுடன் வரவேற்கப்படும் கிறிஸ்துவின் அன்பு, நம்மை மாற்றுகிறது, நம்மை உருமாற்றுகிறது மற்றும், நம்மை அன்புகூரச் செய்கின்றது"**

**"நம் பொதுவான இல்லமாகிய இப்பூமியைப் பாதுகாப்பதற்கு, முக்கியமாக, வாழ்வின் அடிப்படை பொருளான தண்ணீர் பாதுகாக்கப்பட்டு, அது ஒவ்வொரு மனிதருக்கும் கிடைப்பதற்கு வழியமைக்கப்படும் நம் முயற்சிகளை ஆண்டவர் உறுதிப்படுத்துவாராக"**

**"உண்மை அமைதி என்பது கடவுளின் கொடை. அது, குணம்பெற்ற மற்றும் ஒப்புரவடைந்த இதயங்களிலிருந்து ஊற்றெடுத்து, உலகம் முழுமையையும் நோக்கி கரம் நீட்டி அரவணைக்கிறது"**

**"நம் சுதந்திரத்தை வழி நடத்தி, அழைத்துச் செல்லும் வலிமையாக, கடவுளின் அன்பு, மேலும் மேலும் மாறுவதாக"**

**"நீங்கள் உங்களையே இன்னும் அதிகமாய் பிறருக்கு அளிக்கும்போது, இன்னும் அதிகமாய் பெறுவீர்கள் மற்றும் மகிழ்வாய் இருப்பீர்கள். இதை நினைவில் கொள்ளுங்கள்"**

**"அமைதியை, உன் வாழ்வால், புன்சிரிப்பால், பிறரன்புச் சேவையால் மற்றவர்களுக்கு வழங்க, அதை, உங்களுடன் ஏந்திச் செல்லுங்கள்.**

**"இயேசு வழங்கும் மீட்பு, வெளிப்பூச்சாக பயன்படும் "ஒப்பனை" அல்ல, மாறாக, உள்ளூார உருவாக்கும் மாற்றம்"**

**"இயேசு வழங்கும் மீட்பைப் பெறுவதற்கு, ஒருவர், தான் பாவி என்பதை உணர்ந்து, தன்னையே குற்றம் சாட்டிக்கொள்ள வேண்டுமே தவிர, அடுத்தவரைக் குற்றம் சாட்டக்கூடாது"**

# அப்பாவி மக்களின் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும்

இரஷ்ய போர் விமான பாதுகாப்புடன், சிரியா அரசு துருப்புக்கள் இட்லிப் தீவிரவாத குழுக்களைத் தாக்க திட்டமிட்டிருப்பது, அப்பாவி மக்களின் உயிரிழப்புகளுக்கு வழி வகுக்கலாம் என்ற அச்சத்தை வெளியிட்டுள்ளது, சிரியா கத்தோலிக்க திருஅவை.

அரசுக்கு எதிரான இஸ்லாமிய தீவிரவாதிகளின் பிடியிலிருக்கும் கடைசி இடமான ஐனடடிைல் இரஷ்ய துருப்புக்களின் துணையுடன் சிரியா இராணுவத்தினர் தாக்குதலை நடத்தும்போது, பெரிய அளவில் பொதுமக்களும் பாதிக்கப்படுவர் என்ற அச்சத்தை வெளியிடும் தலத்திருஅவை அதிகாரிகள், பல ஆயிரக்கணக்கானோர் புலம்பெயரும் ஆபத்தையும் சுட்டிக்காட்டியுள்ளனர்

சிரியா அரசுத் துருப்புகளுக்கும், இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கும் இடையே இடம்பெற்றுவந்த போர், தற்போது, வெளிநாடுகளின் ஆதரவுடன் இடம்பெறும் மோதலாக உருவெடுத்துள்ளது என குற்றம் சாட்டும் செய்தி நிறுவனங்கள், சிரியாவின் பின்புலமாக இரஷ்யாவும், ஈரானும் நிற்பதையும், இஸ்லாமிய தீவிரவாதிகளின் ஆதரவாக, சவுதி அரேபியாவும், அதற்கு

## திருஅவை...



ஆதரவான வளைகுடா நாடுகள், மேற்கத்திய நாடுகள் ஆகியவை நிற்பதையும் சுட்டிக்காட்டுகின்றன.

சிரியாவின் வடபகுதியில் உள்ள சில குர்த் இனத்தவரின் பகுதிகள், மத்தியிலும் கிழக்கிலும் தென்பகுதியிலும் உள்ள சில பாலைவனப் பகுதிகள் தவிர ஏனைய பகுதிகள் அனைத்தும் தற்போது சிரியா அரசின் கட்டுப்பாட்டின் கீழேயே வந்துள்ளன. (Asia News )

# அர்ப்பணிக்கப்பட்ட கைம்பெண்கள் குழுமத்தைச் சந்தித்த திருத்தந்தை

**கைம்பெண் என்ற நிலையில், தங்கள் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணித்துள்ளவர்கள், மரணத்தையும் தாண்டி, இறைவனின் அன்பும், அவரது வாக்கு மாறா தன்மையும் நிலைத்திருக்கும் என்ற உண்மையை உலகிற்கு எடுத்துரைக்கின்றனர் – திருத்தந்தை பிரான்சிஸ்**



வாழ்க்கைத் துணையின் மரணம் என்ற துயர நிகழ்வின் வழியே, இறைவன் வழங்கும் ஒரு குறிப்பிட்ட அழைத்தலை உணர்ந்து, ஆண்டவருக்கு இன்னும் உகந்த பணியாற்ற உங்களையே அர்ப்பணித்துள்ளீர்கள் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன்னைச் சந்திக்க வந்திருந்த கைம்பெண்கள் குழுவிடம் கூறினார்.

"உயிர்ப்பின் நமதன்னை மற்றும் இறைவாக்கினர் அன்னா குழுமம்" என்ற பெயருடன் பணியாற்றிவரும் அர்ப்பணிக்கப்பட்ட கைம்பெண்கள் அமைப்பைச் சார்ந்த 60க்கும் அதிகமானோரை, புரட்டாதி 6, காலை, திருப்பீடத்தில் சந்தித்தத் திருத்தந்தை, கைம்பெண் என்ற நிலை, மிகக் கடினமானது என்றாலும், அந்நிலையை ஓர் அழைத்தலாக உணர்ந்துள்ள இக்குழுவினரை பாராட்டினார்.

கைம்பெண் என்ற நிலையில், தங்கள் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணித்துள்ளவர்கள், மரணத்தையும் தாண்டி, இறைவனின் அன்பும், அவரது வாக்கு மாறா தன்மையும் நிலைத்திருக்கும் என்ற உண்மையை உலகிற்கு எடுத்துரைக்கின்றனர் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இக்குழுவினரிடம் கூறினார்.

அர்ப்பணிக்கப்பட்ட கைம்பெண்கள் குழுமத்தைச் சேர்ந்தவர்கள், தங்கள் குழுமங்களில் வாழும் எடுத்துக்காட்டான வாழ்வாலும், சமுதாயத்தில் நலிந்தோருக்கு செய்யும் பணிகளாலும், இறைவனின் அன்பை, ஒவ்வொரு மனிதருக்கும் கொண்டு வருவதற்காக, திருத்தந்தை தன் நன்றியைக் கூறினார்.

## புனித கன்னி மரியாவின் பிறப்பு

இயேசுவின் பிறப்பு, புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு, புனித கன்னி மரியாவின் பிறப்பு ஆகிய மூன்று பிறப்புகள் மட்டுமே திருஅவையில் சிறப்பிக்கப்படுகின்றன. புனித கன்னி மரியாவின் பிறப்பைச் சிறப்பிக்கும் விழா பற்றி, ஆறாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பாடலிலிருந்து அறிய வருகிறோம். மரியா, இறைவனின் அன்னை என அறிவிக்கப்பட்ட, எபேசு பொதுச்சங்கத்திற்குப் பின்னர், சிரியா அல்லது பாலஸ்தீனாவில், குறிப்பாக சிரியாவில், ஆறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இவ்விழா ஆரம்பிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இவ்விழா, ஆரோக்கிய அன்னை விழாவாகவும், கோவாவில், "Monti Fest" அதாவது அறுவடைக்கு நன்றிகூறும் விழாவாகவும் சிறப்பிக்கப்படுகின்றது.

பிரான்ஸ் நாட்டில், திராட்சை இரசம் தயாரிப்பவர்கள், இவ்விழாவை, திராட்சை அறுவடையின் நம் அன்னை விழாவென அழைக்கின்றனர். அன்றைய நாளில் நல்ல திராட்சைப் பழங்கள் ஆலயங்களுக்குக் கொண்டு வரப்படும். திராட்சைப்பழக் கொத்துகள், அன்னை மரியா திருவுருவத்தில், கைகளில் தொங்கவிடப்படும் என்று சொல்லப்படுகின்றது.

நாம் கடவுளின் திட்டத்திற்கு இயைந்து நடப்பதற்கு, அன்னை மரியாவின் உதவியை நாடுவோம்

**– திருத்தந்தை**



# அதிதூதர்கள் கடவுளுக்கும் மனிதருக்கும் உள்ள உறவை கட்டியெழுப்புவர்



## புரட்டாதி 29

நம் கத்தோலிக்க திருச்சபையில் வானதூதர்களுக்கென்று ஒரு முக்கியத்துவம் உண்டு. வானதூதர் அல்லது "ஏஞ்சல்" என்கிற வார்த்தை "Aggelos" என்கிற கிரேக்க சொல்லிலிருந்து வருகின்றது. "Aggelos" என்கிற கிரேக்க வார்த்தைக்கு வானதூதர் அல்லது அனுப்பப்பட்டவர் என்கிற அர்த்தம் உண்டு. வானதூதர் அல்லது கடவுளின் தூதர் என்கிற வார்த்தை பழைய ஏற்பாட்டில் ஏறக்குறைய 108 முறையும் புதிய ஏற்பாட்டில் 165 முறையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வானதூதர்கள் என்பவர்கள் கடவுள் அல்ல. கடவுளைப்போல் தொடக்கமும் முடிவும் இல்லாதவர்கள் அல்ல. அவர்களுக்கு தொடக்கம் உண்டு. ஏனென்றால் அவர்கள் கடவுளால் படைக்கப்பட்டவர்கள். ஆனால் அவர்களுக்கு இறப்பு என்பது இல்லை. வானதூதர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் கடவுளால் படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்கிறது கிறிஸ்தவ மரபு. மனிதர்களைப்போல் அவர்களுக்கு ஊனுடல் இல்லாததால் அவர்கள் பலுகி பெருகவும் முடியாது. அவர்கள் ஆவிக்குரிய இயல்புடையதால் எலும்பும், சதையும் இருக்க முடியாது. (லூக். 24:39).

வானதூதர்கள் என்பவர்கள் "ஊழியம் புரியும் ஆவிகள்" என்கிறது விவிலியம் (எபி. 1:14). கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை கட்டி எழுப்புவதில் வானதூதர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களுடைய செய்தியை எடுத்து செல்பவர்களாகவும், அறிவிப்பவர்களாகவும், வழிநடத்துபவர்களாகவும் (மத். 1,2 / தி.ப. 8:26, 10:1-8), ஈகையாளர்களாகவும் (தொநூ. 21:17-20), பாதுகாவலராகவும் (தானி. 3,6), உறுதிப்படுத்துபவர்களாவும் (மத். 4:11), ஊக்கப்படுத்துபவர்களாகவும் விவிலியத்தின் வாயிலாக நாம் அறிகிறோம்.

ஒரு சில யூத மரபின்படி (விவிலியத்தின் அடிப்படையில் இல்லை) ஏழு அதிதூதர்கள் இருப்பதாக யூதர்கள் விசுவசிக்கின்றனர். அவர்களுடைய பெயர்கள் மிக்கேல், கபிரியேல், ரபேல், உரியேல், ரகுவேல், சாரக்கல், ரமியேல். இப்பெயர்கள் விவிலியத்தில் இடம்பெறாத ஏனோக் என்கிற புத்தகத்தில் காணப்படுகின்றன.

தாய் திருச்சபையானது விவிலியத்தில் காணப்படுகின்ற மிக்கேல், கபிரியேல் மற்றும் ரபேல் எனும் அதிதூதர்களின் திருவிழாவை புரட்டாதி மாதம் 29ம் திகதி கொண்டாடுகின்றது. முன்னதாக இம்மூவரின் விழாக்களும் வெவ்வேறு நாட்களில் கொண்டாடப்பட்டிருந்தாலும் திருத்தியமைக்கப்பட்டுள்ள புதிய வழிபாட்டு முறையில் இம்மூவரின் திருவிழாக்களும் ஒரே நாளில் கொண்டாடப்படும் படியாக அமைக்கப்பட்டுள்ளது. இம்மூவரும் வெவ்வேறு பணிகளுக்காக கடவுளால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதை விவிலியத்தின் வழியாக தெரிந்து கொள்கிறோம்.

மிக்கேல் என்றால் "இறைவனுக்கு இணை யார்?" என்பது பொருள். இச்சொற்களுடன், மோட்சத்தில் சாத்தானையும் அவனுடைய சகாக்களையும் எதிர்த்து நல்ல சம்மனசுகள் போரிட்டார்கள். முக்கியமான வானதூதர்களில் மிக்கேல் ஒருவர். சாத்தானை முறியடித்தவர்களின் தலைவர். அப்போஸ்தலர்களின் காலத்திலிருந்தே திருச்சபையின் பாதுகாவலராக வந்திக்கப்பட்டு வருகிறார்....

15

# மரியாவின் திருப்பெயர்



இவ்விழா திருச்சபையின் எல்லா இடங்களிலும், கொண்டாடப்படுவதாகத் தெரியவில்லை. திருப்பலி நூலில் இதற்கான சிறப்புத் திருப்பலி இல்லாவிட்டாலும், மரியன்னையின் திருப்பலி நூலில் மட்டுமே இதற்கான சிறப்பு சபை மன்றாட்டு கொடுக்கப்பட்டுள்ளது. மற்ற இரு மன்றாட்டுக்களும் அன்னை மரியாளின் பொது பகுதியிலிருந்து எடுக்கப்பட்டவை. இதற்கான சிறப்பு தொடக்கவுரையும், கன்னி மரியாவின் திருப்பலி நூலில் உள்ளது.

## இவ்விழாவின் பின்னணி

கி.பி 17ம் நூற்றாண்டில் துருக்கியர்கள் ஆஸ்திரியா நாட்டின் மீது படையெடுத்தார்கள். போர் மிகத் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது அந்நாட்டில் வாழ்ந்த கத்தோலிக்க மக்கள் போரில் எதிரிகள் தோற்றுப் போகும்படியும், கிறிஸ்தவ வீரர்கள் வெற்றிப் பெற்று ஆஸ்திரியா நாட்டுத் தலைநகர் வியன்னாலை அவர்கள் கையிலிருந்து விடுவிக்கவும் வேண்டுமென்று அன்னை மரியாவிடம் உருக்கமாக மன்றாடினர். அதேபோல் துருக்கியர் 1683ல் தோல்வி கண்டனர்.

இதற்கு நன்றியாக திருத்தந்தை 1ம் இன்னோசென்ட் "மரியாவின் தூய பெயர்" என்று விழா எடுத்து கொண்டாடும்படி பணித்தார். தொடக்க காலத்தில் இவ்விழா அன்னை மரியாவின் பிறப்பு விழாவுக்குப் பின்வரும், ஞாயிற்றுக்கிழமைகளில் கொண்டாடப்பட்டது. ஆனால் திருத்தந்தை புனித பத்தாம் பயஸ் புரட்டாதி மாதம் 12ம் திகதியில் தான் இவ்விழா இனிமேல் கொண்டாடப்படும் என்றார். இதன்படி அன்று முதல் இன்று வரை இந்நாளில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

## இவ்விழா கொண்டாடப்பட்டதின் நோக்கம்.

வழிபாட்டிலும், விவிலியத்திலும் ஒருவரின் பெயர் முக்கியமடைகிறது. ஏனெனில் மீட்பின் வரலாற்றில் முக்கியமானவர்களின் பெயர் அவர்களின் இயல்பையும், பணியையும் சுட்டிக்காட்டுகிறது.

மனித இனத்தில் முதல் பெற்றோர்கள், "ஆதாம்" அதாவது "மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டவர்" என்றும், "ஏவாள்" என்றும் அதாவது "வாழ்வனைத்திற்கும் தாய்" என்றும் அழைக்கப்பட்டார்கள். இவை அவர்களுடைய இயல்பைச் சுட்டிக்காட்டுகின்றன. (தொ.நூ 2:7 31-33)

இதேபோன்று நமது ஆண்டவர் இயேசுவின் பெயரும் அவருடைய பணிகளைச் சுட்டிக்காண்பிக்கிறது. "ஏனெனில் அவர் கருவுற்றிப்பார். அவருக்கு இயேசு எனப் பெயரிடுவீர். ஏனெனில் அவர் தம் மக்களை அவர்களுடைய பாவத்திலிருந்து மீட்பார்" (மத் 1:20-21) மற்றும் "உறுதியானது" என்ற பொருளுடைய "பேதுரு" என்ற பெயரை இயேசு சீமோனுக்கு அளித்தார். இது அவருடைய அசைக்க முடியாத திருச்சபையின் தலைமைத்துவத்தையும் பணியையும் குறிக்கிறது. (மத் 16:18-19)

"மரியா" என்ற பெயரும், ஏதோ தற்செயலாக அவருக்கு சூட்டப்பட்டதில்லை. இறைவனின் திட்டப்படி அளிக்கப்பட்டதாகும். "மரியா என்றால் "நண்பர்" என்றும், "முதல்வி", "தலைவி" என்றும் வழிபாட்டில் விளக்கம் பெறுகிறது. மறையுரையாளர்களுக்கும், எழுத்தாளர்களும் மிக உயர்ந்த பொருள் செறிவுடைய பொருளை இப்பெயருக்குக் கொடுக்கிறார்கள். புனித பீட்டர் கிறிஸ்லோகு "சமூகத்தின் நட்சத்திரம்" என்று இப்பெயருக்குப் பொருள் தருகின்றார். இப்பொருளில் தான் "மரியா" என்ற பெயர் திருச்சபையின் திருப்புகழ் மாலையில் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே "மாரிஸ் ஸ்டெல்லா" என்ற பாடல் இந்தப் பொருளில் தான் பாடப்படுகிறது.

## குடும்ப விழா

இன்றைய விழா மாபெரும் இறைக்குடும்பத்தில் ஒரு குடும்ப விழாவாகிறது. மரியா கடவுளின் தாய் மட்டுமல்ல, கிறிஸ்தவர்கள் அனைவரின் தாயுமானவள். சில நாள்களுக்கு முன்தான் மரியாவின் பிறப்பு விழாவைக் கொண்டாடினோம். இப்போது அவளின் பெயரின் விழாக் கொண்டாடுவது அவரது பிறப்போடு ஒட்டி வருகிறது. பிறந்தவுடன் பெயரிடுவது ஒரு இயல்பே.

## நன்றி விழா

இந்நாள் நன்றி விழாவாகும். ஏனெனில் வியன்னா நகர், துருக்கியர்களின் கையிலிருந்து அன்னை மரியின் பரிந்துரையால் விடுவிக்கப்பட்டதை நினைத்து இன்று நன்றி கூறப்படுகிறது. ஆனால் நாம் துருக்கியர்களை உருவமாகப் பார்த்து சாத்தானின் வலையிலிருந்து நமது திருமுழுக்கு நாளில் நாம் விடுவிக்கப்பட்டதை நினைத்து நன்றி விழாவாக கொண்டாடினர்.

## பக்தி முயற்சிகளில் மரியாவின் திருப்பெயர்

- மரியன்னையின் பக்தர் புனித ஜெர்மானுஸ் எழுப்பிய மன்றாட்டு நமது பக்திக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும். "எனது வாழ்வின் இறுதி வார்த்தையாக மரியன்னையின் பெயரை உச்சரிக்கும் வரம்வேண்டும்".
- புனித பிரிட்ஜட்க்கு மரியன்னை கொடுத்த காட்சியில் அலகையின் கூட்டம் மரியாவின் பெயரை யாராகிலும் உச்சரிக்கக் கேட்டவுடனே, மிரண்டு ஓடுகின்றன என்றும், வானதூதர்கள் விரைந்து ஓடி வந்து உதவுகிறார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.
- புனித அம்புறோஸ் ஒருபடி மேலே சென்று "மரியாவின் இனிய பெயர், எனது உள்ளத்தின் ஆழத்திலே மீட்பின் தைலமாக இறங்குவதாக என்று மன்றாடியுள்ளார்.

## மரியாவின் திருப்பெயர் பற்றி பெர்னாதின் விளக்கம்.

புனித பெர்னாந்து பின்வருமாறு எழுதுகிறார். "நற்செய்தியாளர் கூறுவதுபோல் கன்னிகையின் பெயர் மரியா ஆகும்" (லூக் 1:27) இப்பெயர் பற்றிய சில விளக்கங்கள்.

- இப்பெயரை மொழிபெயர்ப்போமானால் இதற்கு அலைகளின் ஒளிமீன் என்று பொருள். அன்னை மரியாவை விண்மீனோடு ஒப்பிடுவது மிகவும் பொருந்தும். ஏனெனில் ஒரு விண்மீன் தனது ஒளியில் குன்றாமல் பிரகாசிப்பதுபோல் கன்னிமரியும், ஒரு மகனைப் பெற்றெடுத்தாலும், தனது கன்னிமையில் எள்ளளவும் குறைவில்லை. ஒளியைக் கொடுப்பதால், தனது பிரகாசத்தில் விண்மீன் குறைவுபடுவதில்லை. அதுபோல் அன்னை மரியாவின் மகன் அவருடைய கன்னிமைக்கு எந்தவித பங்கமும் ஏற்படுத்தவில்லை.

## புரட்டாதி 12


யாக்கோபு குலத்தில் உதித்த மகிமைமிகு விண்மீன் மரியா, அதன் கதிர்கள் உலகம் முழுவதையும் ஒளிர்விக்கின்றன. இவ்வொளி மண்ணுலகம் முழுவதையும் ஒளிரச் செய்கின்றது. அங்கிருந்து அனைவரையும் வழிநடத்துகின்றார். இவ்வுலகின் நெருக்கடிகளிலும், புயல் மத்தியிலும், அகப்பட்டு உழலும் நீங்கள் அந்த சுடர்விடும் விண்மீனாகிய மரியாவை நோக்கிப் பார்க்க மறவாதீர்கள். அப்போது நீங்கள் அழிவுறமாட்டீர்கள் சோதனை புயல் உங்களைத் தாக்கும்போது நீங்கள் மரியா என்றும் விண்மீனை நோக்கி கூவி அழையுங்கள். கர்வம், பகைமை, உயர்வு, வெறுப்பு, பேராசை போன்றவைகளால் நீங்கள் அலைக்கழிக்கப்படும்போது மரியா என்றும் விண்மீனை நாடுங்கள், கோபம், பொறாமை ஆபாசங்களால் கவர்ச்சி இவற்றில் அகப்பட்டு உங்கள் வாழ்க்கைக்காக என்றும் படகு தத்தளிக்கும் போது மரியா என்றும் விண்மீனை நோக்கி பார்த்து மன்றாடுங்கள்.

## அருள் நிறைந்த மரியே நின்னடி பணிந்தேன்



அன்பினில் உதித்த இனிய நல் இயேசுவே
கருவினில் தாங்கிய கன்னிமேரியே
அருள் தனைப் பொழியும் அமலியே!
நாளும்
உளம் நினைந்து வேண்டுவோர் வாழ்வை
வளம் நிறைப் பொழிந்து மலரச்
செய்வாய்!
மானிடரை மீட்க மண்ணில் மனுவுருவான
இறையினை பரிவுடன் உவந்து
அளித்திடும் தாயே! வருந்துவோர்
குறையை நீக்கிடும் நிர்மலனின்
பேழையே!
மண்ணோர் பாவத்தை மன்னிக்க நாளும்
விண்ணோர் அரசியே கன்னலின் சுவையே
அஞ்சலி புரிந்து அண்டிடும் வறியோர்
சஞ்சலம் போக்கும் இன்பச்சுடரே!
வேளை மாநகரிலிருந்த இராணியே!
வேண்டிடும் ஏழைக்கு வேண்டிய
வரந்தனை
உன் திருமகனின் உளம் மகிழ்ந்தே
தாரும்
நாளும் துதித்து மகிழ்ந்துப் பணிந்தேன்

# விவிலிய வாசிப்பு




## விவிலியம் வாசிப்பது எப்படி?

விவிலிய அறிவு (Biblical Literacy) இன்று கத்தோலிக்கரிடையே வளர்ந்து வருகின்றது. விவிலியத்தை வாசிக்க வேண்டும், புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் பொதுநிலை விசுவாசிகளிடையே ஏற்பட்டுள்ளது. இதை இன்னும் வளர்த்தெடுப்பதும், விவிலியத்தைப் பற்றிய புரிந்துணர்வை ஆழப்படுத்தவும் இன்றைய காலத்தில் அதிமுக்கிய தேவையாக உள்ளது.

காரணம் இன்று முளைத்துவரும் அடிப்படைவாதக் குழுக்களின் தோற்றம், அதன் வளர்ச்சியும் கத்தோலிக்கருக்கு பெரும் சுமையாக உள்ளது. அவர்களின் அர்த்தமில்லாத கேள்விகளுக்கு பதில் கூற விவிலியத்தை வாசிப்பது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது இக்காலகட்டத்தில். ஆகவே விவிலியத்தை எப்படியெல்லாம் வாசிக்கலாம் என்று பார்ப்போம்.

### 1. விவிலியம் வாசிப்பது என்றால் என்ன?

- ❖ விவிலியத்தில் என்னதான் இருக்கின்றது என்று அறியும் ஆசையால் வாசிப்பது.
- ❖ இறைவனைப் பற்றி அதிகமாக அறிந்துகொள்ள விவிலியம் ஒரு உன்னதமான வழி என்பதால் அதற்காக வாசிப்பது. விவிலியம் தருகின்ற செய்திகளைப் புரிந்து கொள்ள விவிலியம் சொல்லவரும் அர்த்தங்களைப் புரிந்து கொள்ள, அது பயன்படுத்தும் வார்த்தைகள், சொற்றொடர்கள், உருவகங்கள், உவமைகள், பழைய, புதிய ஏற்பாட்டுக்களின் பழக்க வழக்கங்கள், கலாச்சார, சமய, அரசியல் சூழமைவுகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள தெரிந்து கொள்ள விவிலியம் வாசிப்பது.
- ❖ இறைவன் நம்மோடு பேசவும், நாம் அவரோடு உரையாடவும், ஆழ்ந்த இறை - மனித உறவை வளர்த்துக் கொள்ளவும், செபிக்கவும், தியானிக்கவும் விவிலியம் வாசிப்பது.
- ❖ என்னை, எனது வாழ்வை இன்னும் சிறப்பானதாக, தூயதாக இறைவனுக்கும் மனிதர்களுக்கும் ஏற்புடையதாக மாற்றுவதற்கும், என் வாழ்க்கைப் பாதையில் ஒளியாக, விளக்காக, விவிலியச் சிந்தனைகள் அமைக்கவும் வாசிப்பது.
- ❖ குழுமமாக, இறைச்சமூகமாக, திருச்சபையாக நாம் கூடி வருகின்ற போது எப்படி இறைவார்த்தையை வாசிப்பது, புரிந்து கொண்டு இன்று உள்ள சூழலில் குழுமமாக நாம் எப்படி மாற்றத்தை நோக்கிப் போகலாம் என்ற நோக்கோடு விவிலியம் வாசிப்பது.

எனவே விவிலியம் வாசிக்க பல்வேறு நோக்கங்களும், எதிர்பார்ப்புக்களும் இருப்பதுபோன்று விவிலியம் வாசிக்கும் முறைகளும் பலதரப்பட்டன. இவற்றை நாம் அடுத்த இதழில் தொடர்வோம்.

## மட்டக்களப்பு மறைமாவட்ட புனித ஜோசப்வாஸ் இறையியல் கல்லூரியினது உத்தியோகபூர்வ அங்குராப்பணம்.




எமது மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் கிறிஸ்தவ கற்கை நெறிக்கென ஆரம்பிக்கப்பட்டுள்ள புனித ஜோசப்வாஸ் இறையியல் கல்லூரியின் உத்தியோகபூர்வ அங்குராப்பண நிகழ்வானது, ஒரு சிறப்பான தினத்தில் அதாவது மரியன்னையின் பிறப்பு விழாவாகிய 08.09.2018 அன்று காலை 09.00 மணிக்கு ஆரம்பமானது. மறைமாவட்ட ஆயர் மேதகு. ஜோசப் பொன்னையா ஆண்டகையின் வழிநடத்துதலின் கீழ் கல்லூரியின் இயக்குனர் ஜோர்ஜ் ஜீவராஜ் அடிகளாரின் ஒருங்கிணைப்பில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. முக்கிய நிகழ்வுகளாக கல்லூரியின் கட்டட பெயர்ப்பலகை திரை நீக்கம் செய்தல், வகுப்பறைகள், அலுவலகம், நூலகம், கேட்போர்கூடம் ஆகியவற்றை திறந்து வைத்தல் முதலாவதாக இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து இறையியல் கல்லூரியில் முதலாவது குறுங்கால விரிவுரைகளை பூர்த்தி செய்த பயிற்றுனர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் மற்றும் சில வாழ்த்துச் செய்திகளும் இடம் பெற்றன. பிரதான அதீதியாக கொழும்பு உயர்மறைமாவட்ட புனித ஜோசப்வாஸ் இறையியல் கல்லூரி இயக்குனர் அருட்கலாநிதி தயா செல்ட்டன் அடிகளார் கலந்து சிறப்பித்தார். சிறப்பு அதீதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட செயலாளருமான திரு. மாணிக்கம் உதயகுமார் அவர்களும், கிழக்கு பல்கலைக்கழக தாவரவியல் பீட சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி. சந்திரா அவர்களும், கிழக்குப்பிராந்திய இராணுவ கட்டளைத்தளபதியின் சார்பில் பிறிகேடியர் ஷாந்த ஹேவவிதாரன அவர்களும், மற்றும் மறைமாவட்ட குருமுதல்வர், மறைக்கோட்ட முதல்வர், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் கல்லூரியின் பயிறுனர்கள், கலந்து சிறப்பித்தார்கள். வழங்கப்பட்ட அனைத்து உரைகளிலும் அனைத்து அதீதிகளும் இறையியல் விசுவாசம், மனித மதிப்பீடுகள், ஒழுக்கம் போன்ற விடயங்களில் கல்லூரியின் பயிற்றுனர்கள் எதிர்காலத்தில் காட்ட வேண்டிய ஈடுபாடு பற்றி ஆழமாக எடுத்துரைத்தனர். தற்போது இறையியல் கல்லூரியின் மாணவர் தொகையானது 170 ஆக இருக்கும் நிலையில் இவர்கள் 2019ம் ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ள டிப்ளோமா பட்டப்படிப்பு கற்கை நெறிக்கு உள்வாங்கப்படுவர். மட்டக்களப்பு மறைமாவட்ட வரலாற்று சிறப்பு மிக்க இந் நிகழ்வின் வெற்றிக்கு வழிசமைத்த அனைவருக்கும் நிகழ்வில் பங்கேற்று....

15

## பொதுநிலையினருக்கான இறையியல் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



கத்தோலிக்க திருஅவையின் பொதுநிலையினரை இறையியல் நம்பிக்கை உண்மையில் வலுப்படுத்தும் நோக்கோடு; மன்னார் ஆயர் பேரருட் கலாநிதி பி.ல.இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையின் பேரார்வத்தினால் மன்னார் மறைமாவட்டத்தில் பொதுநிலையினருக்கான இறையியல் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 01.09.2018 சனிக்கிழமை இக்கற்கை நெறி மரபியல் ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்று காலை நடைபெற்ற மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் நடைபெற்ற திருவழிபாட்டைத் தொடர்ந்து திருஅவையியின் சட்ட மரபு நியமங்களுக்கொப்ப மன்னார் மறைமாவட்ட தூய யோசேவ்வாஸ் இறையியல் கல்வியகத்தின் இயக்குனராக அருட்பணி.ப.பி.டெஸ்மன் குலாஸ் அடிகளாரை மன்னார் ஆயர் பேரருட் கலாநிதி பி.ல.இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை நியமித்து பணிப்பொறுப்பை ஒப்படைத்தார். மன்னார் மறைமாவட்ட தூய யோசேவ்வாஸ் இறையியல் கல்வியகத்தின் இயக்குனராக அருட்பணி.ப.பி.டெஸ்மன் குலாஸ் அடிகள் இறைமக்கள் முன்பாக தனது பணி நம்பிக்கை பொறுப்பு அறிக்கையை வாசித்து பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து மன்னார் தூய செபஸ்தியார் பேராலயக் கேட்போர் கூடத்தில் இக்கற்கை நெறிக்கான ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வுக்கு உரோமை திருத்தந்தையின் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டுள்ள கொழும்பு தூய யோசேவ்வாஸ் இறையியல் கல்வியத்தின் இயக்குனர் அருட்பணி. கலாநிதி தயா செல்ரன் அடிகளார், கொழும்பு தூய யோசேவ்வாஸ் இறையியல் கல்வியத்தின் தமிழ் பகுதியின் இயக்குனர் அருட்பணி றெஜினோல்ட் லூசியன், யாழ்ப்பாணம் தூய யோசேவ்வாஸ் இறையியல் கல்வியத்தின் இயக்குனர் அருட்பணி இ.ம.ரவிச்சந்திரன் அடிகளார், கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்தின் மெய்யியல் துறைக்கான இயக்குனர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் கொழும்புத்துறை தூய சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்பணி மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார் மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியத்தின் தலைவர் சட்டத்தரணி திரு.அன்ரன் புனிதநாயகம், மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவைத் தலைவர் திரு. போஸ் ஆகியோர் வருகை தந்திருந்தனர்...

15




Pope Francis, 1st Jesuit Pope

நீங்கள் இயேசுவை அன்புசெய்கிறீர்களா?

SOCIETY OF JESUS IHS 1540

நீங்கள் இயேசுவுக்கு உதவ விரும்புகிறீர்களா?



St. Ignatius of Loyola, Founder

இயேசு சபையுடன் இணைந்து இயேசுக்காகப் பணியாற்ற விரும்புகிறீர்களா?

நீங்கள்:

- இயேசு சபை குருவாக அல்லது சகோதரராக மக்களுக்காக உங்களை அர்பணித்து சேவையாற்றவும் உங்கள் வாழ்வின் நோக்கத்தை அறிந்துகொள்ளவும்,
- க.பொ.த உயர் தரம் (A/L) பூர்த்தி செய்தவராக அல்லது பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்த்து நிற்பவராயின்,

எங்களது உலகளாவிய சேவைகளை பற்றி மேலதிகமாக அறிந்துகொள்வதற்கு,.......

CONTACT

Rev. Fr. Aniston Morais, S.J.

Pre-Novitiate Director

Email : anistonsj@gmail.com

TP : 0773605554

(NG7069)

# புனித வியாகுல அன்னை ஆலயத்தின் 198வது வருடாந்த திருவிழா - 2018



## புதுச்செட்டித்தெரு கொழும்பு - 13

### கொடியேற்றம் 19.09.2018 (புதன்கிழமை) மாலை 6.00 மணிக்கு

**நவநாட்கள் தினமும் மாலை 6.00 மணிக்கு**

- ✶ 19.09.2018 - தமிழ்
- ✶ 20.09.2018 - சிங்களம்
- ✶ 21.09.2018 - தமிழ்
- ✶ 22.09.2018 - சிங்களம்
- ✶ 23.09.2018 - தமிழ்
- ✶ 24.09.2018 - தமிழ்
- ✶ 25.09.2018 - தமிழ்
- ✶ 26.09.2018 - தமிழ்
- ✶ 27.09.2018 - சிங்களம்
- ✶ 28.09.2018 - தமிழ்

**மாலை ஆராதனை 29.09.2018 (சனிக்கிழமை)**
**மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்.**

**மறையுரை : அருட்பணி. செல்வம் அடிகள்**
(தூத்துக்குடி , இந்தியா)


**திருவிழாத் திருப்பலிகள் 30.09.2018**

- ✶ காலை 05.30 மணி - தமிழ்
- ✶ காலை 06.45 மணி - தமிழ்
- ✶ **காலை 08.00 மணி – திருவிழா பாடற் திருப்பலி – தமிழ்**
- ✶ **காலை 09.45 மணி – திருவிழா பாடற் திருப்பலி – சிங்களம்**
- ✶ காலை 11.30 மணி - தமிழ்
- ✶ **மாலை 04.00 மணி – திருவிழா பாடற் திருப்பலி – ஆங்கிலம்**
- ✶ மாலை 05.15 மணி - தமிழ்

**30.09.2018 மாலை 6.00 மணிக்கு**
**திருச்சுரூபப்பவனி ஆரம்பமாகும்.**
பங்குத்தந்தை பங்குமேய்ப்புப்பணி மன்றம், பங்குமக்கள்

"அன்னையின் பரிந்துரையைப் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்."

(N3081)



அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்



## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ).
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்



# திருமண சேவைகள்

- ✦ திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- ✦ திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |


உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.


## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை,
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com


பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

**வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்**




| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |



| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |




அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்